ஆசிரியவுரை

# நீரே நிற்காத ஏரிகள்; வண்டல்படியாத தரை வண்டி மாடு இல்லாத விவசாயிகள்! 500 ஏரிகளில் தூர்வாரி விட்டதாக அரசு ஊளறுகிறது!



ஓர் ஏரியில் 6 (அ) 7 மாதம் தண்ணீர் அசைந்தாடிக் கொண்டு நிற்கும். அப்படி நிற்கும் போது, அடியில் படியும் கக்கம் (அ) அழுக்குத்தான் வண்டல் என்பது.

கடந்த பல ஆண்டுகளாக ஏரிகளில் நீர் தேங்கவில்லை. எனவே எந்த ஏரியிலும் வண்டல் இல்லை. பழைய வண்டல் தூளாக நொறுங்கிப் போயிருக்கும். அதை வெட்டி அள்ள வண்டி மாடு வைத்திருக்கிற விவசாயிகள் இப்போது இல்லை.

தூர் வாருவது என்றால் என்ன?

ஏரியிலிருந்து 10 மைல் தொலைவில் ஆற்று வாய்க்கால் தலைப்பு இருக்கும். அந்த ஆற்றின் குறுக்கே மணலால் ஒரு பெரிய தடுப்பு கட்டுவார்கள். தென் மேற்குப் பருவமழை நீர் வர, 10 மைல் நீளமுள்ள வாய்க்காலை ஊர்கூடித் தூர் வாருவார்கள். பெரம்பலூர் மாவட்டம், சின்னாற்றில் இப்படிப்பட்ட வழக்கம் இருந்தது. அந்த வாய்க்கால் சில தனியார் நிலங்களின் ஊடே ஓடும். அந்த ஏற்பாட்டுக்கு அரசு அனுமதி உண்டு.

இப்போது பல ஆண்டுகளாக, அந்த வரத்துவாய்க்கால் இல்லாத வடக்கலூர் அகரம் ஏரி வறண்டு கிடக்கிறது.

வெள்ளாற்றின் தென்கரையில் இருந்து ஒகளூர், அத்தியூர்காரர்கள் தங்கள் ஊர் ஏரிகளுக்கு நீர்வரும் வாய்க்காலைத் தூர்வாருவார்கள். வடகிழக்குப் பருவ மழை, தென்மேற்குப் பருவ மழைக்காலங்களில் அத்தியூர், ஒகளூர், வடக்கலூர் ஏரிகள் நிரம்பி, வடக்கலூர் ஏரி கலங்கு வழியாக அகரம் ஏரிக்கும் நீர் வரும். இதுதான் குடிமராமத்து முறை.

ஏரிகளை மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை அரசுப் பொதுப் பணித்துறை ஆழப்படுத்தியது.

ஏரி தரைப் பரப்பு முழுவதிலும், 3 அடிதொலைவுக்கு இடைவெளிவிட்டு மண்ணை வாரச் சொல்வார்கள். நீண்ட சதுர வடிவில் தனித் தனிப் பள்ளங்களை அமைப்பார்கள். எத்தனை கன அடி மண் ஒரு குழியிலிருந்து எடுக்கப்பட்டது என்பதை நாடா வைத்து அளக்க வசதியாக, ஒவ்வொரு நீண்ட சதுரக் குழியிலும் 2 அடி x 1.5 அடி அளவிலும் மண் முட்டுவிட்டிருப்பார்கள்.

பொதுப் பணித்துறைக் கண்காணிப்பாளர் ஒவ்வொரு ஏரியையும் இப்படியே அளந்து, எத்தனை கன அடி மண் தோண்டப்பட்டுள்ளது - எவ்வளவு ஊதியம் என்பதை, ஒப்பந்தக்காரர்கள் மூலம் அரசு உறுதி செய்து, தரும்.

இதில் வெட்டப்பட்ட மண் முழுவதும் ஏரியின் கரையில் நெடுகக் கொட்டியிருக்கிறார்களப எனவும்; மரத்தடிகளில்-மா, புளி, இலுப்பை, பனை மரங்களின் அடி பாகத்தில் கொட்டியிருக்கிறார்களா என்றும், மணியம், நாட்டாண்மை முன்னிலையில் அதிகாரிகள் பார்வையிடுவார்கள்.


சுவடி : 41

ஏடு : 1

சூலை 2017

*

ஆசிரியர்

**வே.ஆனைமுத்து**

*

ஆசிரியர் குழு

**க. முகிலன்**
**தமிழேந்தி**
**வாலாசா வல்லவன்**
**வையவன்**
**சி. பெரியசாமி**
**கோவிராமலிங்கம்**
**சி. நடராசன்**
**மங்கலம் அரசன்**
**தி.துரைசித்தார்த்தன்**

*

அலுவலக நிருவாகப் பொறுப்பு

**ப. வடிவேலு**

94441 05892

*

அனைத்துத் தொடர்புகளுக்கும்

**‘சிந்தனையாளன்’**

2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.

தொடர்புக்கு :

94448 04980

044-2625 2119

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly@gmail.com

*

இதழ் வடிவமைப்பு :

**சன் நகலகம்,** சென்னை-5.

9840015179

*

இணையத்தில் படிக்க

**www.keetru.com**

*

இப்படியே, 41,000 ஏரிகளிலும் சுழற்சி முறையில் ஏரிகளைத் தூர் எடுத்து ஆழப்படுத்தினார்கள்.

86 ஆண்டுக்காலத்திய மேட்டூர் அணையை 5, 6 ஆண்டுகளுக்கு முன் நானும் என் சேலம் கட்சித் தோழர்களும், அரசு அதிகாரிகள் துணையுடன் வருந்தி முயன்று ஒருநாள் முழுதும் பார்வையிட்டு, அப்போதைய தமிழக அரசினர்க்கு, "மேட்டூர் அணையை உடனே இயந்திரம் மூலம் தூர்வாருங்கள்" என உருக்கமாக எழுதினோம்.

இப்போதைய முதலமைச்சர், ஒரே நேரத்தில் நூற்றுக் கணக்கான இயந்திரங்களை வைத்து, மேட்டூர் அணையில் தகடு தகடாகப் படித்திருக்கிற வண்டலை வாரி இருக்கிறார். **அது தூர் வாரல் அல்ல.**

**மேட்டூர் அணையைத் தூர் வார 4 மாதங்கள் - பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி நான்கு மாதங்கள் வேண்டும்.**

**ஒரு சிறிய ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த குறைந்தது ஒரு மாத காலம் வேண்டும்.**

**இப்போதும், எல்லா ஏரிகளிலும் தண்ணீர் இல்லை. ஓர் ஆண்டுக்கு 5,000 வீதம் பெரிய, சிறிய ஏரிகளை 31 மாவட்டங்களிலும் தேர்வு செய்து, 2017 முதற்கொண்டு அவற்றை ஆழப் படுத்துவது, அவற்றுக்கான வரத்து வாய்க்கால், போக்குவாய்க்கால் இவற்றைத் தூர் வாருவது இவற்றைச் செய்ய வேண்டும் எனத் தமிழக அரசினரை வேண்டிக் கொள்கிறோம்.**

**நீர் பற்றாக்குறையை வளரவிடுவது, மானிடர் நலனுக்கு எதிரானது.**

**எந்தக் கட்சியும் இதுபற்றிக் கரிசனத்தோடு சிந்திக்கவில்லை; செயல்படவில்லை.**

**வேளாண்குடி மக்கள் ஒன்றுசேர்ந்து இதற்குத் தீர்வு காண்போம்.**

14.6.2017 **- வே. ஆனைமுத்து**

## மார்க்சிய பெரியாரிய கட்சித் தலைவர் வே.ஆனைமுத்துவின் 93-வது பிறந்தநாள் ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்து!



பெரியாரின் தொண்டரும் மார்க்சிய பொதுவுடைமைக் கட்சித் தலைவருமான வே.ஆனைமுத்துவின் 93-வது பிறந்தநாளையொட்டி ஈ.வி.கே. எஸ். இளங்கோவன் அவரை நேரில் சந்தித்து வாழ்த்தினார்.

பெரியாரியல் சிந்தனையாளரும் மார்க்சிய பெரியாரிய பொதுவுடைமைக் கட்சித் தலைவருமான வே.ஆனைமுத்து, வெளியிட்டுள்ள அறிக்கையில் 'தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகன் 95 முடிந்து 96 அகவையிலும், தி.மு.க. தலைவர் கருணாநிதி 93 முடிந்து 94 அகவையிலும் நலமாக உள்ளனர்.

நான், இன்று 92 முடிந்து 93 அகவையில் நுழைகிறேன். நீரிழிவு நோயால் துன்புறும் நான் ஒரு நாளில் 8 மணி நேரம் படிக்கிறேன். இரவு 9 முதல் 11 மணி வரை (அல்லது) காலை 4 மணி முதல் 7 மணி வரை கட்டுரைகள் எழுதுகிறேன். இப்படியே 94, 95 அகவை வரை வாழ்ந்து, தந்தை பெரியாரின் விரிவான வரலாற்றை எழுதி முடித்திட வாய்ப்பாக நீண்ட பயணங்கள் போவதை 21.6.2017 முதல் நிறுத்திவிட்டேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

'ஆனைமுத்து கருத்துக் கருவூலம்' என அவர் எழுத்துகள் 20 தொகுதிகளாக வெளிவந்துள்ளன. பெரியார் வரலாற்றை ஆய்வு நோக்குடன் நூலாக்கும் பணியில் எவர் துணையும் இன்றி உடல் நலிவிற்கிடையே இப்போதும் முனைப்புடன் ஈடுபட்டுள்ளார் வே.ஆனைமுத்து. ஐந்து பாகங்களாக அந்த வரலாற்றுப் பெருநூல் வெளிவர வேண்டுமென்பது ஆனைமுத்துவின் திட்டம்.

வே.ஆனைமுத்துவுக்கு பெரியாரின் பேரனும், காங்கிரஸ் மூத்த தலைவருமான ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் வாழ்த்து தெரிவித்துள்ளார். மேலும் பல பிரமுகர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

- நன்றி : "மாலை முரசு", 21-6-2017

வே.ஆனைமுத்து பிறந்த நாளன்று மறுமலர்ச்சி தி.மு.க.வின் பொதுச் செயலாளர் வைகோ, விடுதலைச் சிறுத்தைகளின் பொதுச் செயலாளர் தொல்.திருமாவளவன், இயக்குநர் வ.கௌதமன் ஆகியோர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தனர்.

# பார்ப்பனரும் அரசியலும்

பெரியார் ஈ.வெ.ரா.

அரசியல் விஷயத்தில் நாம் பார்ப்பனர்களை நம்பக்கூடாது என்றும், அவர்களது அரசியல் நோக்கம் என்பதெல்லாம் பார்ப்பனரல்லாதாரை மிதித்து பார்ப்பனர்கள் எப்படியாவது அதிகாரத்திற்கும் பதவிக்கும் உத்தியோகத்திற்கும் வர வேண்டும் என்பதைத்தவிர வேறில்லை என்றும், பார்ப்பனர் கள் தங்களுக்கு உத்தியோகம் பதவி முதலியவைகள் கிடைக்கக் கூடும் என்று எண்ணுகிற விஷயங்களில் அதற்கு விலையாக தேசத்தையோ மானத்தையோ நாணயத் தையோ கூட விடப் பின்வாங்க மாட்டார்கள் என்றும், இந்தப்படி செய்தே நமது நாட்டை ஆயிரக்கணக்கான வருஷங்களாய் அன்னிய ஆக்ஷிக்கு அதாவது மனிதத்தன்மை அற்ற ஆக்ஷிக்கு அடிமைப்படுத்தி நமது நாட்டிற்கு அடியோடு சுயமரியாதை இல்லாமற் செய்து விட்டார்களென்றும், இக்குணங்களான பார்ப்பனீயம் நமது நாட்டை விட்டு ஒழிந்தாலல்லது நமக்கு என்றென்றைக்கும் விடுதலையோ சுயமரியாதையோ ஏற்படாதென்றும் அனேக தடவைகளில் எழுதியும் பேசியும் வந்திருப்பதுடன் அதே வேலையிலேயே நமது வாழ்நாளைக் கடத்தியும் வருகிறோம்.

ஆனால் நம்மில் ஒருசாராருக்கே, அதாவது பார்ப்பனர் களை பின்பற்றினாலொழிய வாழ முடியாது என்கிற கூட்டத்தாருக்கு இந்த உண்மைகள் எல்லாம் தெரிந்திருந் தாலும் அவைகளை வெளியிடுவது அவர்கள் வாழ்க்கைக்கு அசவுகரியமாய்த் தோன்றுவதோடு அதற்கு எதிர்ப்பிரசாரமும் செய்ய வேண்டிய அவசியமும் ஏற்படலாம். அந்தப்படி செய்து நாம் செய்து வருவதையும் அழித்துக் கொண்டும் வரலாம். ஆனாலும் நமது நாட்டிற்கு இப்படி உண்மைகளை வெளிப்படுத்துவதைவிட வேறு முன்னேற்ற மார்க்கம் இல்லை என்பதே நமது முடிவு என்பதோடு இந்தப்படி நாம் சொல்லுவதற்கும் சில உதாரணங்கள் காட்டுவோம்.

நமது நாட்டுக்கு புதிய சீர்திருத்தம் என்பதாக ஒன்று அரசாங்கத்தாரால் வழங்கப்பட்டவுடன் அதை ஏற்றுக் கொள்ளலாமா வேண்டாமா என்கிற விஷயத்தில் காங்கிரசுக்காரர்கள் என்பவர்களுக்கே அபிப்பிராய பேதம் ஏற்பட்ட தானது சாதாரண மனிதர்களுக்குள் ஏற்பட்டதாகவும் சொல்ல முடியாது.

லோகமான்யர் என்கிற திலகருக்கும், மகாத்மா என்கிற காந்திக்கும், லோக நாயகி என்கிற பெசண்டம்மாளுக்கும், மகாக்கனம் என்கிற சீனிவாச ஸ்திரிக்கும் மற்றும் இது போன்ற தலைமையும், பெருமையும், பிரக்யாதியும், செல்வாக்கும் உள்ளவர்கள் என்று சொல்லுபவருக்குமே அபிப்பிராய பேதம் ஏற்பட்டது. இவற்றுள் ஒரு கூட்டத்தார் சீர்திருத்தத்தை நிராகரித்து விட வேண்டுமென்றார்கள். ஒரு கூட்டத்தார் நடத்திக் காட்டி அதிலுள்ள குற்றத்தை எடுத்துச் சொல்லி திருத்தப்பாடு செய்து மேல் கொண்டு சீர்திருத்தம் கேழ்க்கலாம் என்றார்கள்.

இதில் ஒப்புக் கொண்டு நடத்திக் காட்டலாம் என்று அப்போது சொன்ன கூட்டத்தில் சேர்ந்தவர்கள் தான் சென்னை வாசிகளில் மைலாப்பூர் அய்யங்கார் கோஷ்டியான ஸ்ரீமான் ரங்கசாமி அய்யங்கார், சீனிவாசய்யங்கார், சத்தியமூர்த்தி, கஸ்தூரி ரங்கய்யங்கார் முதலியவர்களும், அய்யர் கோஷ்டியை சேர்ந்தவர்களும் மிதவாதக் கட்சியாருமான ஸ்ரீமான் சிவசாமி அய்யர், சி.பி.ராமசாமி அய்யர், சீனிவாச சாஸ்திரி, பி.என்.சர்மா முதலியவர்களும், பார்ப்பனரல்லாதார் கோஷ்டியாரான ஸ்ரீமான் தியாகராய செட்டியார், டி.எம்.நாயர், பனகால் ராஜா முதலியவர் களுமே ஆவார்கள் .

இவர்களில் அய்யங்கார் கோஷ்டியாரை, அய்யர் கோஷ்டியார்கள் கட்டி சேர்க்காமல் விரட்டிவிட்டதால் அவர்களுக்கு தனி இடம் இல்லாமல் போனதும் சீ இந்தப் பழம் புளிக்கும் என்று சொல்லிக் கொண்டு ஒத்துழை யாமையில் வந்து சேர்ந்தார்கள் . மற்ற இரு கூட்டத்தாரும் சீர்திருத்தத்தை நடத்திக் கொடுக்க முயற்சித்ததில், பார்ப்பனரல்லாதார் கட்சியார் ஜனங் களிடை செல்வாக்குப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றார்கள் .

தோல்வியுற்ற அய்யர் கட்சி சர்க்காரிடம் செல்வாக்குப் பெற்று உத்தியோக வெற்றி பெற்றார் கள். அதன் பலன்தான் இப்போது ஸ்ரீமான்கள் சீனிவாச சாஸ்திரி மாதம் 4000ரூ. சம்பாதிக்கும் தென்னாப்பிரிக்கா கமிஷனரானதும், சி.பி. ராமசாமி அய்யர் மாதம் 5500ரூ. சம்பாதிக்கும் சட்ட மெம்பர் ஆனதும், பி.என். சர்மா மாதம் 6500 சம்பாதிக்கும் இம்பீரியல் கவுன்சில் மெம்பர் ஆனதும், டி.ரங்காச்சாரி மாதம் 3000 சம்பாதிக்கும் பையாஸ்கோப் கமிஷனரானதும், இவர்கள் பிள்ளைக்குட்டி அண்ணன் தம்பி, மாமன், மைத்துனன் முதலானவர்கள் உத்தியோகங்களில் இருப்பதுமாய் ஏற்பட்டது.

அதுபோலவேதான் ஸ்ரீமான் பனகால் ராஜா, பாத்ரோ, சிவஞ்ஞானம் பிள்ளை முதலியவர்களும் மாதம் 4000 சம்பாதிக்கும் மந்திரிகளானதும் என்றும் சொல்லலாம். இப்படி இருந்தாலும் ஒத்துழையாமைப் பார்ப்பன பத்திரிகைகளும் காங்கிரஸ் தலைவர்களும் இவர்களைப் பின்பற்றும் பார்ப்பனரல்லாத சில கூலி பத்திரிகைகளும், போலித் தலைவர்களும் வயிற்றுச் சோற்று தேச பக்தர்களும், பார்ப்பனரல்லாதார் கட்சியை வைது அவர்களை அந்த ஸ்தானத்திலிருந்து விரட்டி, பார்ப்பனர்களையாவது அவர்களது அடிமைகளையாவது அந்த ஸ்தானத்தில் வைக்க அநுகூலமா யிருக்கும்படி பாடுபட்டார்களே ஒழிய உண்மையான ஒத்து ழையாமையையாவது உண்மையான காங்கிரஸ் கட்டளை யையாவது பிரசாரம் செய்தவர்களே அல்ல.

**குடி அரசு - கட்டுரை - 02.10.1927**

# தமிழ்நாட்டு வேளாண்மையும், நீராண்மையும்: பொதுப்பணித்துறை - வருவாய்த் துறைகளின் கழிப்பிணித்தனத்தைக் கண்டிக்கிறோம்!

செயங்கொண்டம் பக்கத்திலுள்ள பொன்னேரி, சேத்தியாத்தோப்பு வீர நாராயணன் (வீராணம்) ஏரி முதலானவை சோழர்கள் ஆட்சியில் 1,000 ஆண்டு களுக்குமுன் உருவாக்கப்பட்டவை.

திட்டக்குடியை அடுத்து உள்ள வெலிங்டன் ஏரி (எமனேரி), சேலம் மேட்டூர் அணை இவை வெள்ளை யர் ஆட்சியில் உருவாக்கப்பட்டவை.

சாத்தனூர் அணை, மங்கலம்மேடு அடுத்த எரையூர் ஏரி இவை காங்கிரசு ஆட்சியில் கட்டப்பட்டவை.

இப்படிப்பட்ட ஏரிகள் தமிழகத்தில் 41,000 உள்ளன. இவற்றில் சில தனியார் ஏரிகளும் உண்டு. அவை சிறிய ஏரிகள். அவை தனியாருக்குச் சொந்தமான நிலத் தில் அவரவரால் தோண்டிக் கொள்ளப்பட்டவை.

இந்த ஒவ்வொரு ஏரிக்கும் மழைநீர் ஓடிவரும். வரத்து வாய்க்கால்களும், ஏரி நீர் பாயும் போக்கு வாய்க்கால்களும் உண்டு.

அப்படிப்பட்ட வாய்க்கால்கள் அரசுத் தரிசு, புறம் போக்கு நிலங்கள், தனியாருடைய பட்டா நிலங்கள் வழியாகப் பல நூற்றாண்டுகளாக-ஓராயிரம் ஆண்டுக்கு மேலாக உள்ளவை.

இவை வருவாய்த்துறை நில வரைபடத்திலும், பொதுப் பணித்துறை நீர்நிலைகள் வரைபடத்திலும் துல்லியமாக இருக்கும்.

இவை அந்தந்த ஏரியின் நீர் கொள்ளவு (ஆயக் கட்டு), ஏரியின் பரப்பளவு, ஏரிக்கரையின் உயரம், அகலம், கலங்கின் அளவுகள், மதகுகளின் அளவுகள் எல்லாம் துல்லியமாகக் காட்டும்,

இவை அரசின் கவனமின்மையால் ஆக்கிரமிக்கப் பட்டுவிட்டன.

தமிழக அரசின் வருவாய்த்துறை கணக்கர் மற்றும் கீழ்நிலை அலுவலர்கள் ஆகியோர்க்கும்; பொதுப்பணித் துறை கண்காணிப்பாளர் மற்றும் லஸ்கர் முதலான கீழ்நிலைப் பணியாளர்களுக்கும், ஊர் நாட்டாண்மைக் காரர்களுக்கும் இவை பற்றித் துல்லியமாகத் தெரியும்.

**இந்த நிலைமை வெள்ளையன் ஆட்சியில் செப்ப மாக இருந்ததை நான் நன்கு (1946 வரை) அறிவேன்.**

வெள்ளையன் வெளியேறிய பிறகு - 1960 முதல் இவையெல்லாம் காங்கிரசு ஆட்சியினராலும் திராவிடக் கட்சி ஆட்சிகளாலும் கண்காணிப்பும், பராமரிப்பும் இன்றி விடப்பட்டன.

1969க்குப் பிறகு, ஆளுங்கட்சியினரும், 1977க்குப் பிறகு ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும்-இந்திய ஆட்சிப்பணி அதிகாரிகளும் - மற்ற உயர்நிலை - கீழ் நிலை அதிகாரிகளும் - கட்சிப் பொறுப்பாளர்களும் நெஞ்சில் ஈரம் இன்றி - மக்களைப் பிழிந்து கைக்கூலி பெறுவதிலும்-அரசுப் பணியைப் பொறுப்புடன் செய்யாமல் கழிப்பிணித்தனமாகவும் நடந்துகொண்டனர்.

**பொது மக்கள் தலைவர்கள் என்பவர்களும் சமூக அக்கறையின்றிப் போயினர்; இவர்களுள் சிலர் ஆளுங் கட்சி - எதிர்க்கட்சிகளின் தரகர்களாக ஆகிவிட்டனர்.**

**வடஇந்தியாவில் மேலே கண்ட நிலைமை 1980க் குப் பிறகு உருவாகிவிட்டதை நேரில் நான் பார்த்தேன்.**

**புதிய பொருளாதாரக் கொள்கையின் காவலர் களாக, 1991க்குப் பிறகு விளங்கிய பி.வி. நரசிம்மராவ், டாக்டர் மன்மோகன் சிங், ப. சிதம்பரம் மற்றும் இவர் களின் கால ஆட்சிகள் வேளாண்மையைப் புறக்கணித் தன; நீராண்மையைப் புறக்கணித்தன; மின் ஆக் கத்திலும், மக்கள் நலக் காப்பிலும் (Public Health), பொதுக் கல்வி வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்தத் தவறின.**

**மேலே கண்ட இந்திய மய்ய அரசின் கையாள் களாகவும் கூட்டுக்கொள்ளைக்காரர்களாகவும் இருந்த திராவிடக் கட்சி ஆட்சிகள் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கூச்ச நாச்சமின்றி இறங்கின.**

2011லும், 2016லும் வெற்றி பெற்ற செயலலிதாவும், அவருடைய அமைச்சரவையினரும், உயர்நிலை - கீழ்நிலை அதிகாரிகளும் பகல் கொள்ளைக்காரர்களா கவே செயல்பட்டார்கள். பொதுநலனை வேண்டி, இதற்கு நாமே பலியானோம் என்பதை வெட்கமின்றி ஒப்புக் கொள்கிறோம். நிற்க.

செயலலிதா மறைவுக்குப்பிறகு, அவருக்குக் கையாள்களாக இருந்த சொந்தக் கட்சித் திருடர்கள் - ‘‘சுருட்டிய வரையில் இலாபம்’’ - ‘‘யாருக்குக் கொடி பிடித்தாலும் சரி, நம்மை கொள்ளையடிக்கவிட்டால் போதும்’’ என்று கருதி - இன்றைய முதல்வர் மாண்பு மிகு எடப்பாடி பழனிசாமியும், நேற்றைய முதல்வர் பன்னீர் செல்வமும், சசிகலா, டி.டி.வி. தினகரன் குடும்பத்தினரும் பிரதமர் நரேந்திர மோடியின் காலைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டனர்.

இந்த இக்கட்டான சூழலில், 17.6.2017 அன்று, தமிழக முதலமைச்சர் - பொதுப் பணித்துறை மாவட்டத் தலைமைப் பொறியாளர்கள், கண்காணிப்புப் பொறி யாளர்கள், செயற்பொறியாளர்கள் முதலான 100க்கு மேற்பட்ட உயர் அதிகாரிகளையும் பொதுப் பணித் துறை முதன்மைச் செயலாளர் முதலானோரையும் கூட்டி - எந்தெந்தத் திட்டங்கள் நிறைவு பெற்றுள்ளன - எவை எவை தேங்கி நிற்கின்றன என்று ஆய்வு செய்துள்ளார். இது வரவேற்கத்தக்கது.

**இதே வேகத்தில் வருகிற வடகிழக்குப் பருவ மழை தொடங்குவதற்குள் - 1,000 பெரிய ஏரிகளைத் தூர் அள்ளி ஆழப்படுத்தவும், ஏரிக்கரைகளைக் கெட்டிப் படுத்தவும், வரத்து - போக்கு வாய்க்கால்களை ஊர் மராமத்து மூலம் தூர் வாரவும் வேண்டும் என்றும்; வேளாண் கூட்டுறவுக்கடன் முழுவதையும் தமிழக அரசினர் தள்ளுபடி செய்ய ஆவன செய்ய வேண்டும் எனவும்; தேசிய வங்கிகளில் பெற்ற வேளாண் கடன் களைத் தள்ளுபடி செய்ய முடியாது என்று கூறும் மோடி அரசைக் கண்டனம் செய்து, தமிழகச் சட்ட மன்றத்தில் தீர்மானம் நிறைவேற்ற வேண்டும் என்றும் வற்புறுத்திக் கோருகிறோம்.**

22.6.2017 **வே. ஆனைமுத்து**

## தென்னாப்பிரிக்க விடுதலை வீரர், தமிழர் தலைவர் கே. முனுசாமி மறைந்தார்

தமிழகத்தில் 1926இல் பிறந்தவர் கே. முனுசாமி.

அவர் இளமையில் தென்னாப்பிரிக்காவில் நேட்டா லில் குடியேறினார். அங்கு வெள்ளை பிரிட்டானியரை எதிர்த்து நடந்த விடுதலைப் போரில் பங்கேற்றார்.

அப்பெருமகனார், தம் 91ஆம் அகவையில், நேட்டாலில், 22-6-2017 அன்று மறைவுற்றார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

மறைந்த முனுசாமி அவர்கள், இந்திய காங்கிரசில் சேர்ந்து விடுதலைக்குப் போராடியதற்காக இந்தியா, ஜாம்பியா, சுவிட்சர்லாந்து போன்ற நாடுகளுக்கு அப்போது கடத்தப்பட்டார்.

தென்னாப்பிரிக்கா விடுதலை அடைந்த பின்னர், தென்னாப்பிரிக்க நாடாளுமன்ற உறுப்பினராக விளங்கினார்.

பெருமகனார் முனுசாமி அவர்களின் உடல், 24-6-2017 சனி அன்று டர்பனில் அடக்கம் செய்யப் பட்டது.

வாழ்க தென்னாப்பிரிக்க விடுதலை வீரர் கே.முனுசாமி புகழ்!

25.6.2017 **-வே. ஆனைமுத்து**

## வணங்கி வரவேற்பது, உயர்வு தாழ்வைக் காட்டுகிறது. கைகுலுக்கி வரவேற்பது வழியனுப்புவது மானிட சமத்துவத்தை உடனே நிலை நாட்டுகிறது!

**என்** 93ஆம் பிறந்த நாள் கட்டுரை முடிவில், மேலே கண்ட கோரிக்கையை முன்மொழிந்தேன்.

இந்துக்கள் - பிராமணர், சத்திரியர், வைசியர், சற் சூத்திரர், சூத்திரர், தீண்டப்படாதவர் என 6 பெரும் பிரிவினராகவும், 6700 உள் பிரிவினராகவும் உள்ளனர்.

இவர்களில் கீழே - மேலே படிக்கட்டுப் பிரிவினை யாக - உயர்வு - தாழ்வு உள்ளதாக சாதிப் படிக்கட்டு அமைப்பு இருக்கிறது. உயர்ந்த சாதிக்காரனை எல்லாக் கீழ்ச்சாதிக்காரரும் கும்பிடுகின்றனர்; உயர்ந்த சாதிக் காரர் ஒருபோதும் கீழ்ச்சாதிக்காரரைக் கும்பிட்டதில்லை; மேலும் கீழ்ச்சாதிக்காரரோடு கைகுலுக்கத் தயங்குகிறார்; மறுக்கிறார். எனவே, கீழ்ச்சாதித் தீண்டப்படாதவர், தீண்டப்படாதவராகவே நடத்தப்படுகிறார்.

இவர்கள் கூடி வேலை செய்கிறார்கள்; கூடி உண் கிறார்கள்; ஆனால் கைகுலுக்கத் தயங்குகிறார்கள்.

**இஸ்லாமியர் ஒருவரோடு ஒருவர் கைகுலுக்கி, கட்டிப்பிடித்து வரவேற்கிறார்கள்; சகமானிட சமத்துவம் அதில் இருக்கிறது.**

1865க்குப் பிறகும், 1960க்குப் பிறகும், நீக்ரோவும் வெள்ளையரும் கைகுலுக்கி வரவேற்கிறார் கள். சமூக சமத்துவம் அவர்களிடையே வந்துவிட்டது.

அய்ரோப்பியர் ஒருவரையொருவர் கைகுலுக்கி வரவேற்கிறார்கள்; கைகுலுக்கி வழியனுப்புகிறார்கள்.

இந்தியரை அய்ரோப்பியர் கைகுலுக்கி வரவேற் கிறார்கள்.

**இந்துக்களாக-இந்தியராக உள்ள ஒவ்வொரு ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் கைகுலுக்கி வரவேற்போம். அதிலேயே சமூக சமத்துவம் வந்துவிடும்.**

ஆணை ஆண் கைகுலுக்கியும் கட்டிப்பிடித்தும் வரவேற்போம். முழு சமூக சமத்துவம் வந்துவிடும். பெண்ணைப் பெண் கைகுலுக்கியும், கட்டிப்பிடித்தும் வரவேற்போம்.

முயன்றால்-மனதார முயன்றால், முடியாதது ஒன்றும் இல்லை. இது என் வேண்டுகோள்; என் ஆசை. முயலுங்கள்.

14.6.2017 **வே. ஆனைமுத்து**



# சின்ன குத்தூசி நினைவு அறக்கட்டளை 6ஆம் ஆண்டு நினைவு விருது வழங்கும் விழா

தஞ்சை மாவட்டத்தில் பார்ப்பனக் குடும்பத்தில் பிறந்த தியாகராசன் எனும் இயற்பெயர் கொண்ட சின்ன குத்தூசி அவர்கள், தன் வாழ்நாள் முழுவதும் பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையிலும், திராவிட இயக்கக் கொள்கையிலும் உறுதியுடன் திகழ்ந்தவர். மூத்த பத்திரிகையாளராகவும் சிறந்த அரசியல் விமர்சனக் கட்டுரைகள் எழுதுபவராகவும் விளங்கிய சின்ன குத்தூசியின் பிறந்த நாளான சூன் 15 அன்று, "சின்னகுத்தூசி அறக்கட்டளை" அவருக்கு விழா எடுப்பதுடன், அவர் பெயரில் விருதுகளும் வழங்கி வருகிறது.

அவ்வகையில் 6ஆம் ஆண்டு நினைவு விருது வழங்கும் விழா சென்னை மயிலாப்பூர், சி.ஐ.டி. காலனியில் உள்ள கவிக்கோ அரங்கில் 15.6.17 மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது. "தேசிய முரசு" இதழின் ஆசிரியர் திரு. கோபண்ணா தலைமை வகித்து உரையாற்றினார். மூத்த பத்திரிகையாளர் தோழர் ஜவகர் அனைவரையும் வரவேற்று உரை யாற்றினார். முன்னிலை வகித்த திராவிட இயக்க ஆய்வாளர் - எழுத்தாளர் தோழர் க.திருநாவுக்கரசு பல்வேறு செய்திகள் குறித்து தன் கருத்துகளைச் சிறப்புரையாக நிகழ்த்தினார்.

இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தேசியக் குழு உறுப்பினர் தோழர் இரா. நல்லகண்ணு விருதுகளை வழங்கிச் சிறப்புரையாற்றினார். கவிஞர் இளவேனிலுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதாக உருவா ஒரு இலட்சம், சிறந்த அரசியல் கட்டுரைக்காகக் காஞ்சி கருணாநிதிக்கு ரூ.10,000, சமூகம்-பண்பாடு குறித்த கட்டுரைக்காக பிருந்தா சீனிவாசனுக்கு ரூ.10,000, பொருளாதாரக் கட்டுரைக்காக "சிந்தனையாளன்" ஆசிரியர் குழு உறுப்பினர் க.முகிலனுக்கு ரூ.10,000 வழங்கப்பட்டன. மேலும் சின்ன குத்தூசியின் உருவம் பொறிக்கப்பட்ட நினைவு விருதும், அவர் எழுதிய நூல்களும் விருது பெற்றவர்களுக்கு வழங்கப்பட்டன.



விருது பெற்றவர்களும் உரையாற்றினர். மூன்று கட்டுரைகளும் நூல் வடிவில் அனைவர்க்கும் வழங்கப் பட்டன. திரு. நக்கீரன் கோபால் நன்றியுரை ஆற்றினார். தோழர் லெனின் நிகழ்ச்சியை ஒருங்கிணைப்புச் செய்தார். க.முகிலன் தான் பெற்ற பரிசுத் தொகை உருவா பத்தாயிரத்தை "சிந்தனையாளன்" இதழுக்கு அளித்தார்.

2016 ஏப்பிரல் சிந்தனையாளன் இதழில் "9000 கோடியை விழுங்கி ஏப்பம் விட்ட விஜய் மல்லய் யாவும், டிராக்டர் கடனுக்காக இழிவுபடுத்தப்பட்டுத் தாக்கப்பட்ட உழவர் பாலனும்" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரைக்காக க. முகிலனுக்கு இவ்விருது வழங்கப்பட்டது.

# உழவர்களின் வீறார்ந்த போராட்டங்கள் அரசுகளுக்கு விடுக்கும் எச்சரிக்கை!

**- க. முகிலன்**

**சில** ஆண்டுகளுக்கு முன்பு மேற்கு வங்காள மாநிலத்தில் உள்ள சிங்கூர், நந்திக்கிராம் பகுதிகளில் பெருமுதலாளிய நிறுவனங்களுக்காக உழவர்களின் நிலங்களை மேற்குவங்க அரசு, கட்டாயப்படுத்திக் கைப் பற்ற முனைந்தபோது, அதை எதிர்த்து உழவர்கள் தீரமுடன் நடத்திய போராட்டம் இந்தியா முழு கவனத் தையும் ஈர்த்தது.

அதுபோல் இப்போது 2017 சூன் மாதத் தொடக்கத் தில் பாரதிய சனதா கட்சி ஆளும் மாநிலங்களான மகா ராட்டிரத்திலும் மத்தியப் பிரதேசத்திலும் உழவர்கள் தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றுமாறு வலி யுறுத்திப் பல்லாயிரக்கணக்கில் பல பகுதிகளில் கிளர்ந் தெழுந்து தீவிரமான போராட்டங்களை நடத்தினார் கள். மத்தியப்பிரதேசத்தில் மன்ட்சார் மாவட்டத்தில் உழவர்களின் போராட்டத்தை ஒடுக்கிட காவல்துறை யினர் துப்பாக்கியால் சுட்டதில் ஆறு உழவர்கள் மாண் டனர். உழவர்களைக் காவல் துறையால் சுட்டுக்கொல் லப்பட்டதைக் கண்டித்து இந்தியா முழுவதும் உழவர் கள் மிகப்பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். உழவர்களின் போராட்டம், டிஜிட்டல் இந்தியாவைப் பற்றி மட்டுமே பேசிக் கொண்டிருந்த பா.ச.க. தலைவர் களையும், ஊடகங்களையும் உழவர்களின் பிரச்சனை களைப் பற்றி பேசச் செய்தது.

2016ஆம் ஆண்டில் தென்னக மாநிலங்களான தமிழ்நாடு, ஆந்திரம், கருநாடகம், கேரளம் ஆகியவற் றில் பருவமழை பொய்த்துவிட்டது. குறிப்பாகத் தமிழ் நாட்டில் 146 ஆண்டுகளில் இல்லாத கடும் வறட்சி ஏற்பட்டது. கருநாடகத்திலிருந்து காவிரியில் தண்ணீர் வரும் என்ற நம்பிக்கையில் காவிரிப் பாசனப் பகுதி யில் பல இலட்சம் ஏக்கர் பரப்பில் பயிரிடப்பட்ட நெல் பயிர் காய்ந்து கருகிப் போனது. உழவர்கள் பெரும் இழப்புக்கும் இன்னல்களுக்கும் உள்ளாயினர். நடுவண் அரசும், தமிழக அரசும் உரிய இழப்பீடுகளை வழங்க வில்லை.

இந்நிலையில் தமிழக உழவர்களுக்கு உரிய வறட்சி நிவாரணம் வழங்கப்பட வேண்டும்; வங்கிகளின் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; 2006ஆம் ஆண்டில் எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரைத்தபடி, சாகுபடிச் செலவில் 50 விழுக்காடு அளவுக்கு இலாபம் கிடைக்கும் வகையில் நடுவண் அரசு விளைபொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு



*மகாராட்டிராவில் காய்கறிகளின் விலை படுவீழ்ச்சி அடைந்ததைக் கண்டித்து நெடுஞ்சாலைகளில் உழவர்கள் காய்கறிகளைக் கொட்டினர்*

விலையை (Minimum Support Price-MSP) நிர்ணயிக்க வேண்டும்; காவிரி மேலாண்மை வாரியத்தை உடனே அமைக்க வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து, அய்யாக்கண்ணு தலைமையிலான தமிழக உழவர்கள் தில்லி ஜன்தர் மந்தர் பகுதியில் 14.3.2017 முதல் 41 நாள்கள் இந்தியாவின் கவனத்தை ஈர்க்கும் வகையில் தொடர்ந்து போராட்டம் நடத்தினர்.

**அதன்பின் இந்தியாவின் பல பகுதிகளிலும் கடன் தொகையைத் தள்ளுபடி செய்ய வேண்டும்; விளை பொருள்களுக்கு நியாயமான விலை கிடைக்க வேண்டும் என்பவற்றை முதன்மையான கோரிக்கைகளாக முன் னிறுத்திப் போராட வேண்டிய நிலைக்கு உழவர்கள் தள்ளப்பட்டது, ஏன்?**

இராசிவ் காந்தி தலைமை அமைச்சராக இருந்த போது, 1986இல் தாராளமயம், தனியார்மயம் எனும் புதிய பொருளாதாரக் கொள்கைக்கு அடித்தளம் இட்டார். 1991இல் பி.வி. நரசிம்மராவ் தலைமை அமைச்சராக வும், மன்மோகன் சிங் நிதி அமைச்சராகவும் இருந்த போது தாராளமயம், தனியார்மயம், உலக மயம் என்பது அரசின் கொள்கையாக அறிவிக்கப்பட்டு நடை முறைப்படுத்தப்பட்டது. **புதிய பொருளாதாரக் கொள்கை தொழில் உற்பத்திக்கும், சேவைப் பிரிவு வளர்ச்சிக்கும் முதன்மை தந்தது. வேளாண்மையைப் புறக்கணித்தது.**

கடந்த கால் நூற்றாண்டில் நடுவண் அரசில் மாறி மாறி ஆட்சி செய்துவரும் காங்கிரசும், பா.ச.க.வும் வேளாண்மையைப் புறக்கணித்ததுடன், அது மேலும்

நலிவடையும் படியான நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. தொழில் துறையிலும் சேவைத் துறையிலும் அந்நிய முதலீட்டைப் பெறுவதன் மூலம் மட்டுமே நாட்டின் வளர்ச்சியை-மக்களின் பொருளாதார நிலையை உயர்த்த முடியும் என்று நடுவண் அரசும் மாநில அரசுகளும் தொடர்ந்து கூறிவருகின்றன.

வேளாண்மையில் அரசின் முதலீடு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. நீர்ப்பாசனத்தைப் பெருக்க நடவடிக்கை எடுக்கவில்லை. மாறாக வேளாண் மானியங்கள் நீக்கப் பட்டன. அதனால் விதை, உரங்கள், பூச்சிமருந்து முதலான இடுபொருள்களின் விலைகள் பல மடங்கு உயர்ந்தன. உலக வங்கி, பன்னாட்டு நிதியம், உலக வணிக அமைப்பு (WTO) ஆகியவற்றின் அறிவுறுத் தலின்படி, பொதுவழங்கல் முறையின் (PDS) கீழ், மானிய விலையில் உணவுப் பொருள்கள் வழங்கு வதைப் பலவகையிலும் அரசுகள் குறைத்து வருகின்றன. **அதன்மூலம் நெல், கோதுமை ஆகியவற்றைக் குறைந்தபட்ச ஆதரவு விலையில் (MSP) உழவர் களிடம் கொள்முதல் செய்வதைக் குறைத்து வருகிறது நடுவண் அரசு. இவ்வாறு கொள்முதல் செய்வதை அடியோடு ஒழிப்பதன்மூலம், இதற்காக 1965இல் ஏற்படுத்தப்பட்ட இந்திய உணவுக் கழகத்தையே (FCI) கலைத்துவிட வேண்டும்; அதன்மூலம் கொள்முதல், விற்பனை, சந்தை ஆகியவற்றை முற்றிலுமாகத் தனியாரிடம் தரவேண்டும் என்பதே நடுவண் அரசின் கொள்கை யாகும்.**

எனவே வேளாண்மையின் சிக்கல்களுக்கும், உழவர்களின் இன்னல்களுக்கும் மூல காரணியாக இருப்பது அரசின் தாராளமய, தனியார் மய, உலக மயக் கொள்கையே ஆகும். கடந்த முப்பது ஆண்டு களாக ஆட்சி செய்யும் ஆட்சியாளர்கள் வேளாண்மை யை உழவர்களின் வாழ்வாதாரமாகவும் மக்கள் அனை வருக்குமான உணவுப் பாதுகாப்பாகவும் கருதாமல், வெறும் தொழிலாகப் பார்ப்பதால், அதன் இலாப-நட்டத் திற்கு உழவர்களே பொறுப்பு என்று கருதுகின்றனர்.

**ஆனால் அமெரிக்காவிலும் அய்ரோப்பிய நாடுகளி லும் வேளாண்மையில் 2 முதல் 10 விழுக்காடு மக்களே ஈடுபட்டுள்ளனர். அவர்களுக்கு அதிக அளவு மானியம் தரப்படுகிறது. இந்தியாவிலோ 60 விழுக் காடு மக்கள் வேளாண்மையைச் சார்ந்து வாழ்கின்றனர். அமெரிக்காவிலும், அய்ரோப்பிய நாடுகளிலும் வேளாண் மையில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு எவ்வகையிலும், எந்த நிலையிலும் இழப்பு ஏற்படாமல் காப்பதுடன், ஒரு குறிப்பிட்ட அளவுக்கு இலாபம் கிடைக்கும் வகையில் அந்நாடுகளின் அரசுகள் விதிகளை வகுத்துச் செயல்படுகின்றன. ஆனால் இந்தியாவில் அரசுகள் உழவர்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை என்கிற எண்ணங் கொண்டவைகளாக இருக்கின்றன.**



*சூன் 3 அன்று நாக்பூரில் பால் கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி சாலையில் பாலைக் கொட்டும் பால் உற்பத்தியாளர்கள்*

### வேளாண் கடன் தள்ளுபடி

“இந்திய வேளாண்மை என்பது பருவ மழையுட னான ஒரு சூதாட்டம்”. “இந்திய உழவன் கடனில் பிறந்து கடனிலேயே சாகிறான்” என்கிற சொல் வழக்குகள் நீண்டகாலமாக இருந்து வருகின்றன. நவீன அறிவியல் காரணமாக மற்ற துறைகளில் எவ்வளவோ மாற்றங் கள் நிகழ்ந்துள்ள போதிலும், மேலே குறிப்பிட்டுள்ள சொலவடைகளின் நிலையில் மாற்றம் உண்டாக வில்லை.

பசுமைப் புரட்சித் திட்டம் தொடங்கி அய்ம்பது ஆண்டுகளாகின்றன. அதனால் நீர்ப்பாசனம் பெறும் நெல், கோதுமை போன்ற பயிர்களில் விளைச்சல் உயர்ந்தது. ஆனால் ஏழை, எளிய உழவர்களாக இருந்தவர்கள் மானாவாரியில் சிறு தானியங்கள், பயறு வகைகள் பயிரிட்டு தங்கள் பசியாற்றிக் கொண்டி ருந்த நிலையைப், பசுமைப் புரட்சி ஒழித்துவிட்டது. வளமான நிலமும், நீர்ப்பாசன வசதியும், அதிக அளவில் நிலமும் கொண்டிருந்த மேல்சாதிகளைச் சேர்ந்த பண்ணையார்களுக்கே பசுமைப் புரட்சியால் நன்மை கிடைத்தது. சிறு, குறு உழவர்களாக - 5 ஏக்கருக்கும் குறைவாக நிலம் வைத்திருப்பவர்கள் மொத்த உழவர் களில் 85 விழுக்காட்டினராக இருக்கின்றனர். பசுமைப் புரட்சியாலும், புதிய பொருளாதாரக் கொள்கையாலும் இவர்களின் வாழ்வதாரம் பந்தாடப்படுகிறது. **வறட்சி, வெள்ளம், பூச்சிநோய் தாக்குதல், விளைபொருள் விலை வீழ்ச்சி முதலான காரணங்களால் பெருமளவில் சிறு, குறு உழவர்களே பாதிக்கப்படுகின்றனர். அதனால் அடுத்தடுத்து வேளாண்மை செய்வதற் காகத் தொடர்ந்து கடன் வாங்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். பத்து ஏக்கருக்குமேல் நிலம் உடைய உழவர்களும் வருவாய் இழப்பு, கடன் சுமை களால் பாதிக்கப்படுகின்றனர் என்பதும் உண்மையே.**





*சூன் 6 அன்று மத்தியப்பிரதேசம் மான்ட்சாரில் போராட்டம் நடத்திய உழவர்கள் மீது காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் 6 உழவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்து வெடித்த வன்முறைக்காட்சிகள்*

குறிப்பாக அறுவடைக் காலத்தில் விளைபொருள்களின் விலை வீழ்ச்சியடைகிறது. கடன் தொல்லையால், குறைந்த விலையில் தம் விளைபொருள்களைத் தனியாரிடம் விற்கும் நிலைக்குப் பெரும்பாலான உழவர்கள் தள்ளப்படுகின்றனர். நியாயமான விலையில் வேளாண் விளைபொருள்களைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமோ, அரசு கொள்முதல் நிலையங்கள் மூலமோ கொள்முதல் செய்வதற்கான கட்டமைப்பு அரசுகளால் உருவாக்கப்படாமையே உழவர்களின் விளைபொருள்களுக்கு நியாயமான விலையும், இலாபமும் கிடைக்காமைக்கு முதன்மையான காரணமாகும். நடுவண் அரசு 23 பயிர்களுக்கு மட்டுமே குறைந்தபட்ச ஆதரவு விலையை (MSP) அறிவிக்கிறது. நெல், கோதுமை தவிர மற்ற பயிர்களுக்கு மிகக் குறைந்த விலையே அறிவிக்கிறது. மேலும் நெல், கோதுமை ஆகியவற்றைக் கொள்முதல் செய்வதற்கான கட்டமைப்புகள் உள்ளன. நெல், கோதுமை கொள்முதல் பஞ்சாப், அரியானா, ஆந்திரம் ஆகிய மூன்று மாநிலங்களில் 80 விழுக்காடு செய்யப்படுகிறது.

**எனவேதான், தேசிய மாதிரி ஆய்வறிக்கையில் நெல், கோதுமைக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை என ஒன்று இருப்பதே 33 விழுக்காடு உழவர்களுக்குத் தெரியவில்லை என்று கூறப்பட்டுள்ளது.** நடுவண் அரசு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் உழவர்களுக்கு வழங்கும் கடன் தொகையைக் கடந்த பத்து ஆண்டுகளில் பலமடங்கு உயர்த்தியுள்ளது. 2016-17ஆம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையில் இதற்காக 12 இலட்சம் கோடி உருவா ஒதுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகையில் பெரும்பகுதி டிராக்டர், அறுவடை இயந்திரம், அவற்றின் மூலம் பயன்படுத்தும் வேளாண் கருவிகள், தெளிப்பு மற்றும் சொட்டு நீர்ப்பாசனத்திற்கான கருவிகள் ஆகியவற்றைத் தயாரிக்கும் பெருமுதலாளிய நிறுவனங்களுக்குக் கோடிக்கணக்கில் வேளாண் கடனாகத் தரப்படுகிறது. **அத்துடன் நூற்றுக்கணக்கான ஏக்கரில் கார்ப்பரேட் வேளாண்மை செய்பவர்களுக்குப் பெருந்தொகைகள் வேளாண் கடனாகத் தரப்படுகின்றன.**

தேசிய மாதிரி ஆய்வறிக்கையில் (NSSO) உழவர்களில் 40 விழுக்காட்டினர்க்குக் கூட்டுறவுச் சங்கங்களிலோ, வங்கிகளிலோ கடன் கிடைப்பதில்லை என்று கூறப்பட்டுள்ளது. இவர்கள் கந்து வட்டிக்காரர்கள், களத்தில் கொள்முதல் செய்யும் வணிகர்கள், உரக்கடைக்காரர்கள் ஆகியோரிடம் அதிக வட்டிக்குக் கடன் வாங்குகின்றனர். தங்கள், விளைபொருள்களைக் குறைந்த விலையில் இவர்களிடமே விற்கவும் நேரிடுகிறது.

**இவ்வாறான காரணங்களால் உழவர்கள் கடன் சுமையால் தத்தளிக்கின்றனர். கடன் கொடுத்தவர்களால் பல நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர். இவற்றைத் தாங்கிக் கொள்ள முடியாத உழவர்கள் பலர் தற்கொலை செய்து கொள்கின்றனர். 1997 முதல் கடந்த இருபது ஆண்டுகளில் மூன்று இலட்சத்துக்கும் மேற்பட்ட உழவர்கள் தற்கொலை செய்துகொண்டுள்ளனர். உலகில் வேறு எந்த நாட்டிலும் இதுபோல் உழவர்கள் தற்கொலை நடக்கவில்லை.**

தேசிய குற்றப்பதிவு ஆணையத்தின் அறிக்கையின்படி, 2015ஆம் ஆண்டில் 12,602 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். பா.ச.க.-சிவசேனா கூட்டணி ஆட்சி செய்யும் மகாராட்டிர மாநிலத்தில் மட்டும் 4,291 உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர். பா.ச.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் மொத்தம் 7,723 உழவர்கள் (61.28%) தற்கொலை செய்து கொண்டனர். **இதைத்தான் நரேந்திர மோடி ‘‘அச்சா தின்’’ - நல்ல காலம் பிறக்கிறது என்று கூறுகிறாரா?**

இந்திய அளவில், முதன்முதலாக 1989இல், வி.பி.சிங் தலைமை அமைச்சராக இருந்தபோது உருவா 10,000 கோடிக்கு வேளாண் கடனைத் தள்ளுபடி செய்தார். 2006இல் தமிழ்நாட்டில் கலைஞர் கருணாநிதி ஆட்சி


*துப்பாக்கிச் சூட்டில் ஆறு உழவர்கள் கொல்லப்பட்ட பின் மத்தியப்பிரதேச முதல்வர் சவுகான் மேற்கொண்ட 48 மணிநேர உண்ணாவிரத நாடகம்*

யில் உருவா 7,000 கோடி கூட்டுறவு வங்கிக் கடன் தள்ளுபடி செய்யப்பட்டது. 2009 நாடாளுமன்றத் தேர்தலின் போது காங்கிரசுக் கட்சி வங்கிகளின் கடனைத் தள்ளுபடி செய்வதாக வாக்களித்தது. ஆட்சியில் அமர்ந்த பின் உருவா 60,000 கோடிக்குத் தள்ளுபடி செய்தது.

தெலுங்கானா தனி மாநிலமாக அமைக்கப்பட்டதும் முதல்வர் சந்திரசேகரராவ் உருவா 17,000 கோடிக்கு உழவர்களின் கடனைத் தள்ளுபடி செய்தார். 2016 சட்டமன்றத் தேர்தலில் வாக்குறுதியளித்தவாறு, செயலலிதா முதல்வரான பின் சிறு, குறு உழவர்களுக்கு உருவா 5,780 கோடி வேளாண் கடனைத் தள்ளுபடி செய்ய ஆணையிட்டார். இக்கடன் தள்ளுபடியை 5 ஏக்கருக்கு மேல் நிலம் உடைய உழவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று தென்னக ஆறுகள் இணைப்பு அமைப்பின் தலைவர் அய்யாக்கண்ணு தொடுத்த வழக்கில், சென்னை உயர்நீதிமன்றம் அவரது கோரிக்கையை ஏற்று உருபா 1,980 கோடிக்கு மற்ற உழவர்களின் கடனையும் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று தீர்ப்புக் கூறியது. தமிழக அரசு, இத்தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்போவ தாக அறிவித்துள்ளது.

2017 பிப்பிரவரி - மார்ச் மாதங்களில் உத்தரப்பிரதேச மாநில சட்டப்பேரவைக்கு நடந்த தேர்தலின் போது, பா.ச.க., விவசாயிகளின் கடன் தள்ளுபடி செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்தது. மோடியே இதுகுறித்து மேடைகளில் முழங்கினார். உ.பி. முதல்வராக ஆதித்தியநாத் பதவி ஏற்றபின் உருவா 36,000 கோடிக்கு உழவர்களின் கடன் தள்ளுபடி செய்யப்படுவ தாக அறிவித்தார். கடன் தொகையில் ஒரு இலட்சம் உருவா மட்டுமே தள்ளுபடி செய்யப்படும் என்று வரம்பு விதிக்கப்பட்டுள்ளது. பா.ச.க. ஆட்சியில் உள்ள உ.பி.யில் வேளாண் கடன் தள்ளுபடி அறிவிக்கப்பட்டதால், பா.ச.க. ஆட்சி செய்யும் மகாராட்டிரா, மத்தியப் பிரதேச மாநிலங்களின் உழவர்களும் கடன் தள்ளுபடி, உற்பத்தி செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் படியான விலை நிர்ணயம் முதலான கோரிக்கைகளை முன்வைத்துப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

**உழவர் போராட்டம் தீவிரமடைந்ததன் பின்னணி**

இந்தியாவில் 2014-15, 2015-16 ஆகிய ஆண்டுகளில் போதிய மழை பெய்யவில்லை. குறிப்பாக வடஇந்தியாவில் வறட்சி கடுமையாக இருந்தது. 2016-17ஆம் ஆண்டில் தென்மாநிலங்கள் தவிர, வடஇந்தியா முழுவதும் பரவலாக நல்ல மழை பெய்தது. அதனால் காரிப் பருவத்தில் (சூன்-அக்டோபர்) பயிர்களில் நல்ல விளைச்சல் கிடைத்தது. **அக்டோபர் மாதத்தில் விளைச்சல் சந்தைக்கு வந்த நிலையில், நரேந்திர மோடி ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் செல்லாது என்று நவம்பர் 8 அன்று அறிவித்தார். அதனால் பணப்புழக்கம் அடியோடு நின்றுவிட்டது. எனவே உழவர்கள் காரிப் பருவத்தின் விளைபொருள்களை விற்க முடியாமல் தவித்தனர். மண்டிக்காரர்களிடமும் பணம் இல்லாததால் இவற்றை வாங்க முன்வரவில்லை. மேலும் ராபி பருவத்திற்கான (நவம்பர் - மார்ச்சு) சாகுபடியைச் செய்வதற்கு விதை, உரங்கள் வாங்குவதற்குப் பணம் கையில் இல்லாமல் திண்டாடினர். மோடி அரசின் பணமதிப்பு நீக்க நடவடிக்கையால் உழவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.**

ராபி பருவப் பயிர்களின் விளைச்சலும் நன்றாக இருந்தது. ஆனால் ஏப்பிரல், மே மாதங்களில் கோதுமை, சோயா, மிளகாய், வெங்காயம், வெள்ளைப் பூண்டு, கொண்டைக்கடலை, துவரை, தக்காளி, வெந்தயம் முதலான விளைபொருள்களின் விலை முன் எப்போதும் இல்லாத அளவில் வீழ்ச்சியடைந்தன. சில எடுத்துக்காட்டுகள் :

| | சந்தையில் கடந்த ஆண்டின் விலை ரூ. (100 கிலோவுக்கு) | சந்தையில் இந்த ஆண்டின் விலை ரூ. (100 கிலோவுக்கு) |
|---|---|---|
| 1. சோயா | 5000 | 2400 |
| 2. கொண்டைக்கடலை | 9000 | 4000 |
| 3. வெள்ளைப்பூண்டு | 13000 | 1000 |
| 4. வெந்தயம் | 9000 | 3000 |
| 5. கோதுமை | 1900 | 1200 |

**கோதுமையின் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டால் (100 கிலோ) ரூ.1625. ஆனால் உழவர்கள் ரூ.800 முதல் ரூ.1,100 விலையில் விற்க நேரிட்டது.**

துவரையில் மகாராட்டிரத்தில் கடந்த ஆண்டைவிட 5 மடங்கு அதிகமாக விளைச்சல் இருந்தது. அந்தச்



*மத்தியப்பிரதேசத்தில் துப்பாக்கிச் சூட்டில் ஆறு உழவர்கள் கொல்லப்பட்டதைக் கண்டித்துத் தமிழ்நாட்டில் திருவாரூரில் விவசாய சங்கத்தினர் நடத்திய ஆர்ப்பாட்டம்.*

சூழலில் நடுவண் அரசு, ஆப்பிரிக்க நாடான மொசாம்பிக்கிலிருந்து துவரையை இறக்குமதி செய்தது. அதனால் சந்தையில் துவரை விலை மேலும் வீழ்ந்தது.

2016 செப்டம்பரில் கோதுமை மீதான இறக்குமதி வரி 25 விழுக்காடாக இருந்தைப் பத்து விழுக்காடாக நடுவண் அரசு குறைத்தது. 2016 திசம்பரில் கோதுமை மீதான இறக்குமதி வரியை முற்றிலுமாக நீக்கியது. மேலும் உக்ரைன் நாட்டிலிருந்து கோதுமையைக் குவிண்டால் ரூ.1400 விலையில் இந்தியா இறக்குமதி செய்தது. இதனால் சந்தையில் கோதுமை விலை மேலும் குறைந்தது. இராஜஸ்தானில், பா.ச.க. அரசு, உழவர்களுக்கான மின் கட்டணத்தை 40 விழுக்காடு உயர்த்தியது.

**2014 நாடாளுமன்றத் தேர்தல் அறிக்கையில் பா.ச.க. வேளாண் விளைபொருள்களுக்கு அவற்றின் உற்பத்திச் செலவில் 50 விழுக்காடு இலாபம் கிடைக்கும் வகையில் விலை நிர்ணயம் செய்யப்படும் என்று வாக்குறுதி அளித்தது. ஆனால் பா.ச.க. ஆட்சியில் இருக்கும் மகாராட்டிரம், மத்தியப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் 2017 ஏப்பிரல், மே மாதங்களில் விளைபொருள்களுக்குக் குறைந்தபட்ச ஆதரவு விலை நிர்ணயிக்கப்படாததுடன், இவற்றை அரசு கொள்முதல் செய்ய எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் கொதிப்படைந்த உழவர்கள் சூன் 1 முதல் பத்து நாள்களுக்குப் போராட்டம் நடத்தப்போவதாக அறிவித்தனர்.**

அதன்படி மகாராட்டிரத்திலும் மத்தியப்பிரதேசத்திலும் உழவர்கள் நெடுஞ்சாலைகளில் வெங்காயம், தக்காளி, காய்கறிகள், பால் ஆகியவற்றைக் கொட்டி ஆர்ப்பாட்டம் செய்தனர். காய்கறிகள், பால் ஆகியவை நகரங்களுக்குச் செல்லவிடாமல் தடுத்தனர்; வாகனங்களைத் தாக்கினர். மாநில அரசுகள் உழவர் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முன்வரவில்லை. இந்நிலையில் மத்தியப்பிரதேச முதலமைச்சர் சவுகான் பா.ச.க.வின் உழவர் அமைப்பான பாரதிய கிசான் சங்கத்தைச் சேர்ந்த சிலரை உடன் வைத்துக்கொண்டு, உழவர்கள் போராட்டத்தைத் திரும்பப் பெற்றுக்கொண்டு விட்டதாகச் செய்தியாளர்களிடம் 5.6.17 அன்று அறிவித்தார். இதனால் கடும் சினம்கொண்ட உழவர்கள் 6.6.17 அன்று மன்ட்சார் மாவட்டத்தில் ஆயிரக்கணக்கில் திரண்டு காய்கறி அங்காடிகளை மூடச் செய்தனர். நெடுஞ்சாலையில் சென்றுகொண்டிருந்த வாகனங்களைத் தாக்கித் தீயிட்டனர். போபால், இந்தூர் முதலான பல இடங்களிலும் சாலைகளில் வாகனங்கள் தாக்கப்பட்டன. மன்ட்சாரில் காவல்துறையினர் துப்பாக்கியால் சுட்டதில் ஆறு உழவர்கள் மாண்டனர்.

இவ்வாறாக உழவர்கள் போராட்டம் வன்முறையாக வெடித்த பிறகுதான்-ஆறு உழவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட பிறகுதான் மத்தியப்பிரதேச அரசும்

மகாராட்டிர அரசும் உழவர்களுக்கான கடன் தள்ளு படியை அறிவித்தன. மகாராட்டிரத்தில் பால் விற்பனை விலையில் 70 விழுக்காடு உழவர்களுக்கு வழங்கப் படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கிரசு ஆட்சி செய்யும் பஞ்சாப், கருநாடக முதல்வர்களும் வேளாண் கடன் தள்ளுபடியை அறிவித்துள்ளனர்.

கடன் தள்ளுபடி செய்வது உழவர்களின் நெருக்கடி யான நிலையைத் தணிப்பதற்கு உதவுமே தவிர, வேளாண் சிக்கல்களுக்குத் தீர்வாகாது. இனியும் நடுவண் அரசும் மாநில அரசுகளும் வேளாண் சிக்கலை, உழவர்களின் துன்பத்தைப் புறக்கணிக்க முடியாது என்பதற்கான எச்சரிக்கைதான் சூன் மாதம் உழவர் கள் நடத்திய போராட்டம்.

**எல்லா விளைபொருள்களுக்கும் நியாயமான இலாபம் கிடைக்கும் வகையில் அரசுகள் விலை நிர்ணயம் செய்ய வேண்டும். சேமிப்புக் கிடங்குகள், குளிர்பதனக் கிடங்குகள் ஆகியவற்றைப் போதிய அளவில் ஏற்படுத்தி, அறுவடைக் காலங்களில் அரசு நிர்ணயித்த விலையில் விளைபொருள்களை உழவர் களிடம் வாங்க வேண்டும். இந்த நிலையை உண்டாக்கி விட்டால், தங்கள் கடனை அடைக்கவும், வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் உழவர்களுக்கு வாய்ப்பு அமையும். அந்நிலையில் கடன் தள்ளுபடி கோரிக்கை எழாது.**

நீர் அதிகம் தேவைப்படும் நெல், கோதுமை, கரும்பு போன்ற பயிர்களே பெரும் பரப்பில் பயிரிடும் நிலையைப் பசுமைப் புரட்சி உண்டாக்கிவிட்டது. அதிக உரம், அதிக அளவில் பூச்சிமருந்து ஆகியவற்றைப் பயன்படுத்துவதால் வேளாண்மையின் உற்பத்திச் செலவு கடுமையாக உயர்ந்துவிட்டது. அதனால் 85 விழுக்காட்டினராக உள்ள சிறு குறு உழவர்கள் தொடர்ந்து இழப்பையே சந்தித்து வருகின்றனர். நீர் குறைவாகத் தேவைப்படும் பருப்பு வகைகள், சிறுதானி யங்கள் போன்றவற்றை மானாவாரி நிலங்களில் பயிரிடப்படுவதை அரசுகள் ஊக்குவிக்க வேண்டும். கிடைக்கின்ற மழைநீரை மானாவாரி நிலங்களில் குட்டைகளில் சேமிக்கும் புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்த வேண்டும். உழவர்களுக்குத் தரமான விதைகள், உரங்கள் கிடைக்கச் செய்வது அரசின் பொறுப்பாகும்.

இயற்கை வேளாண்மை நல்ல மாற்றாக உருவாகி வருகிறது. மேலும் கால்நடை வளர்ப்பு, மீன்வளர்ப்பு மூலம் உழவர்களுக்குக் கூடுதல் வருவாய் கிடைப்ப தற்கான ஊக்கத்தை அளிக்க வேண்டும். உழவர்கள் துன்பத்திலிருந்து மீண்டு வரவும், நல்ல, இயல்பான வாழ்க்கை வாழவும் செய்ய வேண்டியது அரசுகளின் தலையாய கடமையாகும்.

## வெள்ளையாம்பட்டு சுந்தரம் மறைவு



திராவிட இயக்கப் பற்றாளர், தியாகராயரின் மரபில் வந்தவர், வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் 4.9.1933இல் பிறந்த வர். பெரியாரின் சுயமரியாதைக் கொள்கைகளில் ஈடுபாடு கொண்ட அவர் அதைப் பரப்புவதற்கென்றே சேகர் பதிப்பகத்தைத் தொடங்கி னார். உவமைக் கவிஞர் சுரதா அவர்களின் முதல் கவிதைத் தொகுப்பு ‘தேன்மழை’ யை இவர்தான் முதலில் வெளியிட்டார்.

ப. செங்குட்டுவன் அவர்கள் எழுதிய ‘பெரியார் ஒரு பொருள்முதல்வாதி’, ‘பெர்டன்ட்ரசல் வாழ்க்கை வர லாறு, ‘இங்கர்சால் பேசுகிறார்’ போன்ற நூல்களை வெளியிட்டவர். இன்னும் ஏராளமான நூல்களை வெளியிட்டு, பல எழுத்தாளர்களை ஊக்குவித்தார். சிறந்த மனிதநேயமிக்க மனிதரான அவர் 31.5.2017 அன்று மறைவுற்றார்.

சேகர் பதிப்பகத்தின் உரிமையாளர் மறைந்த வெள்ளையாம்பட்டு சுந்தரம் அவர்கள் பெரியார் காலத்திய சுயமரியாதைக்காரர். எனவேதான் அவர் “ஹலோ தேவாங்கர்” மாத இதழின் பதிவாளராக இருந்தார். மேலும் அவர் தோழர் வே. ஆனைமுத்து அவர்களைப் புரவலர் - தலைவராகக் கொண்டுள்ள அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப் பினர், பழங்குடியினர், மதச் சிறுபதன்மையினர் பேரவையின் சார்பில் 2015இல் வேலூரிலும் 2016இல் பண்ருட்டியிலும் நடத்தப்பட்ட அனைத்து வகுப்புகளுக்குமான விகிதாசார வகுப்புவாரி இடப் பங்கீட்டு மாநாட்டுக்குத் தாம் பிறந்த தெலுங்கு தேவாங்கர் சமுதாய மக்களிடம் சென்று நன்கொடை பெற்றுவந்து அத்தொகையை மாநாட்டு மேடையில் தோழர் வே.ஆனைமுத்துவிடம் வழங்கினார். மேலும் அவர் தம் சமுதாய மக்களிடம் சென்று பெரியார் ஈ.வெ.ராமசாமி-நாகம்மை கல்வி, ஆராய்ச்சி அறக் கட்டளைக்கும் நன்கொடை பெற்று வந்து அத்தொகை யைக் கடந்த ஆண்டு தோழர் வே. ஆனைமுத்து வின் பிறந்த நாளில் அம்பத்தூரில் அவரிடம் நேரில் வழங்கினார்.

சுயமரியாதைச் செயல்மணி வெள்ளையாம்பட்டு சுந்தரம் நடைபோட்ட பாதையில் நாமும் நடை போட்டு விகிதாசார வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை வென்றெடுப்போம் வாரீர்!

செய்தி : **கலசு. இராமலிங்கம்**

# சரிந்து வரும் இந்திய சமூக பொருளாதாரக் கட்டமைப்பு

- குட்டுவன்

விடுதலை பெற்ற இந்தியாவில் கடந்த 70 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு சமூகப் பொருளாதாரக் கட்டமைப்புகளில் குழப்பமும் தேக்க நிலையும் கடந்த மூன்றாண்டுகளாக பிரதமர் மோடி பதவி ஏற்றவுடன் நிலை கொண்டுள்ளது. இதனுடைய தற்காலிக நீண்ட விளைவுகள் பெருமளவிற்கு இந்திய சமூக ஒற்றுமையையும் பொருளாதார வீழ்ச்சியையும் ஏற்படுத்தும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

1950இல் பிரதமர் நேரு திட்டக்குழுவை தேசிய அளவில் உருவாக்கினார். திட்டக்குழு உருவாக்கி இரண்டு ஐந்தாண்டுத் திட்டங்களை அவர் ஆட்சிக் காலத்திலேயே நிறைவேற்றினார். மூன்றவாது ஐந்தாண்டு திட்டக்காலத்தில் நேரு மறைந்துவிட்டார். மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் ஒரு தொலை நோக்குப் பார்வை இல்லாமல் திட்டங்கள் தீட்டப்பட்டதால் அதனுடைய நீண்ட கால விளைவு வேளாண் துறையில் பெரும் துன்பத்தையும் துயரையும் உருவாக்கியது. இன்றும் அது தொடர்கிறது.

சான்றாக, வேளாண் துறையில் பசுமைப் புரட்சி என்ற பெயரில் அதிக அளவிற்கு உரங்களைப் பயன்படுத்தியதனால் தற்காலிகமாக உணவு உற்பத்தி இலக்குகளை அடைவதில் வெற்றி பெற்றாலும், பசுமைப் புரட்சி நடந்தேறிய பஞ்சாப் போன்ற மாநிலங்களில் இன்றைக்கு விவசாயிகள் தற்கொலை செய்து கொள்கிற அளவிற்கு நிலம் நச்சுத் தன்மையை அடைந்து உற்பத்தித் திறனை இழந்துவிட்டது. மேற்குவங்கம் உத்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் இந்த நில உரங்கள் உற்பத்திக்காக அதிகம் பயன்படுத்தாத காரணத்தினால் பெருமளவிற்கு நிலம் நச்சுத்தன்மை அடைவதிலிருந்து தடுக்கப்பட்டுள்ளது. அரிசி உற்பத்தியில் இன்றும் பல பின்னடைவுகளுக் கிடையில் மேற்குவங்கமும் உத்திர பிரதேச மாநிலமும்தான் அதிக உற்பத்தியைத் தருகின்றன. அதற்கு அடுத்த நிலையில்தான் ஆந்திரம் பஞ்சாப், தமிழ்நாடு, ஒடிசா, பீகார் ஆகிய மாநிலங்கள் உள்ளன.

தொழில்துறையில் கடந்த ஆண்டு 2016-2017இல் முதல் நான்கு மாத காலங்களில் தொழில்துறையின் பங்கு மூலதன சேமிப்பு நிரந்தர முதலீட்டு வீதம் ஆகியன சரிந்து வருகிறது. உற்பத்திக் காரணிகளும் வேலை வாய்ப்புகளும் சரிவைச் சந்திக்கும் போது ஒட்டுமொத்தப் பொருளாதார அமைப்பில் பூகம்பத்திற்கு ஒப்பான அதிர்வுகள் ஏற்படும். இத்தகைய சூழலிலும் வேளாண் தொழில் வளர்ச்சி மட்டும்தான் இன்றைக்குக் குறைந்து வருகின்ற நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சியைக் காப்பாற்றி வருகிறது.

சென்ற ஆண்டில் ஒட்டுமொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பு ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 600 கோடி




*பெங்களூரில் 2015இல் டி.சி.எஸ். நிறுவனத்தில் இருந்து வேலை நீக்கம் செய்யப்பட்ட ஊழியர்கள் நிர்வாக அதிகாரியின் முகமூடி அணிந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்*

அளவிற்குக் குறைந்துள்ளது என்பதை, மும்பையிலிருந்து வெளிரும் அரசியல் பொருளாதார ஏடு (சூன் 3, 2017) என்ற தலையங்கத்தில் குறிப்பிட்டுள்ளது. இந்த வீழ்ச்சியைக் கூடக் கணக்கிடுவதற்கு திட்டக்குழுப் போன்ற ஓர் அமைப்பு இல்லாததும் ஒரு பெரும் குறையாகச் சுட்டப்படுகிறது. 12ஆம் ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் இடையில் மோடி திட்டக்குழுவைக் கலைத்து விட்டதால், ஒன்றிய அரசிற்கே இந்தப் பொருளாதார சரிவுகளைப் பற்றித் துல்லியமாகக் கணக்கிட முடியவில்லை.

இன்றைக்கு இந்தியப் பொருளாதார வளர்ச்சியைக் காப்பாற்றி வருகிற வேளாண் துறைக்கு மோடி அரசு

நன்மைகளைவிடத் தீமைகள் தான் அதிகமாகச் செய்துள்ளது.

சான்றாக இந்தியாவின் வேளாண் உற்பத்தி முன்னிலையில் உள்ள மாநிலங்களில் விவசாயிகள் கடும் கடன் சுமையைச் சந்தித்து வருகின்றனர். மோடியால் உருவாக்கப்பட்ட நிதிஆயோக் அமைப்பு தற்காலிக துயர் துடைப்புத் திட்டத்தையோ நீண்டகால வளர்ச்சித் திட்டத்தையோ அளிக்காமல்; அது ஓர் ஒன்றிய அரசின் அடிமை அமைப்பாக உள்ளது. தமிழ் நாட்டில் இருந்து விவசாயிகள் தில்லியில் பல நாட்கள் போராடியும் மோடி அரசு விவசாயிகளின் நேர்மையான கோரிக்கைகளுக்குச் செவிச் சாய்க்கவில்லை. இன்றைக்கு உத்திர பிரதேசத்தின் முதல்வர் தன்னிச்சையாக விவசாயிகளின் கடன்களைத் தள்ளுபடி செய்துள்ளார். மத்திய பிரதேசத்தில் விவசாயிகளின் போராட்டத்தில் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டு விவசாயிகள் கொல்லப்பட்டுள்ளனர். பாஜக ஆளும் இந்த மாநிலம் தற்போது சில வேளாண் கடன் சலுகைத் திட்டங்களை அறிவிக்க முன் வந்துள்ளது. மோடி இந்த மூன்றாண்டு காலத்தில் வேலை வாய்ப்புகளைக் பெருக்குவதற்கு எந்த உருப்படியான திட்டங்களையும் மேற்கொள்ளவில்லை. ஆண்டிற்கு ஒரு கோடி வேலைவாய்ப்புகளைத் தருவேன் என்று தேர்தல் காலத்தில் அறிவித்த பிரதமர் மோடியின் வாக்குறுதி, தூள்தூளாகிப் போனது. தொழில் துறையின் எல்லாப் பிரிவுகளிலும் வேலை வாய்ப்பு குறைந்து வருகிறது. குறிப்பாக, பணித்துறையில் (service sector) மென்பொருள் உற்பத்தித் துறையில் பணியாற்றுகிறவர்கள் இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வேலைகளை இழந்து வருகின்றனர்.

மத்தியக் கிழக்கு நாடுகளில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ளதால் அந்த நாடுகளில் பணியாற்றும் ஊழியர்கள் அனுப்பும் மாதத் தொகை பல லட்சம் கோடி அளவிற்குக் குறைந்து வருகிறது. அவர்களும் வேலையிலிருந்து வெளியேறி இந்தியாவின் பல மாநிலங்களுக்குத் திரும்புகின்றனர்.

அமெரிக்கக் குடியரசுத் தலைவர் டிரம்ப் எடுக்கும் நடவடிக்கைகளால் ஏற்படும் பாதிப்பை- வேலையின்மையைப் பெருக்கும் நிலையை எதிர்கொள்ள ஒரு சரியான வெளிநாட்டு அணுகுமுறைக் கொள்கையைக் கடைப்பிடிக்க மோடி அரசு தவறிவிட்டது.

உயர் மதிப்புப் பணங்கள் செல்லுபடியாகாது என்ற அறிவிப்பால், வங்கிகளின் செயல்பாடுகள் முடங்கியுள்ளன.

2014ஆம் ஆண்டில் பொதுத் துறை வங்கிகளின் வாராக்கடன் 2 இலட்சத்து 61 ஆயிரத்து 843 கோடியாக இருந்தது. 2017இல் வாராக்கடன் 8 இலட்சம் கோடியாக உயர்ந்துள்ளது. சூன் 9 2017 ‘‘தமிழ் இந்து’’வில் வணிகவீதி பகுதியில் எம்.ரமேஷ் என்ற கட்டுரையாளர் 2017ஆம் ஆண்டில் மத்திய அரசு தாக்கல் செய்த நிதி பட்ஜெட் செலவு மதிப்பு ரூ.9.72 லட்சம் கோடியாகும். ஆக வங்கிகளின் வாராக்கடன் தொகையை வசூல் செய்தால் மத்திய அரசின் பட்ஜெட்டையே போட்டுவிட முடியும் என்று சுட்டியுள்ளார். மேலும் வாராக்கடனைப் பெற்று வங்கிக்குச் செலுத்த வேண்டிய குழுமங்களின் பட்டியலையும் பின்வருமாறு வெளியிட்டுள்ளார்:

1. அம்பானியின் ரிலையன்ஸ் ரூ.1.25 லட்சம் கோடி
2. வேதாந்தா குழுமம் ரூ.1.03 லட்சம் கோடி
3. எஸ்ஸார் குழுமம் ரூ.1.01 லட்சம் கோடி
4. அதானி குழுமம் ரூ.96,031 கோடி
5. ஜே.பி. குழுமம் ரூ.75,163 கோடி
6. ஜே.எஸ்.டபிள்யு குழுமம் ரூ.58,171 கோடி
7. ஜி.எம்.ஆர்.குழும் ரூ.47,976 கோடி
8. வான்கோ குழுமம் ரூ.47,102 கோடி
9. வீடியோகான் குழுமம் ரூ.45,405 கோடி
10. ஜி.வி.கே குழுமம் ரூ.33,933 கோடி.

**இந்த 10 நிறுவனங்கள் 2016ஆம் ஆண்டுவரை செலுத்த வேண்டிய கடன் தொகை ரூ.573682 கோடிகளாகும்.** இதைத்தவிர தனி நபர்கள் வங்கிகளிடமிருந்து பெற்ற கடன் விவரங்களை வெளியிடுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி மறுப்புத் தெரிவிக்கிறது. 1934ஆம் சட்டத்தின்படி இவ்வாறு வெளியிடக்கூடாதாம். ஆனால் வங்கிகளிடமிருந்து மாணவர்கள் பெற்ற கல்வி கடன்களையும் விவசாயிகள் பெற்ற கடன்களையும் திரும்பப் பெறுவதற்கு சொத்துப் பறிமுதல் நடவடிக்கைகளை வங்கிகள் மேற்கொள்கின்றன. இதிலிருந்து இந்திய வங்கிகளை யார் கட்டுப்படுத்துகிறார்கள்? யாரைக் காயப்படுத்துகிறார்கள்? என்று வெட்ட வெளிச்சமாகிறது.

தனியார் வங்கியின் வாராக்கடன்களையும் சேர்த்தால் 7 லட்சம் கோடி அளவிற்கு உயர்ந்து வருகிறது. பொதுத்துறை வங்கிகளில் கடன் பெற்றோர் பெரும்பாலானோர் இந்தியப் பெருமுதலாளிகளே ஆவர். 2016இல் பிப்ரவரித் திங்களில் ஒரு இலட்சம் கோடி வாராக்கடனைத் தள்ளுபடி செய்துவிட்டனர். டிசம்பர் 2016இல் தள்ளுபடி செய்த தொகையின் அளவு ஒரு இலட்சத்து 54 ஆயிரம் கோடியாக உயர்ந்துள்ளது. சரிகின்ற பொருளாதாரத்தைத் தாங்கிப் பிடிக்கும் விவசாயிகளுக்குக் கடன் தள்ளுபடி செய்வது குறித்து இன்னும் ஒரு செயல்திட்டத்தையும் உருவாக்காதது தில்லி நடுவண் அரசு ஆட்சியாளர்கள் பொருளாதார உண்மைகளை புள்ளிவிவரங்களை உணராமல் பெரும் முதலாளிகள் பக்கமே சாய்ந்து வருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுகின்றது. பணமதிப்பு நீக்க

நடவடிக்கையால் பெரும்பாலும் ஏழை நடுத்தர மக்கள் விவசாயிகள்தான் பாதிப்புக்கு உள்ளாயினர் என்பதைப் பல வல்லுநர்கள் தரவுகளுடன் சுட்டியுள்ளனர். இந்த நெருக்கடியான காலகட்டத்தில் சிறுதொழில் புரிவோர் சிறுவணிகர்கள் வங்கிகளில் கடன்களைப் பெற முடியாமல் பெரும் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளனர். இந்தியப் பொருளாதாரத்தில் அமைப்புசாராத் தொழில்கள் வழியாகத்தான் சாதாரண ஏழை எளிய மக்கள் வேலைவாய்ப்புகளைப் பெற்று வருகின்றனர். இந்தப் பொருளாதார வீழ்ச்சி அமைப்புசாராத் தொழிலாளர்களைப் பெருமளவில் பாதித்துள்ளது.

பொருளாதார வீழ்ச்சிக்கான காரணங்களை ஆய்வு செய்து தீர்வுக்கான திட்டங்களைத் தீட்டாமல், சமூகத் தளத்தில் பெரும் குழப்பங்களைச் செய்து வருகிறது ஒன்றிய மோடி அரசு. சான்றாக, உலக அளவில் பல வல்லுநர் குழுக்களும் மருத்துவக் குழுக்களும் இறைச்சி உணவில்தான் அதிகப் புரதம் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளனர். ஒடுக்கப்பட்ட மக்களும் சிறுபான்மை மக்களும் மாட்டிறைச்சியைக் குறைந்த விலையில் பெற்று தங்கள் உணவின் தேவையை எதிர்கொள்கின்றனர். ஆனால் திடீரென்று ஒன்றிய அரசு ஒரு அவசர அறிவிக்கை வழியாக மாட்டிறைச்சி உண்பதற்குத் தடையை ஏற்படுத்தியுள்ளனர். சரிந்து வருகிற இந்தியப் பொருளாதாரத்தில் மாட்டிறைச்சியினுடைய ஏற்றுமதிப் பங்கை உணராமல் இந்த மத வெறியர்கள் பொருளாதாரத்திலும் சமூகத்திலும் பெரும் பின்னடைவை ஏற்படுத்தி வருகிறார்கள். சான்றாக 2016-17 ஆண்டில் மட்டும் இந்தியாவினுடைய மாட்டிறைச்சி ஏற்றுமதி மதிப்பு ரூ.24 ஆயிரம் கோடிகளாகும். உலகிலேயே மாட்டிறைச்சி ஏற்றுமதி செய்யும் நாடுகளில் இந்தியா முதலிடத்திலும், பிரேசில் இரண்டாம் இடத்திலும், ஆஸ்திரேலியா மூன்றாம் இடத்திலும் உள்ளன. கடந்த 2000 ஆயிரம் ஆண்டுகளாக வேளாண் துறை வளர்ச்சியில் அதை ஒட்டிய துறையான கால்நடை வளர்ப்பு வளர்ச்சியும் பிரிக்க முடியாத அளவிற்கு இந்தியப் பொருளாதாரத்திற்குப் பால் நெய் வெண்ணெய் போன்ற பொருட்களையும் இத்துறை வழங்குகிறது. ஏற்றுமதியில் இந்தப் பொருட்களும் முதன்மை வகிக்கின்றன. இந்தியாவிற்கு ஓர் அறிவியல் பூர்வமான கால்நடை கொள்கை தேவை என்பதைப் பல வல்லுநர்கள் வலியுறுத்தியுள்ளனர். தேவையற்ற பசுக்களையும் எருமைகளையும் இறைச்சிக்காகப் பயன்படுத்தினால்தான், பால் தரக்கூடிய பசு எருமைகளுக்குத் தேவையான தீவனங்களையும் வழங்க முடியும் என்று குறிப்பிடுகின்றனர். மேலும் ஊட்டச்சத்து குறைபாடு உடைய குழந்தைகள் வடமாநிலங்களில்தான் 52 விழுக்காடு அளவிற்கு உள்ளனர் என்று, 2011 மக்கள் தொகை புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தும் இலவச கால்நடை வழங்கும் திட்டத்திற்காக இராஜஸ்தான் மாநிலத்திற்குச் சென்று பசு மாடுகளை வாங்கிக்கொண்டு திரும்பும் போது தமிழ்நாடு அரசு ஊழியர்களைப் பசு பாதுகாவலர்கள் என்ற பெயரில் கடுமையாகத் தாக்கி வன்முறையில் ஈடுபட்டுள்ளனர். இத்தகைய செயல்கள் ஊக்குவிக்கப்படுமானால் இந்தியா சிதறுண்டு போகும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இந்நிலையில் புரதம் நிறைந்த மாட்டிறைச்சி உண்பவர்களைத் துன்புறுத்துவதும் பாஜக ஆளும் ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் வேடிக்கை பார்ப்பதும் குழந்தைகளின் வளர்ச்சியையே பாதிக்கும்.

மேலும் உணவு உரிமை என்பது தனிமனித உரிமையாகும். உலகில் எந்த நாட்டிலும் உணவு உரிமையைப் பறிக்கின்ற செயல் நடைபெறவில்லை. மேலும் உணவு பண்பாட்டு உரிமையாகவும் போற்றப்படுகிறது. இவ்வாறு கடந்த மூன்றாண்டுகளாக மோடி அரசு பொருளாதாரத் திட்டங்களில் குழப்பத்தை ஏற்படுத்தி வருவதனால் இதுவரை காணாத அளவிற்கு ஏற்றத்தாழ்வுகள் பெருகி வருவதை அண்மை புள்ளி விவரங்கள் பறைசாற்றுகின்றன. 2010ஆம் ஆண்டில் ஒரு விழுக்காட்டு மக்கள் நாட்டின் 40.3 விழுக்காட்டு செல்வத்தைச் சுரண்டிச் சேர்த்துள்ளனர். இந்தச் செல்வந்தர்கள் மேலும் தங்களின் வருமானம் சொத்து இவற்றைப் பெருக்கி 2016இல் நாட்டின் 58.4 விழுக்காட்டு செல்வத்தைக் குவித்துள்ளனர். பணக்காரர்கள் கொழுத்த பணக்காரர்களாகவும் விரைந்து வளரும் போக்கு கடந்த மூன்றாண்டுகளில் அதிகரித்துள்ளது. 10 விழுக்காட்டு மக்கள், சொத்துக்களை 2014இல் 74 விழுக்காடு வைத்திருந்தனர். 2016இல் இவர்களின் சொத்து விழுக்காட்டு அளவு 80.7 அளவாக உயர்ந்துள்ளது. இது, கடந்த மூன்றாண்டுகள் மோடியின் ஆட்சியில் கடைப்பிடிக்கப்பட்டு வரும் மோசமான நிர்வாகத்தின் காரணமாக ஏற்பட்ட பின்னடைவாகும். உலகிலேயே ஏற்றத்தாழ்வுகள் மிக்க நாடுகளின் பட்டியலில் இந்தியா முதன்மை நாடாக உள்ளது என்பதையும் இக்கூற்று உணர்த்துகிறது. பெரும்பான்மையான மக்கள் துன்பத்திலும் துயரத்திலும் இளைஞர்கள் வேலையில்லாத் திண்டாட்டத்திலும் சிக்கித் தவிக்கும் சூழலில் இந்தப் பெரும் பிரச்சினைகளின் கவனத்தைத் திருப்புவதற்காக மதக் கருத்துக்களையும் மதவாதிகளையும் மதம் சார்ந்த பொருளாதாரக் கொள்கைகளையும் சமூகம் சார்ந்த சச்சரவுகளையும் பாஜகவும் அதனுடைய துணை அமைப்புகளான சங் பரிவாரங்களும் பரப்புகின்றனர். வெற்றி பெறுவதாக நினைத்துக் கொண்டு இந்தியாவையே புதைகுழிக்குத் தள்ளுகிறார்கள் என்ற உண்மை வெளி வரத் தொடங்கியுள்ளது.

# நெகிழ்மக் (PLASTIC) கலப்படங்கள்

- இராமியா

கலப்படம் என்பது குறைந்த விலையுள்ள ஒரு பெருளை, அதிக விலையுள்ள பெருளுடன் கலந்து, அதிக விலைக்கு விற்பதற்குச் செய்யும் செயலாகும். இது இன்று நேற்றல்ல; வர்க்க சமூகம் தேன்றிய போதே மனிதனின் மூளையில் கலப்பட எண்ணமும் தேன்றி விட்டது.

ஒரு அரசன் தனக்காகச் செய்யப்பட்ட மணிமுடியில், பொற்கெல்லன் தங்கத்துடன் பிற உலோகத்தையும் கலந்து செய்து விட்டானே என்று சந்தேகப்பட்டு அதை அறிய விரும்பினான். அது மணிமுடி ஆதலால் அதைச் சிதைக்காமல் கலப்படத்தைக் கண்டு பிடிக்க வேண்டும். இப்பணியை ஆர்க்கிமிடிசிடம் கெடுக்கப்பட்ட போது தான் அவர் (ஆர்க்கிமிடிஸ் தத்துவம் எனப்படும்) அமிழ்தலில் எடைக் குறைவுத் தத்துவத்தைக் கண்டு பிடித்தார். அத்தத்துவத்தின் கணக்கீடுபடி பொற்கொல்லன் செய்த கலப்படத்தைத் துல்லியமாகக் கண்டு பிடிக்க முடிந்தது. ஆகவே கலப்படம் என்பது மனித குலத்திற்கு ஒன்றும் புதிய செய்தி அல்ல.

ஆனால் அண்மைக் காலமாக நெகிழ்ம முட்டை, நெகிழ்ம அரிசிக் கலப்படங்கள் என்று ஒரு செய்தி மக்களிடையே பரபரப்பாகப் பரப்பப்பட்டது. அத்திருப்பணியில் அனைத்து ஊடகங்களும் போட்டி போட்டுக் கொண்டு முன் நின்றன. சமூக வலைத் தளங்களும் அதில் பின் வாங்கவில்லை. சீனாவில் இருந்து நெகிழ்ம முட்டைகள் இறக்குமதி ஆகின்றன என்று ஒரு வதந்தி பரப்பப்பட்டது. அது போலவே நெகிழ்ம அரிசியைப் பற்றியும் பெரும் வதந்தி பரப்பப்பட்டது.

நெகிழ்மத்தில் முட்டையைச் செய்ய முடியாது என்பது ஒரு புறம் இருக்கட்டும். முதலில் சீனாவில் இருந்து முட்டை இறக்குமதி செய்யப்படுகிறதா? இல்லையே! மேலும் நெகிழ்மத்திலே அல்லது நெகிழ்மக் கலப்பிலே முட்டையைச் செய்தால், அதன் விலை கோழி / வாத்து முட்டையை விடப் பல மடங்கு அதிகமாக அல்லவா இருக்கும்? அதை யாராவது செய்ய முற்படுவார்களா? இதைப் பற்றி எல்லாம் சிறிதும் கவலைப்படாமல், சுய தணிக்கை அல்லது அரசுத் தணிக்கை என எவ்விதத் தணிக்கையும் இன்றி இந்த வதந்திகள் சீரும் சிறப்புமாக உலா வந்தன.

நெகிழ்ம அரிசியைப் பற்றிய வதந்தியைப் பற்றி, 17.6.2017 அன்று அரிசி வணிகர்கள் சங்கத் தலைவர் கூறுகையில், எந்த வணிகரும் அரிசியில் நெகிழ்மத்தைக் கலந்து இழப்பை ஏற்படுத்திக் கொள்ள மாட்டார் என்றும், ஆகவே மக்கள் நெகிழ்ம அரிசி பற்றிய வதந்தியை நம்ப வேண்டாம் என்றும் கேட்டுக் கெண்டார்.



இதே போல் நெகிழ்ம முட்டை என ஒன்று கிடையாது என்று இப்புகார்களை விசாரித்த அரசு அதிகாரிகளும் கூறி உள்ளனர்.

அப்படி என்றால் இது பேன்ற வதந்திகளை ஊடகங்கள் ஏன் போட்டி போட்டுக் கெண்டு பரப்பின? சமூக வலைத் தளங்களிலும் சிலர் ஏன் மூச்சைப் பிடித்துக் கெபண்டு எழுதி நேரத்தை வீணடிக்கின்றனர்?

முதலாளித்துவப் பெருளாதாரம் 2008ஆம் ஆண்டில் சிக்கிய நெருக்கடியில் இருந்து இன்னும் மீள முடியவில்லை. இது போன்ற ஒவ்வொரு நெருக்கடியின் பேதும் உலகில் ஆங்காங்கே போர்களையும், கலகங்களையும் விளைவிப்பது முதலாளிகளின் வழக்கம். அப்படி நடக்கும் போர்களினாலும் கலகங்களினாலும் அழிவுக்கு உள்ளாகும் பண்டங்களை உற்பத்தி செய்யக் கிடைக்கும் வாய்ப்பில், நெருக்கடியில் இருந்து மீள்வதும் அவர்களுடைய உத்தி. ஆனால் இம்முறை அந்த உத்திகள் எதிர்பார்த்த பயனை அளிக்கவில்லை. மக்களால் நெருக்கடியினால் ஏற்பட்டு உள்ள வலியை மறக்க முடியாமல் தவிக்கின்றனர். வேலை இல்லாத் திண்டாட்டம் மேலும் மேலும் பெருகிக் கொண்டே தான் இருக்கிறது.

இந்நிலையில் மக்கள் சரியான திசையில் சிந்தித்து விடக் கூடாது என்ற அவசர உணர்வு முதலாளித்துவ அறிஞர்களைக் கவ்விக் கொண்டு உள்ளது. ஆகவே மக்களிடையே இது பேன்ற வதந்திகளைப் பரப்பி, மக்களின் சிந்தனைகளை ஆக்கிரமித்துக் கெண்டு இருக்கின்றனர்.

மக்களே! நீங்கள் முதலாளித்துவ அறிஞர்களின் சதிவலையில் சிக்கி, நம் நலன்களுக்கு எதிரான திசையிலேயே சிந்தித்துக் கொண்டு இருக்கப் போகிறீர்களா? அல்லது இவர்களுடைய சூழ்ச்சிகளை எல்லாம் முறியடிக்கும் விதத்தில் உழைக்கும் மக்களின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் விதமாக சோஷலிச அரசை அமைப்பதற்கு அணியமாகப் போகிறீர்களா?

# உழைக்கும் வேளாண் மக்களின் வாழ்வாதாரத்தைப் பறிக்கும் இந்துத்துவ மோடி அரசின் புதிய மாட்டுச் சந்தை விதிகள்

க. முகிலன்

**2017** மே 26 அன்றுடன் நரேந்திர மோடி இந்தியாவின் தலைமை அமைச்சராகப் பதவி ஏற்று மூன்று ஆண்டுகள் முடிந்தன. மூன்று ஆண்டுக்கால ஆட்சியின் நிறைவு விழாவில் - அசாம் மாநிலத் தலை நகரான கவுகாத்தியில் உரையாற்றிய நரேந்திர மோடி, "நான் கனவு காணும் புதிய இந்தியாவில் எந்தத் துறையும் வளர்ச்சியடையாமல் இருக்காது" என்று கூறினார். ஆனால் நரேந்திர மோடியின் மூன்று ஆண்டுகால ஆட்சியில் வெற்று ஆரவார முழக்கங்கள் ஓங்கி ஒலித்தனவே தவிர, வாக்குறுதிகளில் எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

1. 2014இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரையின்போது, வெளிநாட்டில் இந்தியர்கள் பதுக்கிவைத்துள்ள கருப்புப் பணத்தை மீட்டு வந்து ஒவ்வொரு இந்தியரின் வங்கிக் கணக்கிலும் உருவா 15 இலட்சம் போடுவேன் என்று மோடி முழங்கினார். வெளிநாட்டு வங்கிகளிலிருந்து ஒரு காசும் கொண்டுவரப்படவில்லை.
2. இந்தியாவில் உள்ள கருப்புப் பணத்தையும், கள்ளப் பணத்தையும் ஒழிப்பதற்காக என்று கூறி கடந்த 2016 நவம்பர் 8 அன்று திடீரென ஒரே நாளில் ரூ.500, ரூ.1000 பணத்தாள்கள் செல்லாது என்று அறிவித்தார். இந்நடவடிக்கையால் பணப்புழக்கம் முடங்கியது. மக்கள் பலவகையான துன்பங்களுக்கு உள்ளாயினர். தொழில்களும் வணிகமும் முடங்கின. வேலையிழப்புகள் ஏற்பட்டன. ஆனால் இன்றுவரை பண மதிப்பு நீக்க நடவடிக்கையால் எவ்வளவு கருப்புப் பணம் வெளிக்கொண்டு வரப்பட்டது என்று கூறாமல் மோடி ஆட்சி வாய்மூடிக் கிடக்கிறது.
3. வளர்ச்சி என்ற முழக்கத்தை முன்னிறுத்தி வெற்றி பெற்ற மோடியின் ஆட்சியில், நாட்டின் மொத்த உற்பத்தி மதிப்பு (GDP) குறைந்து வருகிறது. 2015-16இல் 8 விழுக்காடாக இருந்த ஜி.டி.பி., 2016-2017ஆம் ஆண்டில் 7.1 விழுக்காடாக வீழ்ச்சியடைந்துள்ளது. பணமதிப்பு நீக்க நடவடிக்கைக் குப்பின் 2017 சனவரி - ஏப்பரல் வரையிலான காலாண்டில் ஜி.டி.பி. 6.1 விழுக்காடாகக் குறைந்தது. **பணமதிப்பு நீக்க நடவடிக்கை உற்பத்தியை எந்த அளவுக்குச் சீர்குலைத்திருக்கிறது என்பதற்கு இதுவே சரியான சான்றாகும்.**




*இது ஈரோடு மாட்டுச் சந்தை - மாட்டுச் சந்தையின் புதிய விதிகளுக்குப்பின் சந்தைக்கு வரும் மாடுகள் 90% குறைந்துவிட்டன.*



*சென்னை ஐ.ஐ.டி-யில் மாட்டுக்கறி விருந்தில் கலந்து கொண்ட தற்காகத் தாக்கப்பட்ட முதுநிலை ஆய்வு மாணவர் ஆர்.சுராஜ்*



*சுராஜ் தாக்கப்பட்டதைக் கண்டித்து ஐ.ஐ.டி-யில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்*

4. மன்மோகன் சிங் ஆட்சியின் இறுதி ஆண்டில் (2013-14) வேளாண்மைத் துறையின் வளர்ச்சி 3.6 விழுக்காடாக இருந்தது. மோடியின் மூன்று ஆண்டுகள் ஆட்சியில் இது 1.7 விழுக்காடாகச் சரிந்துவிட்டது.

5. மோடி ஆட்சியில் ஆண்டுதோறும் 12,000க்கு மேற்பட்ட உழவர்கள் தற்கொலை செய்து கொண்டனர்.

6. பல மாநிலங்களில் உழவர்கள் தங்கள் விளை பொருள்களுக்கு உரிய விலை கிடைக்கவில்லை என்று கூறி விளைபொருள்களை நெடுஞ்சாலைகளில் கொட்டிப் போராடி வருகின்றனர்.

   ஊழலற்ற ஆட்சியை அளிப்போம் என்று வாக்குறுதி அளித்த மோடி, நடுவண் அரசிலும், மாநில அரசுகளிலும் உயர் மட்டத்தில் நடைபெறும் ஊழல்களை விசாரிக்கும் அதிகாரம் கொண்ட லோக்பால், லோக் ஆயுக்தா அமைப்புகள் செயல்பாட்டுக்கு வரவிடாமல் முட்டுக்கட்டைப் போட்டுக் கொண்டிருக்கிறார். லோக்பால், லோக் ஆயுக்தா சட்டம் 2013இல் மன்மோகன் சிங் ஆட்சியில் இயற்றப்பட்டது.

7. **லோக்பால், லோக் ஆயுக்தா சட்டம் இயற்றி மூன்று ஆண்டுகள் ஆன பிறகும், அதை ஏன் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை என்று நடுவண் அரசை நோக்கி உச்சநீதிமன்றம் கேள்வி எழுப்பியது. வழக்கம்போல் மோடி அரசு, இவ்வாறு கேள்வி கேட்பதற்கு உச்சநீதிமன்றத்துக்கு அதிகாரம் இல்லை என்று கூறியது.**

8. ஆண்டிற்கு ஒரு கோடிப் பேருக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று 2014 பா.ச.க.வின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்டது. ஆனால் எல்லாத் துறைகளிலும் வேலை இழப்புகள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. தகவல் தொழில்நுட்பத் துறையில் இந்திய அளவில் 40 இலட்சம் பேர் பணிபுரிகின்றனர். 2017 முதல் அடுத்த மூன்று ஆண்டுகளில் ஆண்டிற்கு இரண்டு இலட்சம் பேர் இத்துறையில் வேலை இழப்பார்கள் என்று கூறப்படுகிறது (The Hindu, 15.5.2017).

மூன்று ஆண்டுக்கால ஆட்சியின் தோல்விகளை மூடி மறைக்கவும் திசைதிருப்பவும் நரேந்திர மோடி பதவி ஏற்ற நாளான மே 26 அன்று “விலங்குகள் துன்புறுத்தல் தடுப்பு (கால்நடைச் சந்தைகளை முறைப்படுத்தல்) விதிகளை” அறிவித்தது நடுவண் அரசு.

சந்தையில் மாடுகளை விற்பதற்கும் வாங்குவதற்கும் புதிய கட்டுப்பாடுகளை விதிக்கும் 23.5.17 நாளிட்ட அறிவிக்கையை சுற்றுச்சூழல் துறை அமைச்சகம் 26.5.2017 அன்று வெளியிட்டது. 1960ஆம் ஆண்டின் விலங்குகள் துன்புறுத்தல் தடுப்புச் சட்டத்தின்கீழ் இப்புதிய விதிகள் அறிவிக்கப்பட்டுள்ளதாகச் சுற்றுச்சூழல் அமைச்சகம் தெரிவித்துள்ளது.

**இப்புதிய விதிகளின்படி, இறைச்சிக்காகவோ அல்லது மதச்சடங்குகளில் பலியிடுவதற்காகவோ சந்தையில் மாடுகளை விற்கவோ வாங்கவோ கூடாது. இதில் பசு மட்டுமின்றி எருது, எருமை, கன்றுகள், ஒட்டகம் ஆகியவையும் அடங்கும். இதன்மூலம் மாட்டு வணிகத்தை ஒரு குற்ற நடவடிக்கை என்று மோடி அரசு அறிவிக்கிறது.**

வேளாண்மைக்குத் தேவையான கால்நடைகளைப் பராமரிப்பது, மாட்டிறைச்சி உண்போருக்குத் தரமான இறைச்சியைக் கிடைக்கச் செய்வது ஆகியவையே இந்த விதிகளின் நோக்கம் என்று மோடி அரசு கூறுகிறது. இதைவிட பித்தலாட்டமான கூற்று வேறு இருக்க முடியுமா? இறைச்சிக்காக மாடுகளை விற்கவோ, வாங்கவோ கூடாது என்கிற இந்த ஆணையின் உண்மையான நோக்கம் மாட்டு வணிகத்திலும், மாட்டி

றைச்சி விற்பனையிலும், தோல் தொழில்களிலும் பெரும் எண்ணிக்கையினராக இருக்கும் இசுலாமியரின் வாழ்வாதாரத்தைப் பறிப்பதே ஆகும். இக்குறுகிய நோக்கத்திற்காகக் கோடிக்கணக்கான வேளாண் மக்களின் வாழ்வாதாரமாக விளங்கும் கால்நடை வளர்ப்புத் தொழிலையே அடியோடு குலைத்திட முனைந்துள்ளது மோடி அரசு. அத்துடன் பசு புனிதமானது என்கிற இந்துத்துவ உணர்ச்சியை வளர்த்தெடுத்து அதைத் தன்னுடைய அரசியல் மூலதனமாக மாற்றுவதும் மோடி அரசின் மற்றொரு நோக்கமாகும்.

நோயுற்ற மாடுகள் இறைச்சிக்காக விற்கப்படாமல் தடுப்பது இப்புதிய விதியின் நோக்கம் என்று அரசுத் தரப்பில் கூறப்படுகிறது. 2015-16ஆம் ஆண்டில் கோழி, ஆடு, மாடு, பன்றி ஆகியவற்றின் இறைச்சி மதிப்பும், மொத்த இறைச்சி மதிப்பில் அவற்றின் விழுக்காடும் கீழே தரப்பட்டுள்ளது :

| | மதிப்பு - கோடி உருபா | மொத்த மதிப்பில் அதன் விழுக்காடு |
|---|---|---|
| 1. கோழி இறைச்சி | 69,888 | 46.4 |
| 2. ஆட்டிறைச்சி | 52,345 | 34.8 |
| 3. மாட்டிறைச்சி | 23,232 | 15.4 |
| 4. பன்றி இறைச்சி | 5,133 | 3.4 |
| | ---------- | ---- |
| மொத்தம் | 1,50,598 | 100 |
| | ---------- | ---- |

(ஆதாரம் : ''ஃபிரண்ட்லைன்'', சூலை 7, 2017)

15.4 விழுக்காடு மதிப்புள்ள மாட்டிறைச்சி நோய் தாக்காததாக - தரமானதாக இருக்க வேண்டும் என்பதற்காகப் புதிய விதிகளைக் கொண்டுவந்துள்ள மோடி அரசு 84.6 விழுக்காடாக உள்ள மற்ற விலங்குகளின் இறைச்சியின் தரம் குறித்துக் கவலைப்படவில்லை. இதிலிருந்தே மோடி அரசின் இந்துத்துவத் திணிப்பைப் புரிந்து கொள்ளலாம்.

**கோழி, ஆடு, பன்றி ஆகியவை இறைச்சிக்காக என்று மட்டுமே வளர்க்கப்படுகின்றன. ஆனால் மாடுகள் இந்தியாவில் இறைச்சிக்காக என்று வளர்க்கப்படுவதில்லை. அய்ரோப்பிய நாடுகள், அமெரிக்கா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளில் இறைச்சிக்காக மாடுகள் வளர்க்கப்படுகின்றன. இந்தியாவில் உள்ள கால்நடைகள் விவரம் - அவற்றின் விழுக்காட்டில் :**

| | | |
|---|---|---|
| 1. | மாடு | 37.28 % |
| 2. | எருமை | 21.23 % |
| 3. | வெள்ளாடு | 26.40 % |
| 4. | செம்மறி ஆடு | 12.71 % |
| 5. | பன்றி | 2.01 % |
| 6. | மற்றவை | 0.37 % |



*விற்க முடியாமல் கைவிடப்பட்ட மாடுகள் தெருவோரக் கழிவுகளைத் தின்னும் அவலம்*

உலகில் உள்ள எருமைகளின் எண்ணிக்கையில் 58 விழுக்காடு இந்தியாவில் இருக்கின்றன. எருமை இறைச்சி குறிப்பாக நீர்வாழ் எருமைகளின் இறைச்சி அதிக அளவில் ஏற்றுமதியாகிறது. 2016ஆம் ஆண்டில் 11 மாதங்களில் 12.2 இலட்சம் டன் நீர்வாழ் எருமை இறைச்சி ஏற்றுமதி செய்யப்பட்டது. இதில் வியத்நாம் நாட்டிற்கு மட்டும் 46 விழுக்காடு ஏற்றுமதியானது.

கிராமப்புறங்களில் வேளாண்மைத் தொழில் நலிவுற்ற பின், குடும்பங்களின் வருவாய்க்கான ஆதாரமாகக் கறவை மாடுகள் இருந்து வருகின்றன. அதனால் கடந்த இருபது ஆண்டுகளில் பால் உற்பத்தி இரண்டு மடங்கு உயர்ந்திருக்கிறது. அதிக பால் தரும் கலப்பின மாடுகளின் எண்ணிக்கைப் பெருகி வருகிறது. மாடு ஒரு செல்வம். ஆனால் உத்தரப்பிரதேச மாநிலத்தில் நிலைமை தலைகீழாக இருக்கிறது. நாட்டிலேயே அதிக மாடுகள் உள்ள உ.பி.யில் கடந்த 15 ஆண்டுகளில் மாட்டிறைச்சி உற்பத்தி 253 விழுக்காடு வளர்ந்திருக்கிறது. ஆனால் பால் உற்பத்தி வெறும் 25 விழுக்காடு மட்டுமே உயர்ந்திருக்கிறது (தி இந்து 5.6.2017).

**சிறு, குறு உழவர்களாக, வேளாண் கூலித் தொழிலாளர்களாக, உதிரிப் பாட்டாளிகளாக இருக்கும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மக்களே கறவை மாடுகளைப் பெருமளவில் வளர்க்கின்றனர். சிறிய நகரங்கள் முதல் சென்னை போன்ற மாநகரங்களிலும் ஏழை, எளிய மக்கள் தங்கள் வருவாய்க்காகக் கறவை மாடுகளை வளர்க்கின்றனர். நடுவண் அரசின் புள்ளியியல் அமைச்சகத்தின் அறிக்கையின்படி 2015-16ஆம் ஆண்டில் உற்பத்தியான பாலின் மதிப்பு 5,50,171 கோடி உருபா ஆகும். இவ்வாறு கோடிக்கணக்கான மக்கள் சார்ந்திருக்கும் பால் உற்பத்திக்கே உலை வைக்கும் தன்மையில் மாட்டுச் சந்தை மீதான புதிய கட்டுப்பாடுகள் இருக்கின்றன.**



*பசுப் பாதுகாப்பு குண்டர்களின் தாக்குதல் அதிகம் உள்ள இராஜஸ்தான் மாநிலத்தில் கோசாலைகளில் பராமரிப்பின்றி நூற்றுக்கணக்கில் மாடுகள் மடிகின்றன.*

## உழவர் நலனுக்கு எதிரான புதிய விதிகள்

சந்தையில் விற்பதற்காக மாட்டைக் கொண்டுவரும் விவசாயி, தன் பெயர், முகவரி, புகைப்படம், மாட்டின் அடையாளம், (நல்ல வேளையாக மாட்டின் புகைப்படம் கேட்கப்படவில்லை), தான் விவசாயி என்பதற்கான நிலப்பட்டா ஆகியவற்றைக் கொண்டு வர வேண்டும். மாட்டை இறைச்சிக்காக விற்கவில்லை என்று எழுத்து வடிவில் உறுதிகூற வேண்டும். மாட்டைச் சந்தைக்குள் அனுமதிப்பதற்குமுன், கால்நடை ஆய்வாளர் அம்மாடு நோய் இல்லாமல் நல்ல நிலையில் இருக்கிறதா என்று ஆய்வு செய்வார்.

அதேபோல, மாட்டை வாங்குவதற்காகச் சந்தைக்கு வருபவரும் தான் ஒரு விவசாயி என்பதற்கான ஆதாரம், முகவரிக்கான சான்று, புகைப்படம் முதலானவற்றை வைத்திருக்க வேண்டும். வாங்கிய மாட்டை வேளாண்மைப் பணிக்குப் பயன்படுத்துவதை உறுதிசெய்யும் வகையில் அம்மாட்டை இறைச்சிக்காகவோ, பலியிடுவதற்காகவோ விற்கமாட்டேன் என்றும் ஆறு மாத காலத்திற்குள் மற்றவர்களுக்கு விற்கமாட்டேன் என்றும் எழுதித்தர வேண்டும். மாட்டை வாங்கியவர் சந்தையிலிருந்து அந்த மாட்டை வெளியில் கொண்டு செல்வதற்குமுன் விற்றவர்-வாங்கியவர் ஆகியோரின் முகவரிகள், உறுதிமொழிகள் அடங்கிய ஆவணத்தைத் தயாரிக்க வேண்டும். அந்த ஆவணத்தை அய்ந்து படிகள் எடுத்து விற்றவர், வாங்கியவர், வருவாய்த்துறை அலுவலர், கால்நடைத்துறை அலுவலர், மாவட்ட விலங்குகள் சந்தைக் கண்காணிப்புக்குழு ஆகியோரிடம் அளிக்க வேண்டும்.

தாராளமயம், தனியார்மயம், உலகமயம் கொள்கைகளை இந்திய அரசு 1991 முதல் செயல்படுத்தத் தொடங்கிய பிறகு, நாடுகளுக்கிடையில் பொருள்கள், தொழில்நுட்பச் சேவைகள் ஆகியவை எத்தகைய கட்டுப்பாடும் இல்லாமல் ஏற்றுமதி-இறக்குமதி செய்யப்படுகின்றன. ஆனால் மோடி ஆட்சியில் கிராமப்புறச் சந்தையில் ஒரு மாட்டை விற்கவும் வாங்கவும் இத்தனைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவது ஏன்? இந்துத்துவ அதிகார வெறியின் கோரதாண்டவமே இதற்குக் காரணமாகும்.

இப்புதிய விதிகளின்படி மாட்டுச் சந்தை செயல்படுகிறதா என்பதைக் கண்காணிக்க மாவட்ட விலங்குகள் சந்தைக் கண்காணிப்புக்குழு அமைக்கப்படும். மாவட்டத்தில் உள்ள எல்லாச் சந்தைகளும் இதில் பதிவு செய்து கொண்டு, அந்த விதிகளின்படி செயல்படவேண்டும்.

**இந்த அறிவிக்கையில், மாடுகளின் கொம்புகளைச் சீவக்கூடாது, வண்ணம் பூசக்கூடாது, மூக்கணாங்கயிறு போடக்கூடாது, அலங்கரிக்கக் கூடாது, கன்றுகளுக்கு வாய்க்கூடை போடக்கூடாது என்கிற விதிகளைப் பற்றி அறிய நேரிடும் உழவர்கள் இந்நாட்டின் ஆட்சியாளர்களின் அடிமுட்டாள்தனத்தை எள்ளிநகையாடுவார்கள் அல்லவா?**

## பயன்படாத மாடு உழவன் கழுத்தை நெரிக்கும் சுருக்குக் கயிறு

இறைச்சிக்காக மாடுகளைச் சந்தையில் விற்கக் கூடாது என்றால், பால் மடி வற்றிய மாடுகளையும்,

உழைப்புக்குப் பயன்படாத எருதுகளையும் என்ன செய்வது? அவற்றை விலைகொடுத்து வாங்கிச் சென்று கோசாலைகளில் மோடி அரசு பராமரிக்கத் தயாரா? 2012 கணக்கெடுப்பின்படி, பசுவதைத் தடைசெய்யப் பட்ட மாநிலங்களில் 52 இலட்சம் மாடுகள் அநாதை யாக அலைகின்றன. இவை அனைத்தும் விவசாயி களால் பராமரிக்க முடியாமல் கைவிடப்பட்டவை. ''பசுக்காவலர்கள்'' என்கிற குண்டர்கள் நிறைந்த இராஜஸ் தான் மாநிலத்தின் கோசாலைகளில் நூற்றுக்கணக்கில் மாடுகள் மடிகின்றன என்கிற செய்தி, புகைப்படங் களுடன் ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

**எனவே பயன்படாத மாடுகளை இறைச்சிக்காக விற்பது என்று இதுவரையில் இருந்த நடைமுறையே இச்சிக்கலுக்கான சரியான தீர்வாகும். பயன்படாத ஒரு மாட்டைப் பராமரிக்க ஒரு நாளைக்குக் குறைந்தது நூறு உருபா செலவிட வேண்டும். ஒரு மாதத்திற்கு 3000 உருபா செலவாகும். நடுவண் அரசின் தேசிய மாதிரி ஆய்வு அறிக்கையின்படி (NSSO) ஒரு விவ சாயியின் மாத வருவாய் உருவா 6500 ஆகும். தன் குழந்தைகளுக்கே ஊட்டமான உணவு அளிக்க முடியாத நிலையில் உழவர்கள் இருக்கின்றனர். அதனால்தான் இந்தியாவில் அய்ந்து அகவைக்கு உட்பட்ட சிறுவர் களில் 40 விழுக்காட்டினர் ஊட்டச்சத்து குறைபாடு களுடன் இருக்கின்றனர். இந்நிலையில் பயன்படாத மாட்டை ஒரு உழவனால் எப்படிப் பராமரிக்க முடியும்?**

பயன்படாத மாடுகளை மட்டுமல்லாது, காளைக் கன்றுகளையும் இறைச்சிக்காக விற்கும் நடைமுறையே விவசாயியின் வீட்டுப் பொருளாதாரத்திற்கும், கிராமப் பொருளாதாரத்திற்கும் ஏற்றதாக இருக்கிறது. மாட்டின் சராசரி வாழ்நாள் இருபது ஆண்டுகளாகும். ஒரு பசு அல்லது எருமை தன் வாழ்நாளில் எட்டு அல்லது பத்து கன்றுகளை ஈன்று தருகிறது. இவற்றில் நான்கைந்து கன்றுகள் காளைக் கன்றுகளாக இருக்கின்றன. வேளாண்மையில் கடந்த இருபது ஆண்டுகளில் உழவு முதல் அறுவடை வரை எல்லாம் இயந்திரமயமாகி விட்டதால் எருதுகளின் பயன்பாடு 90 விழுக்காடு குறைந்துவிட்டது. அதனால் கன்றுக் காளைகளை ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் வளர்த்த பின், இறைச்சிக்காகச் சந்தையில் விற்று வருகின்றனர். கன்றுகளை இறைச்சிக்காக விற்க முடியாவிட்டால் அடுத்த 15 ஆண்டுகளுக்கு அவற்றை எப்படிப் பராமரிக்க முடியும்?

மாட்டிறைச்சிக்கான மாடுகள் 90 விழுக்காடு மாட்டுச் சந்தையில்தான் கொள்முதல் செய்யப்படுகின்றன. இப்போது மோடி அரசால் அறிவிக்கப்பட்டுள்ள புதிய விதிகளின்படி பயனற்ற மாடுகளையும் காளைக் கன்று களையும் சந்தையில் இறைச்சிக்காகக் கொள்முதல் செய்ய முடியாத நிலையில் 22 இலட்சம் பேர் சார்ந்துள்ள மாட்டிறைச் சித் தொழில் சிதைந்து சீரழியும். தோல் தொழில் பெரிதும் பாதிக்கப்படும். இதற்குமுன் எருமை களை இறைச்சிக்காக விற்பதற்கு எந்த மாநிலத்திலும் தடை இல்லை. இப்போது இறைச்சிக்காக எருமை களையும் விற்கக்கூடாது என்கிற நிலையால் இப்புதிய விதிகளுக்கான எதிர்ப்பு வலுப்பெற்று வருகிறது. எருமை இறைச்சிதான் அதிக அளவில் உண்ணப்படுகிறது; ஏற்றுமதி செய்யப்படுகிறது.

**பயன்படாத மாட்டைப் பராமரித்தால் பால்தரும் மாட்டுக்கும் போதிய தீனி கிடைக்காது; அதனால் பால் உற்பத்தி குறையும். விவசாயிகளின் வருவாயும் பாதிக் கப்படும்.**

### புதிய விதிகள் சட்டத்துக்கு எதிரானவை

**இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி, இறைச்சிக்காகக் கால்நடைகளை வெட்டுவதை அனுமதிப்பதோ, தடுப்பதோ மாநிலத்தின் அதிகாரமாகும். இதனை முறைப் படுத்தவோ, தடுக்கவோ நடுவண் அரசுக்கு அதிகாரம் இல்லை. அதனால்தான் ஒவ்வொரு மாநிலமும் அதன் சூழ்நிலைக்கு ஏற்ப மாடுகளை இறைச்சிக்காக வெட்டு தல் குறித்துச் சட்டங்களை இயற்றி உள்ளன. கேரளம், திரிபுரா, நாகாலாந்து, மணிப்பூர், மேகாலயா ஆகிய மாநிலங்களில் பசு உள்ளிட்ட மாடுகளை இறைச்சிக் காக வெட்டுவதற்குத் தடை இல்லை. தமிழ்நாட்டில் வெட்டுவதற்குத் தகுதியானவை என்று சான்றிதழ் பெற்று மாடுகளை இறைச்சிக்காகப் பயன்படுத்தலாம்.**

எனவே நடுவண் அரசு, கொல்லைப்புற வழியாக நுழைவதுபோல், 1960ஆம் ஆண்டின் விலங்குகள் துன்புறுத்தல் தடைச் சட்டத்தின் (Prevention of Cruelty to Animal Act 1960) கீழ், 23.5.17 அன்று புதிய விதி களை அறிவித்துள்ளது. ஆனால் 1960ஆம் ஆண்டின் சட்டத்தில் பிரிவு 11(3)(e) விதியில், ''உணவுக்காக எந்தவொரு விலங்கையும் வெட்டுவதற்குத் தடை இல்லை; ஆனால் விலங்குகளுக்குப் பெருந்துன்பம் ஏற்படாத வகையில் வெட்ட வேண்டும்'' என்று கூறப் பட்டுள்ளது. மூலச் சட்டத்திலேயே இறைச்சிக்காக மாடு களை வெட்டலாம் என்று கூறப்பட்டுள்ள நிலையில் மோடி அரசு நிருவாக ஆணை மூலம் இறைச்சிக்காக மாடுகளைச் சந்தையில் விற்கக்கூடாது என்று அறிவித்திருப்பது சட்டத்துக்கு எதிரானதாகும்.

அரசமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் பகுதியில் விதி 19(1)(g)-யின்படி எந்தவொரு குடிமகனும் இந்தியாவின் எந்தப்பகுதியிலும் தான் விரும்பும் தொழிலைச் செய்யலாம். ஆனால் அத்தொழில் சட்டத்தால் தடைசெய்யப்பட்டதாக இருக்கக்கூடாது. விலங்குகள் துன்புறுத்தல் தடைச் சட்டம் நடுவண் அரசுக்கும், மாநில அரசுக்கும் அதிகாரம் உடையதாகும். இச்சட்டம் திருத்தப்படாத நிலையில் இறைச்சிக்கான மாட்டு வணிகம் செய்யவும், இறைச்சிக்காக மாடுகளை வெட்டவும் எந்தவொரு குடிமகனும் உரிமை உண்டு. எனவே

இந்துத்துவ வெறிகொண்ட பாசிச அதிகாரத்தால் கோடிக் கணக்கான மக்களின் வாழ்வதாரம் பாதிக்கப்படுவதைப் பற்றிக் கவலைப்படாமல் மோடி அரசு புதிய விதிகளை அறிவித்துள்ளமை குடிமக்களின் அடிப்படை உரிமைக்கு எதிரானதாகும்.

இப்புதிய விதிகளைக் காட்டி அரசு அலுவலர்களும், காவல்துறையும், பசுக்காவலர்கள் எனும் குண்டர்களும் மாடுகளை விற்கின்ற - வாங்குகின்ற உழவர்களையும், மாட்டு வணிகர்களையும் பலவகையிலும் துன்புறுத்துவார்கள்; கையூட்டு பெறுவார்கள்; தாக்குவார்கள். சிவகங்கை மாவட்டத்தின் அரசு கால்நடைப் பண்ணைக்காக மாடுகளை வாங்கிக் கொண்டு திரும்பிய தமிழக அரசு ஊழியர் 11.6.17 இரவு இராஜஸ்தானில் தாக்கப்பட்டனர். 1-4-2017 அன்று இராஜஸ்தானில் ஆல்வார் மாவட்டத்தில் அரியானாவைச் சேர்ந்த பெகலுகான் என்கிற மாட்டு வணிகர் கொல்லப்பட்டார். இதுபோன்ற தாக்குதல்கள் மாட்டு வணிகத்தை மட்டுமின்றி மாடு வளர்ப்போரின் வாழ்க்கையையும் சிதைக்கும்.

**கேரளம், புதுச்சேரி, மேகாலயா மாநிலச் சட்டமன்றங்கள் மோடி அரசின் புதிய அறிவிக்கைக்கு எதிராகத் தீர்மானம் இயற்றியுள்ளன. மேற்குவங்கம், பீகார், பா.ச.க. ஆட்சி செய்யும் கோவா முதலான மாநிலங்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளன. சென்னை உயர்நீதிமன்றத்தின் மதுரைக் கிளை மோடி அரசின் நிர்வாக ஆணைக்கு இடைக்காலத் தடை விதித்துள்ளது. உச்சநீதிமன்றம் இதுகுறித்து விசாரணை நடத்தி வருகிறது. ஆனால் அ.தி.மு.க. அரசு, மோடி அரசின் ஆணைகளுக்கு அடிபணிந்து ஒரு அடிமை போல் இருக்கிறது.**

**உழைக்கும் மக்களாக இருக்கின்ற தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர், பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், இசுலாமியர் ஆகியோரின் வாழ்வாதாரத்தைப் பறிக்கவும், இந்துத்துவ ஒற்றைப் பண்பாட்டைத் திணிக்கவும் மோடி அரசால் கொண்டுவரப்பட்டுள்ள இப்புதிய விதிகள் திரும்பப் பெறப்படும் வரையில் மக்களை அணிதிரட்டிப் போராடுவோம்.**

## வடபழனி ச.சுந்தரமூர்த்தி மகள் பத்தாம் வகுப்பில் பள்ளியில் இரண்டாம் இடம்

சென்னையில் மா.பெ.பொ.க.வின் களப்பணிகளுக்கும் மாதந்தோறும் சிந்தனையாளன் இதழை அஞ்சல் செய்யும் பணிக்கும் தன் நல்லுழைப்பை நல்கி வரும் வடபழனி தோழர் ச.சுந்தரமூர்த்தியின் மகள் சு.மலர்விழி பத்தாம் வகுப்புப் பொதுத் தேர்வில் 464 மதிப்பெண் பெற்றார். விருகம்பாக்கம் அரசு மேனிலைப் பள்ளியில் இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

## கால்களின் கேள்விகள்

**- பாவலர் வையவன்**

தலை, தோள், இடுப்பு
வகையறாக்களுக்கு
எங்கள்
கால்நிமிர்ந்த வணக்கங்கள்...

மேலது சமூகத்துக்கு
எங்களின் சில வினாக்களை
விண்ணப்பமாக வைக்கிறோம்.

காலகாலமாய் உங்களைச்
சுமந்து திரிகிறோமே
ஒருநாளேனும் எங்கள் வலியை
உணர்ந்ததுண்டா நீங்கள்?

உழைக்கும் கால்களுக்கு
செருப்புகூட இல்லாத நிலையில்
கழுத்துக்குச் சங்கிலியும்
கைகளுக்கு மோதிரமும்
தங்கத்தில் போட்டுத் தருக்குகிறீர்களே
வெட்கமாக இல்லையா உங்களுக்கு?

நாங்கள்தான்
நாலாந்தரமாயிற்றே...
முதல்தரமாகிய நீங்கள்
முன்னே போகவேண்டியதுதானே...?

ஏன் நீங்கள் எப்போதும்
எங்கள் மேலேயே
சவாரி செய்கிறீர்கள்?

‘தலையால்
நடக்கிற காலம்
ஒருபோதும் வராது’
என்பதுதானே
உங்கள் திமிருக்கெல்லாம்
காரணம்?

ஒன்றை மட்டும்
கவனத்தில் வையுங்கள்

எங்கள் இயக்கம் நின்றுவிடும்போது
மேலது மூன்றும்
பிணமாகத்தானே படுத்துக்கிடக்கும்?

**கட்டுரைத் தொடர்-51**

# திராவிடர் இயக்கங்கள்; தமிழ்த் தேசியத்திற்குத் தடைக்கல்லா? படிக்கல்லா?

- வாலாசா வல்லவன்

1938இல் நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின் விளைவாக தமிழக அரசியல் தளத்தில் மாபெரும் திருப்புமுனை ஏற்பட்டது. இனி இந்தியாவுடன் தொடர்ந்து இருக்கக்கூடாதது என்பதே அது. அதை வலியுறுத்தி ''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று விடுதலை ஏட்டில் அய்ந்து தொடர் கட்டுரைகள் எழுதப்பட்டது.

**தமிழ்நாடு தமிழருக்கே! - I**

''தமிழ்நாடு தமிழருக்கே'' என்று, இப்போது நடைபெற்று வரும் பிரசாரத்தைப் பற்றித் தமிழ்நாட்டில் எங்கும் பேசப்பட்டு வருகிறது. நம் எதிரிகளும், தங்கள் சுய நலத்திற்கு ஆகவே, நம் கூட்டத்தில் இருக்கும் சில வேஷதாரிகளும் இதைத் திரித்துக் கூறுவதும் இதைப் பற்றி விஷமப் பிரசாரம் செய்வதும், இதற்கு எதிரான ஒரு கிளர்ச்சியை உண்டாக்கச் சூழ்ச்சி செய்வதுமான காரியங்களைப்பற்றி நாம் கேள்விப்படுவதோடு சில விஷயங்களை நேரிலும் பார்க்கிறோம்.

இது விஷயமாய்ப் பெரியார் தூத்துக்குடியில் பேசிய பேச்சை வைத்து, மெயில் பத்திரிகை எழுதிய ஒரு கண்டனத்திற்குப் பெரியார் சென்னை, மெமோரியல் ஆலில் சொன்ன சமாதானம் சமீபத்தில் நம் பத்திரிகையில் வரக்கூடும். ஆனாலும், மெயில் பத்திரிகைக்கு பெரியார் எழுதி அனுப்பிய விளக்கம் 20ஆந் தேதி மெயிலில் பிரசுரிக்கப்பட்டிருப்பதுடன் அதன் தமிழ்க் கருத்து பின்னால் அநுபந்தமாய்ப் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

என்றாலும், இனி அப்பிரசாரம் தீவிரமாகச் செய்யப்பட வேண்டியிருக்கிறபடியால், அதைப் பற்றிய விளக்கத்தைத் தொடர்ந்து தலையங்கமாக எழுதுகிறோம்.

**குறிச்சொல் தோற்றம்**

**''தமிழ்நாடு தமிழருக்கே'' என்ற அபிப்பிராயம் சென்ற வருஷம் டிசம்பரில் சென்னையில் நடந்த தென்னிந்திய நல உரிமைச் சங்க (ஜஸ்டிஸ் கட்சி) மாநாட்டிலே வாசிக்கப்பட்ட பெரியார் தலைமைப் பிரசங்கத்திலேயே குறிப்புக் காட்டப்பட்டிருக்கிறது. மற்றும் அதற்கு முதல்நாள் வேலூரில் நடந்த தமிழர் மாநாட்டில் தலைமை வகித்த தோழர் சர்.ஏ.டி. பன்னீர்செல்வம் அவர்களும் தமது தலைமைப் பேருரையில் விளக்கி இருக்கிறார்கள்.**

மற்றும் அதுபற்றியே பெரிதும் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் சொல் இன்று தமிழ்நாடெங்கும் தமிழ் மக்களது இலட்சியக் குறிச்சொல்லாக தமிழ் மக்களால் ஒலிக்கப்படுகிறது. அன்றியும் தமிழ்நாடு தமிழருக்கு என்பதில் யாருக்காவது அதிருப்தியோ, அபிப்பிராய பேதமோ இருப்பதாக இதுவரையும் நமக்கு எவ்விதத் தகவலோ, மறுப்போ வந்ததும் கிடையாது.



**விஷமிகள் கூச்சல்**

பார்ப்பனப் பத்திரிகைகள் சிலவற்றிலும், அவர்கள் கூலிகளது வாய்கள் சிலவற்றிலும ஏதோ பொருத்தமற்ற கூப்பாடுகள் இரண்டொன்றைக் காணவும், கேட்கவும் நேர்ந்தது என்றாலும் அதுவும் எங்கும் மறுமுறை கிளம்பினதாகத் தெரியவில்லை.

ஒரு பார்ப்பனப் பத்திரிகை மாத்திரம் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றால், 'எலி வளை எலிகளுக்கே' என்று எழுதிற்று. மற்றொரு பார்ப்பனக் கூலியின் வாய் தமிழ்நாடு தமிழருக்கே என்றால், கர்நாடகனுக்கு தமிழ்நாட்டில் என்ன வேலை என்று கூவிற்று. உள்ளே இருந்தே உலை வைக்கக் கருதி இருக்கும் ஒரு தோழர் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்றால் ஆந்திரர் மலையாளி கதி என்ன ஆவது என்று விஷமப் பிரசாரம் செய்தார். இவை தவிர, வேறு விதமான எதிர்பார்ப்புகளோ, அதிருப்திகளோ வந்ததாக நமக்குத் தெரியவில்லை. எப்படி இருந்தாலும் சரி. அந்த இலட்சியமே இன்று தமிழ்மக்களின் குறிக்கோளாய் இருப்பதால் அதை விளக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

**நாத்திகமல்ல**

'தமிழ்நாடு தமிழருக்கே' என்பதில் நாத்திகமோ, மதமொழிப்போ, வகுப்புத் துவேஷமோ தொக்கி இருக்கிறது என்று யாராவது சொல்ல வருவார்களேயானால், அவர்கள் ஒன்று விஷயம் அறியாதவர்கள் அல்லது வேண்டுமென்றே விஷமப்பிரசாரம் செய்யும் அயோக்கியர்களேயாவார்கள். ஏன் என்றால் தமிழ்நாடு தமிழருக்கே என்று சொல்லும் தோழர்கள் சர். பன்னீர் செல்வம், குமார ராஜா அவர்கள் முதலாகிய தலைவர்கள் நாத்திர்களோ மதமொழிக்கும் உணர்ச்சி உடையவர்களோ அல்ல. மேலே குறிப்பிட்ட ஜஸ்டிஸ் மாநாட்டில் வாசிக்கப்பட்ட பெரியாருடைய தமிழ் தலைமைப் பிரசங்கத்தில் 12ஆவது பக்கத்தில் 2ஆவது பாராவில் 15ஆவது வரியில் இருந்து,

“வங்காளிகளிடமிருந்து, குஜராத்திகளிடமிருந்து, காஷ்மீரிகளிடமிருந்து, சிந்தியர்களிடமிருந்து தமிழ் நாட்டினர், ஆந்திர நாட்டினர், மலையாள கன்னட நாட்டினர் பிரிந்துபோக வேண்டுமென்று எண்ணுவது தேசியத்திற்கு விரோதமாகுமா? அதேபோல் ஆரியர்களிடமிருந்து திராவிடர்கள் பிரிந்து போக நினைப்பது தேசியத்திற்கு விரோதமாகுமா? ‘வெள்ளையர் ஆட்சியின் கீழ் இல்லாவிட்டால் நம்மைக் காத்துக் கொள்ள முடியாது’ என்றால், சிலோன் பர்மா இவைகளைப் போலவோ ஆஸ்ட்டிரேலியா, கனடா இவைகளைப் போலவோ தமிழ்நாடோ - திராவிட நாடோ பிரிந்திருக்கலாமல்லவா” என்று இருக்கிறது.

இந்தப் பிரசங்கம் படித்த பிறகே பெரியார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார். அவரது தலைமையை ஒப்புக்கொண்டு ஆரவாரம் செய்து பதினாயிரக் கணக்கான மக்கள் அதைப் பின்பற்றுவதாய் உறுதி கூறி அமர்ந்தார்கள். ஆதலால் அக்கருத்து ஜஸ்டிஸ் கட்சியினருக்கோ, தமிழர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கோ திடீரென்று புகுத்தப்பட்டதென்று சொல்ல முடியாததால் அதைப்பற்றி யாரும் எவ்வித விஷமப் பிரசாரமும் செய்வதற்கு இடமில்லை என்பதற்கு ஆகவே இதை எடுத்துக் காட்டுகிறோம். மற்றும் அதே பிரசங்கத்தில் இக்கருத்துக்கு அவசியமான காரணங்களும் மிகமிக விளக்கமாகக் கூறப்பட்டிருப்பதால் தமிழ்மக்கள் மற்றொரு முறையும் அப்பிரசங்க முழுமையும் படித்துப் பார்க்க விரும்புகிறோம்.

### தமிழ்நாடு என்றால் திராவிடமே!

தமிழ்நாடு என்று இதுகாறும் பேசியும், எழுதியும் வருவதெல்லாம் தமிழ்நாடு என்பதற்கு திராவிடநாடு என்ற பொருளோடே யல்லாமல், தமிழ்நாடு பிரிவினையையே கருத்தில் அல்ல என்பதை முதலில் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஏனெனில் தமிழ்நாடு என்றால் திராவிட நாடு என்றும், திராவிடநாடு என்றால் தமிழ்நாடு என்றும் நாம் எடுத்துக் காட்டவேண்டிய அவசியம் சிறிதுமில்லாமல் எத்தனையோ ஆதாரங்கள் இருக்கின்றன. அன்றியும் “திராவிடமே தமிழ் என்று மாறிற்று” என்றும், சரித்திராசிரியர்கள் முடிவு கண்டதாக குறிக்கப்பட்ட ஆதாரங்கள் ஏராளமாக இருக்கின்றன. பழங்காலத்து அகராதிகளும் அப்படியே சொல்லுகின்றன.

**உதாரணமாக 1926-ல் டி.ஏ. சுவாமிநாதய்யரால் பிரசுரிக்கப்பட்ட ஜெம் (Gem) டிக்ஷனரியில் 340ஆம் பக்கம் 5ஆவது வரியில் (Draveda) “திராவிட” என்பதற்கு “தமிழ்நாடு” என்று தமிழில் அருத்தம் போட்டிருக்கிறது.**

**சேம்பர்ஸ் 20ஆவது நூற்றாண்டு டிக்ஷனரியில் 282ஆவது பக்கம் 2ஆவது கலம் 5ஆவது வார்த்தை. “திராவிடன் (Dravedan) என்ற பதத்திற்கு ஆரியர்கள் அல்லாதாராகிய தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் பேசும் தென் இந்திய மக்கள்” என்றும் “திராவிடம் என்பதற்கு தென்னிந்தியாவிலுள்ள ஒரு பழமையான மாகாணம்” என்றும் பொருள் சொல்லப் பட்டிருக்கிறது.**

**1904இல் லண்டனில் பெயர்போன ஒரு ஆசிரியரால் பிரசுரிக்கப்பட்ட டிக்ஷனரியாக, டிக்ஷனரி ஆப் இங்கிலீஷ் லாங்வேஜ் என்ற பெரிய டிக்ஷனரி - அதாவது இப்போது உலகிலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் வழங்கும்படியான பெரிய புஸ்தகத்தின் 257ஆவது பக்கம் முதல்கலம் 4ஆவது வார்த்தையாக இருக்கும் திராவிடன் என்கின்ற வார்த்தைக்கு அர்த்தம் எழுதும்போது “திராவிடம் - ஆரியரல்லாத மக்களைக் கொண்ட ஒரு பழமையான மாகாணம் என்றும், தமிழன் (தமிழகம்) - ஆரியருக்கு முன்பிருந்த மக்கள், ஆரிய பாஷை அல்லாததைப் பேசுபவர்கள்” என்றும் எழுதியிருப்பதோடல்லாமல் இலங்கையும் திராவிடம் என்று எழுதி இருக்கிறது.**

**மற்றும் அநேக அகராதிகளும், ஆராய்ச்சி நூல்களும் தமிழ்நாடு என்றாலும், தமிழர்கள் என்றாலும் முறையே திராவிடம் திராவிடர்கள் என்றுதான் கருதப்பட்டு வந்திருக்கிறதே ஒழிய வேறில்லை. இதில் தமிழ்நாடு என்பதும் தமிழர் என்பதும் காங்கிரஸ்காரர்கள் பிரித்திருப்பதுபோல் ஒரு தனி இடத்தையும் ஒரு தனி பாஷையையும்தான் குறிக்கின்றது என்று யாராவது கருதுவார்களேயானால் அல்லது அந்தப்படிதான் கருத நேரிடும் என்று சொல்லப்படுமேயானாலும் தமிழ்நாடு தமிழருக்கே என்பதற்குப் பதிலாக திராவிட நாடு திராவிடர்களுக்கே என்று இலட்சியக் குறிக்கோள் வைத்துக் கொள்வதில் ஆக்ஷேபணை இல்லை என்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு இனி அப்படியே வைத்துக் கொள்ளலாம் என்றும் தெரிவித்துக் கொள்கிறோம்.**

### விலகட்டும்; இன்றேல் வாதம் புரியட்டும்

ஆந்திர நாட்டில் சில ஜமீன்தாரர்கள் தங்களைத் திராவிடர் என்று ஒப்புக்கொள்ளச் சம்மதிக்கவில்லை என்றும் தன்னைப் பொறுத்தவரை திராவிடனே என்றும் ஒரு ஆந்திரப் பெரியார் தெரிவித்திருக்கிறார். இதில் நமக்கு அதிசயம் தோன்றவில்லை. ஏனெனில், இங்கு தமிழர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களில் சிலரே சதா சர்வ காலம் தமிழன், ஆரியன் என்ற விவகாரம் பேசி தமிழ் மக்களுக்குள் விளம்பரம் பெற்றுக் கொண்டவர்களே ஆரிய புராணங்களை ஆரியக் கடவுள்களின் புராணக் கதைகளை அதிலும் இழிவும், அவமானமும் ஆன

ஆபாசக் கதையைப் பற்றி ஏதாவது கூறினால், கடவுளுக்குப் பெண்டுபிள்ளை, தாசி வேசி ஏதய்யா என்று கேட்டால் கோபித்துக்கொண்டு, ஆரியக் கதை களுக்கும் கூத்துகளுக்கும் தத்துவார்த்தம் பேசவரும் போது, இவற்றை அறியாத ஒரு மனிதன் தன்னைத் திராவிடன் அல்லன் என்று சொல்வதில் அதிசயமிருக்கக் காரணம் இல்லை.

**ஆகவே, அப்படிப்பட்ட விவகாரக்காரர்கள் ஒன்று விலகிக் கொள்ளட்டும்; அல்லது ஆண்மையுடன் வெளியில் வந்து வாதப்பிரதிவாதம் செய்யட்டும். இரண்டும் கெட்ட விதமாய் தங்கள் பிழைப்பும் வாழ்வும் இதில் சிக்கிக் கொண்டு விட்டதே என்பதற்கு ஆக விஷமப் பிரசாரம் வேண்டாம் என்றுதான் பணிவோடு வேண்டிக் கொள்ளு கிறோம்.**

**நிற்க. இந்தத் தேவைக்கு இப்போது என்ன அவசியம் என்று சிலர் கேட்கலாம். அதை விளக்க வேண்டியது மிகவும் அவசரமான காரியம் என்பதை நாம் எடுத்துக் காட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.**

### அடிமை வாழ்வு அகல!

**இந்தத் தேவையை நாம் வெறும் அரசியல் ஆதிக்கத்தை குறிவைத்தே குறிப்பிடவில்லை. திராவிட மக்களின் அரசியல், சமுதாய இயல், பொருளாதார இயல், விஞ்ஞான இயல், தற்காப்பு இயல், பொது முன்னேற்ற இயல் ஆகியவைகளைக் கருதியே குறிப்பிடு கிறோம். ஏனெனில் உலகத்திலேயே தொன்றுதொட்டு சிறப்பாக இருந்துவந்த திராவிடநாடு இன்று அடியோடு மறைந்து போய், அது ஆரியத்திற்கு ஆக்கமளித்தும் ஒரு அடிமை நாடாக ஆரியர் ஆதிக்கத்தில் இருந்து கொண்டு, திராவிட மக்கள் என்றால் உலகினோர் காட்டுமிராண்டி கள் என்று மதிக்கும்படியாகவும் இருந்து திராவிடர்கள் அரசியல், பொருளாதாரம் சமுதாயம், சமயம் முதலிய துறைகளில் அடிமைகளாய்-அதாவது ஆரியர்கள் நன்மைக்கும், மேன்மைக்கும் மாத்திரமே வாழுகிறவர் களாய் இருப்பதாலேயே அதை மாற்றவேண்டும் என்பதற்காகவே இப்போது இது மிகவும் அவசரமான காரியம் என்று சொல்லுகிறோம்.**

### இன்றைய நிலை

**இன்று திராவிடத்தில் உள்ள திராவிடர் சற்றேறக் குறைய 5 கோடி மக்களாவார்கள். ஆனால் அவர்களது நிலை என்ன? தமிழன், தெலுங்கன், கன்னடியன், மலையாளி, தொளுவன், இலங்கையன், கிறித்துவன், துருக்கன், ஆதிதிராவிட, ஆதி ஆந்திர, ஆதிகர்னாடக அதிக்கிரதஜாதி என்பவனாகிய பல ஜாதி வகுப்பு சமயங்களாகப் பிரிந்து ஆரியனுக்குப் பயந்து, பாது காப்பும் கேட்கப்பட வேண்டிய நிலையில் இருக்கிறோம். அரசியல், சமய இயல், சமுதாய இயல் முதலியவற்றில் திராவிடர்கள் ஆரியர்களையே எஜமானர்களாக, தலைவர்களாக, குருக்களாக, மேல் வகுப்பாராகக் கொண்டிருக்கிறோம்.**

எவ்வளவுதான் ஆராய்ச்சி அறிவு-மான உணர்ச்சி இருக்கிறது என்று சொல்லிக்கொண்டாலும், ஆரியன் கடவுளையே, ஆரியன் சமயத்தையே, ஆரியன் ஆதிக்க புராணங்களையே பிரதானமாய்க் கொண்டு அவற்றின் பயனாய் அவன் அனுபவித்து மீந்த எச்சிலையைக் கொண்டு பயனடைய ஆசைப்படுறோம்.

### ஆரிய சமயத்தால் இலாபம் யாருக்கு?

ஆரியர் சமயம், ஆரியர் கடவுள் என்று ஏன் சொல்ல வேண்டுமென்று சிலர் கருதலாம். ஆனால், அக்கடவுள் களால் யார் பிழைக்கிறார்கள்? யார் மேன்மையடை கிறார்கள்? யார் மேன்மையை விளக்க அக்கடவுள்கள் உருவம் பெற்று இருக்கின்றன? அக்கடவுள்கள் சம்பந்த மான கதைகளில் யாருடைய ஆதிக்கமும், பெருமையும் பிரசாரம் செய்து நிலை நிறுத்தப்படுகிறது? என்பனவாகிய வைகளை கவனித்தால், நாம் ஏன் அவற்றைப் பிரித்துக் காட்டுகிறோம் என்பதோடு, அவைகளை பகிஷ்காரிக்கச் சொல்லுவதன் உட்கருத்தும் விளங்காமல் போகாது.

ஒருவன் ''நான் மனுதர்ம சாஸ்திரத்தில் பண்டிதனாகி மனுதர்ம சாஸ்திரத்திற்கு விரிவுரை வியாக்கியானம் எழுதி பதினாயிரம் புத்தகம் அச்சுப் போட்டுவிட்டேன்; இப்பொழுது மனுதர்ம சாஸ்திரத்தையும் அதில் கற்பிக்கப் பட்டிருக்கும் கடவுள்களையும் குற்றம் சொல்லுகிறார்களே என் கதி என்னாவது? நான் இதை எதிர்த்து ஒருகை பார்க்காமல் இருக்கமாட்டேன்'' என்று ஒரு கூட்டத்தைச் சேர்த்துக்கொண்டு நம்மோடு வாதாடினால், நாம் இந்த சாஸ்திரப் பிரசார வயிறு வளர்ப்புக் கூட்டத்திற்குப் பயந்து கொள்வதா என்று சிந்தித்துப் பார்ப்போமானால் அப்படிப் பட்டவர்களின் எதிர்ப்பை நாம் எவ்வளவு மதிக்க வேண்டும் என்பது நன்றாய் விளங்கிவிடும்.

### ஆரியரே தலைவராயினர்

மனுதர்ம சாஸ்திரத்திற்கும், இராமாயணம் முதலிய ஆரிய புராண இதிகாசங்களுக்கும் இன்று எவ்விதத்தில் பேதம் கற்பிக்க முடியும்?

இதைப்பற்றிய விவகாரத்தை மற்றொரு சமயம் வைத்துக் கொள்வோம். ஆனால் நாம் இந்தியா பூராவும் ஒரு நாடு என்றும், நம்மை இந்தியன் என்றும் அதனால் இந்து சமயத்தவன் என்றும் சொல்லிக்கொண்டு பெரும் பரப்பில் இதுவரை இருந்து அரசியல் கிளர்ச்சியும், சமயக் கிளர்ச்சியும் செய்து வந்ததில் என்ன பலனடைந் திருக்கிறோம்?

இன்று நம்முடைய எல்லா இந்திய அரசியல் தலைவர்கள் காந்தியாரும் - ஜவஹர்லால் பண்டிதரும் - நம் மாகாணத்திற்கு தோழர்கள் ராஜகோபாலாச் சாரியாரும் சத்தியமூர்த்தி சாஸ்திரியாருமாய் இருக்கிறார்கள் - ஆச்சாரியார் சாஸ்திரியார்கள் அரசியல் தலைமை வகித்து இந்த 30 மாத காலத்தில் நமக்குச் செய்த காரியங்கள் என்ன என்பதை அனுபவத்தில் பார்த்ததோடு அனுபவித்தும் வந்திருக்கிறோம்.

ஆச்சாரியார் நமக்கு இம்மாதிரி சுய நிர்ணய முயற்சி என்றென்றும் வரமுடியாமல் இருக்கும்படி செய்ய, நமது கலைகளையும் பாஷைகளையும் அடியோடு ஒழிப்பதற்கு ஆரிய பாஷையை திராவிட மக்களுக்குள் குழந்தைப் பருவத்தில் கட்டாயமாகப் புகுத்தினார். எதிர்த்தவர்களை ஆண், பெண் அடங்கலும் தமிழர்களின் ஸ்தாபனங்களின் தலைவர்கள் உள்பட அடக்குமுறைச் சட்டத்தினால் பல வருஷணக்கணக்காய்த் தண்டித்து பல ஆயிரக் கணக்கான ரூபாய்கள் அபராதம் போட்டு சொத்துக்களைப் பறிமுதல் செய்தார்.

**திருப்பதியில் ஆரியப்பள்ளி**

ஆரியப் புராணக் கதைகளை ஆதாரமாய்க் கொண்ட கல்விகளைக் கற்பிக்க, திருப்பதியில் பன்னிரண்டு லட்ச ரூபாய் செலவில் கல்லூரி வைத்து ஆரியர்களையே உபாத்தியாயர்களாய்ப் போட்டு, திராவிடம்-ஆரியன் என்கின்ற உணர்ச்சியே அற்று ஆரியமயமாக வேலை செய்துவிட்டார்.

பள்ளிகூடப் புத்தகங்களில் ஆரியர் - திராவிடர் என்கின்ற வார்த்தைகளே வரக்கூடாதென்று தடுத்துப் புதிய முறையில் புத்தகங்கள் எழுதச் செய்தார். அதுபோலவே இப்போது புதிய இந்துதேச சரித்திரங்கள் எழுதப்பட்டு, அதில் ஆரியன் எப்போது இந்தியாவிற்கு வந்தான் என்கின்ற விஷயங்களையே மறைத்து, அலக்சாந்தர் வந்த காலத்திலிருந்தே சரித்திரங்கள், பாடங்கள் துவக்கி எழுதப்படுகின்றன.

தோழர் சத்தியமூர்த்தி அய்யர் அவர்கள் சமற்கிருதத்தைக் கட்டாயப் பாடமாக்கத் திட்டங்கள் போட்டுக் கொண்டிருக்கிறார்.

**படிப்பை வருணாச்சிரம முறையாக்கி, 4ஆம் வகுப்பாருக்கு கைத்தொழிலில் மாத்திரம் ஜீவனமும், அறிவும் இருக்க வேண்டுமே ஒழிய மற்றவை தேவையில்லை என்று வார்தாத் திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறையில் வந்துகொண்டிருக்கிறது.**

அரசியல் பதவியில், உத்தியோகத்தில் ஆரியரல்லாத அதாவது திராவிட மக்கள் அமர்ந்திருந்ததை ஒழிக்கச் சூழ்ச்சி செய்து இன்னும் ஐந்து வருஷகாலத்தில் சகல இலாக்காக்களிலும் ஆரியர்களே மாகாண, ஜில்லா தலைமை உத்தியோகத்தில் இருக்கும்படியாகச் செய்யப் பட்டாய் விட்டது.

இந்திய அரசியல் தலைவர் காந்தியாரே, இராம ராஜ்யத்திற்காகவும் வர்ணாச்சிரமப் புனருத்தாரணத்திற்காகவும் பாடுபடுகின்றார். அதுதான் காங்கிரஸ் கேட்கும் சுயராஜ்யத்தின் தத்துவமென்று பச்சையாய்ச் சொல்லி விட்டார்.

எந்தக் காரணத்தைக்கொண்டும் சுயபுத்தியோ சுயமரியாதையோ உள்ள திராவிட மகன் எந்தத் துறையிலும் தலைவராக இருக்க யோக்கியதை இல்லாமல் செய்யப்பட்டாய்விட்டது. ஆரியர்களைக் கண்டால் திராவிட மக்கள் நடுங்கிச் சரணடையும்படியான கொடுங்கோன்மை முறையே நல்லாட்சி என்பதாகக் கூறப்பட்டு வருகிறது.

**ஆச்சாரி கேட்டவரம்**

காங்கிரசின் சார்பாகப் பல தலைவர்களை வைசிராய் கூப்பிட்டார். ஒரு திராவிடனையாவது கூப்பிட்டுப் பேசினாரா? கூப்பிடத் தகுந்த தகுதி உண்டாக்கப்பட்டதா என்று பார்த்தால் அரசியலில் யார் ஆதிக்கம் செலுத்துகிறார்கள் என்பது விளங்கும். ஆனால், வைஸ்சிராய்க்கு காங்கிரஸ் உதவி செய்வதாக வாக்குறுதி கொடுத்து மறுபடியும் பதவி ஏற்று, சண்டைக்கு காங்கிரஸ் உதவி செய்வதானால் பணம் கொடுப்பவர்கள் யார்? ஏராளமாகச் சண்டைக்குப் பதிவு செய்து கொண்டுபோய் உயிர் கொடுப்பவர்கள் யார் என்று பார்த்தால், அத்தனை பேரும் திராவிட மக்களாகவே இருப்பார்கள் என்பது விளங்கும். தோழர் ஆச்சாரியார் சண்டைக்கு உதவி செய்ய வைசிராயை ஒரு நிபந்தனை கேட்டார். அதாவது, வாலியைக் கொன்று சுக்ரீவனுக்குப் பட்டம் கட்டினால் பிறகு சுக்ரீவன் உதவி செய்வான் என்று கூறினார். இதில் வாலி என்று தோழர் ஆச்சாரியார் குறிப்பிட்டிருப்பது திராவிடர்களை-அதாவது ஜஸ்டிஸ் கட்சியாரையும்-அதோடுகூட அநாரியர்களான 'மிலேச்சர்' என்று அவர்களால் சொல்லப்படும் முஸ்லிம்களையும் கொன்று, சுக்ரீவர்களான அதாவது சகோதரத் துரோகிகளான-எப்படியெனில் தங்களது நாட்டிலேயே தங்களுக்கு முன்பே ஆட்சியில் இருந்துவந்தவர்களான சகோதரர்களைக் கொல்வதற்காக எதிரிகளுடன் சேர நிபந்தனை கேட்கும் துரோகியான காங்கிரசுக்குப் பட்டம் கட்ட வேண்டும் என்று நிபந்தனை கேட்கிறார். இதிலிருந்தே ஆரியருடன் கூடவோ, அல்லது ஆரியருக்குப் பூரணமாய் அடிமைப்பட்ட மாகாணத்தார்களுடன் கூடவோ திராவிடரும் சேர்ந்திருந்தால் முன்னுக்குவர முடியுமா? மானத்துடன் வாழமுடியுமா என்று சிந்தித்துப் பார்க்க வாசகர்களை வேண்டுகிறோம்.

(விடுதலை: 21-11-1939)

**தொடரும்**

# முன்னாள் வேளாண் அமைச்சர்
# ஏ. கோவிந்தசாமி நூற்றாண்டு விழா மலர் - சட்டமன்ற உரைகள் வெளியீட்டு விழா



முன்னாள் வேளாண் அமைச்சர் ஏ. கோவிந்த சாமி அவர்களின் நூற்றாண்டு விழா மலர் - சட்டமன்ற உரைகள் வெளியீட்டு விழா 15.6.2017 வியாழக்கிழமை காலை 7 மணிமுதல் இரவு 10 மணி வரை விழுப்புரம் ஆனந்த திருமணக் கூடத்தில் சிறப்புற நடைபெற்றது.




காலை 7 மணிமுதல் மாலை 3 மணிவரை நடைபெற்ற இரத்ததான முகாமில் மருத்து வர் கோ. இளங்கோவன் - மருத்துவர் சுமதி, ஏ.ஜி. பத்மா வதி மருத்துவமனை இணைந்து நடத்தினர். வழக்குரைஞர் கோ. அன்பழகன் வரவேற்புரை யாற்றினார். என். ஆதிமூலம், இ.ஆ.பா. (ஓய்வு) தொடக்க உரையாற்றினார். ஏ.ஜி. சம்பத்து நிகழ்ச்சித் தொகுப் புரை வழங்கினார். திண்டிவனம் ராமமூர்த்தி ஏ.கோவிந்த சாமி சிலையை திறந்து வைத்தார். எஸ்.பி. பிச்சை யப்பன், ஏ.கோவிந்தசாமி படத்தைத் திறந்து வைத்தார். கோ.அரங்கநாதன் ஏ.ஜி.பத்மாவதி படத்தை திறந்து வைத்தார். எஸ். இராசேந்திரன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டார்.

பேராசிரியர் இரா. சீனிவாசன், திருமாவேலன், ஆ. முத்தமிழ்ச்செல்வன், தெ.வே. சஞ்சீவிராயன், ச. சண்முக நாதன், பாபி சீரங்கம், எஸ்.கே. சிவராமன், ஆனை. பன்னீர்செல்வம், மகுடமுடி, செந்தலை கவுதமன், ஆர். இராஜமோகன், என். பண்டரிநாதன், எஸ். மகுடபதி, கே.என். பாண்டியன், வி.சி. விஜயசங்கர், கோ. சானகிராமன், இளைய கம்பன், பி. விஜயராணி, வே.பாரதி, கவிஞர் துரைமுருகன் ஆகியோர் உரை யாற்றினர். எம். பாலசுப்பிர மணியம், பொறியாளர் (ஓய்வு) நன்றியுரையாற்றினார்.

மாலை 4.30 மணிக்கு நடைபெற்ற ஏ. கோவிந்த சாமி, மலர் வெளியீட்டு விழா -சட்டமன்ற உரைகள் நூல்கள் வெளியீட்டு விழாவிற்கு வே.ஆனைமுத்து தலைமைத் தாங்கி மலரையும், சட்டமன்ற உரைகள் நூல்களையும் வெளியிட்டார். முனைவர் தங்க ராசு, முனைவர் முருகேச பூபதி ஆகியோர் முன்னிலை வகித்தனர். எஸ்.எஸ். மணியம் நூல் அறிமுகம் செய்து வைத்தார். புலவர் கு. சீத்தா மலர் அறிமுகம் செய்து வைத்தார். ஈ.வி.கே.எஸ். இளங்கோவன் சிறப்புரையாற்றினார்.

வ. சபாபதி, கோ. சூரியமூர்த்தி, எஸ். உதயசங்கர், ஏ. தமிழ்ச்செல்வன், எம். தனசேகரன், எஸ். இராசா புரம், ஆர். சுப்பராயலு, அ.செ. குமாரசாமி, மாம்பலம் ஆ. சந்திரசேகர், பேரா. பழமலை, கே. தனவேல், இ.ஆ.பா. (ஓய்வு) உள்ளிட்டோர் உரையாற்றினர்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பலரும் மற்றும் சில தோழர்களும் வாழ்த்துரை வழங்கினர். விழா மிகவும் சிறப்பாக இரவு 10 மணிக்கு முடிவுற்றது.

# கியானி ஜெயில்சிங் பற்றி வே. ஆனைமுத்து எழுதிய ஆங்கில நூலின் வெளியீட்டு விழா

அனைத்திந்தியப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியல் வகுப்பினர் பழங்குடியினர், மதச் சிறுபான்மையினர் பேரவையின் சார்பில் 2017 சூன் 11ஆம் நாள் முற்பகல் 10மணி முதல் பிற்பகல் 1 மணிவரை சென்னை நிருபர்கள் சங்கக் கட்டடத்தில் கியானி ஜெயில்சிங் 102ஆவது பிறந்தநாள் விழாவும் வே. ஆனைமுத்து எழுதிய ஆங்கில நூல் **GIANI ZAIL SINGH THE SAVIOUR OF BACKWARD CLASSES** இரண்டாம் பதிப்பின் வெளியீட்டு விழாவும் அமைப்பின் புரவலர் தலைவர் வே. ஆனைமுத்து தலைமையில் நடைபெற்றது. பொதுச் செயலாளர் கலச. இராமலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். உத்தரப்பிரதேச சட்டமன்ற மேலவையின் முன்னாள் உறுப்பினரும் லக்னோ மாநகரத்தின் முன்னாள் மேயரும் இந்த அமைப்பின் துணைத் தலைவருமான முனைவர் தாவூஜிகுப்தா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு ஜெயில்சிங் பற்றி வே. ஆனைமுத்து எழுதிய நூலை வெளியிட்டார். வாஸ்து வேதிக் அறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் டாக்டர். கரு. தட்சணாமூர்த்தி ஸ்தபதி நூலின் முதற்படியினைப் பெற்றுச் சிறப்பித்தார். தொடர்ந்து சென்னை தலைநகர்த் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மறைமலை நகர் கு. வெள்ளைச்சாமி, அனைத்திந்திய மய்ய அரசு பிற்படுத்தப்பட்ட வகுப்பு ஊழியர் நலச் சங்கங்களின் பேரமைப்பின் பொதுச் செயலாளர் கு. தனசேகரன், இராணிப்பேட்டை பாரத மிகுமின் நிறுவன ஊழியர் வே. இராசேந்திரன் ஆகியோர் நூலின் படிகளைப் பெற்றும் உரையாற்றியும் சிறப்பித்தனர்.




தொடர்ந்து காஞ்சிபுரம் முற்போக்கு சமூகநீதிப் பேரவையின் நிறுவுநர் டாக்டர் விமுனாமூர்த்தி, மறைமலை நகரின் பெரியார் சமூகநீதிப் பேரவையின் பொருளாளர் மு. அரங்கநாதன், மார்ச்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் சி. நடராசன், முத்தரையர் சமுதாய ஆர்வலர் திருச்சி. கு.பெ.மா.இராசா, தமிழ்நாடு மருத்துவர் சமுதாயப் பேரவையின் மாநிலத் தலைவர் வெங்கிரு பழனி, மிகக்குறு சமூகங்களின் பேரவையைச் சேர்ந்த உத்தரமேரூர் பெ. குமாரசாமி ஆகியோர் விகிதாசார வகுப்புவாரிப்பங்கீடு குறித்தும் பிரதிநிதித்துவம் பெறாத வகுப்புகளுக்கு உள்ஒதுக்கீடு குறித்தும் கியானி ஜெயில்சிங் பற்றியும் உரையாற்றினார். நூலின் மேலட்டையில் உள்ள கியானி ஜெயில்சிங் படத்தை வரைந்த ஓவியர் நந்தகுமார் ஆச்சாரிக்கு வே. ஆனைமுத்து சால்வை அணிவித்துச் சிறப்பித்தார். பஞ்சசக்தி ஆசிரியர் திருவல்லிக்கேணி கோ. விசுவநாதன் நன்றி கூறினார். அனைவருக்கும் மதிய உணவு அளிக்கப்பட்டு நிகழ்ச்சி நிறைவுற்றது



# திராவிட மக்களின் போர்க்குரல் - டாக்டர் டி.எம். நாயர்

- **க. சோமாஸ்கந்தன்,** எம்.டி

**டா**க்டர் தரவாட் மாதவன் நாயர் என்ற முழுப் பெயர் கொண்ட டாக்டர் டி.எம். நாயர் தென்னகத்தின் புகழ்பூத்த இந்திய அரசியல்வாதி. சென்னை மாகாணத்தில் திராவிட இயக்கத்தின் முன்னோடி தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தை (நீதிக்கட்சி) சர்.பிட்டி. தியாக ராய செட்டியார், டாக்டர் சி. நடேச முதலி யார் ஆகியோருடன் இணைந்து தோற்று வித்தவர். அச்சங்கத்திற்கான விதிகளை யும் கொள்கை நெறிகளையும் வடித்துத் தந்தவர். மிகத் திறமையும் அறிவாற்ற லும் அஞ்சாமையும் நிறைந்த ஒப்பற்ற தலைவர் டாக்டர் டி.எம். நாயர்.



அந்த நாள்களில் பிராமணரல்லாத மக்கள், தாழ்த்தப்பட்ட மக்கள் ஆகியோரின் முன்னேற்றத்திற்காகவும், வளர்ச்சிக்காக வும், இன்னல்களையும் இழப்புகளை யும் ஏற்று செயல்பட்ட மாபெரும் தலைவர் என்று அந்த மக்களால் மிகவும் போற்றப்பட்டவர் டாக்டர் டி.எம். நாயர். அதேநேரத்தில் அவரை எதிர்த்து அரசியல் செய்வோரால் பெரிதும் தூற்றப்பட்டவரும் ஆவார்.

டாக்டர் தரவாட் மாதவன் நாயர் (டி.எம். நாயர்) அவர்கள் 1868ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 15ஆம் நாள் சென்னை மாகாணத்தில் பாலக்காடு அருகில் திரூர் கிராமத்தில் (தற்போதைய கேரளம்) சங்கரன் நாயர், காமினி அம்மாள் இணையருக்கு இரண்டாவது மகனாகப் பிறந்தார்.

இவருடைய தந்தையார் கள்ளிக்கோட்டையில் புகழ்பெற்ற வழக்கறிஞர் மாவட்ட 'முன்சீப்' ஆகவும் சிறப்பாகப் பணிபுரிந்தவர். தாயார் பாலக்காட்டைச் சேர்ந்த செல்வர் குடும்பத்தைச் சார்ந்தவர். இவரது தமையன் 'பார் அட்-லா' பட்டம் பெற்றவர். துணை மாவட்ட ஆட்சியராய்ப் பணியிலிருந்த போதே இறந்து விட்டார். அவரது சகோதரி அம்மாளு அம்மாள் மலை யாளத்திலும், வடமொழியிலும் சிறந்த புலமை பெற்றவர்.

பாலக்காட்டில் அரசு உயர்நிலைப் பள்ளியில் மாதவன் நாயர் கல்வி பயின்றார். கல்வி பயில்வதில் மிகுந்த நாட்டமும் ஆர்வமும் கொண்டிருந்தார். கல்வி யிலும் விளையாட்டுப் போட்டிகளிலும் முதன்மையான வராக விளங்கினார். மூன்றாண்டுகள் படிக்க வேண்டிய மெட்ரிகுலேசன் படிப்பினை இரண்டு ஆண்டுகளில் முடித்துத் தேர்வு பெற்றார். இதற்குப்பின் சென்னை மாநிலக் கல்லூரியில் அறிவியலை விருப்பப் பாடமாகக் கொண்டு எப்.ஏ. (Felow of Arts) இரண்டு ஆண்டுகள் பயின்று பல்கலைக்கழகத்திலேயே முதன்மை மாணவ ராகத் தேர்ச்சி பெற்றார். 'அறிவியல் ஆய்வுக்குத் தகுதியான மாணவர்' எனப் பேராசிரியர் வில்சோனியம் அவர் களால் அக்காலத்தில் போற்றப்பட்டார். கல்வி பயிலுங்காலத்திலேயே அவர் தன் ஆளுமைப் பண்பின் திறத்தால் மாணவர் தலைவராகவும் சிறந்து விளங் கினார்.

சென்னை மருத்துவக் கல்லூரியில் சிறிது காலம் பயின்ற நாயர் மருத்து வக் கல்வியைச் சென்னையில் தொடர வில்லை. 1889ஆம் ஆண்டு எடின்பர்க்கு சென்று அங்கு 1894ஆம் ஆண்டு எம்.பி.சி.எம். (M.B.C.M.) என்ற மருத்துவ இளநிலைப் பட்டம் பெற்றார். பின் இங்கிலாந்தில் 'சூசெக்ஸ்' (Sussex) மருத்துவமனையில் பயிற்சி மருத்துவ ராகப் பணிபுரிந்தார். எடின்பர்க் பல்கலைக்கழகத்தில், 1896இல் முதுநிலைப் பட்டம் - எம்.டி. (M.D.) பெற்றார். இப்பட்டம் பெற்றிட செம்மொழி ஒன்றினை உடன் படித்திட வேண்டும் என்பது பல்கலைக்கழக விதியாகும். எனவே நாயர் எம்.டி. பட்டத்தினைப் பெற்றிட தன் சகோதரியின் மூலம் அஞ்சல்வழி சம்ஸ்கிருத மொழி யைப் பயின்றார். மேலும் கிரேக்க மொழியும் கற்றுத் தேர்ந்தார். காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் ஓராண்டு சிறப்புப் பயிற்சி பெற பாரிஸ் சென்றார்.

கல்வி பயின்ற காலத்தில் எடின்பர்க் பல்கலைக் கழக மாணவர் அவையில் செயலாளராகவும், பல் கலைக்கழக 'மாணவன்' என்ற இதழின் ஆசிரியர் களில் ஒருவராகவும் எடின்பர்க் இந்தியர் சங்கத்தின் செயலாளராகவும் பின்னர் அதன் தலைவராகவும் பல பொறுப்புகளிலிருந்து சிறப்புடன் பணியாற்றி வந்துள் ளார் அவர். பிரிட்டிஷ் மருத்துவச் சங்கம், இராயல் ஆசியச் சங்கம், தேசிய லிபரல் கிளப், இராயல் சொசைட் டிஸ் கிளப் போன்ற பல அமைப்புகளில் உறுப்பினராக இருந்தார். தாயகம் திரும்பும் முன் இலண்டனில் அவர் வசித்த காலத்தில் அங்கிருந்த இந்தியர் சங்கத்தில் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார். அக்காலத்தில் 'தாதாபாய் நௌரோஜி' அச்சங்கத்தின் தலைவராக இருந்துள்ளார். இத்தகு சமூக, அரசியல் அமைப்பு களில் தொடர்பு கொண்டிருந்ததால் நாயரின் அறிவாற்ற லும், ஆளுமைத் திறனும், தலைமைப் பண்புகளும் சிறப்புடன் வளர்ந்து வரலாயின. மேலும் அவர்

அரசியல் அறிஞர்களின் வரலாறுகளையும் அரசியல் அமைப்புகளின் வரலாறுகளையும் பொருளாதார நூல் களையும் இலக்கியங்களையும் இடையறாது பயின் றார். அதனால் அவரது அரசியல், சமூகப் பொருளாதாரப் பார்வைகளும் விரிவடைந்தன.

அக்காலத்தில் பிரிட்டிஷ் பாராளுமன்றத்துக்கு தாதா பாய் நௌரோஜி பிரிட்டிஷ் தொகுதி ஒன்றில் வேட் பாளராக நின்றார். அவர் வெற்றி பெறுவதற்கு, மருத்து வக் கல்லூரி மாணவராயிருந்த டாக்டர் நாயர் பெருந் தொண்டாற்றினார். அந்நாளில், தாதாபாய் நௌரோஜி, டாக்டர் நாயருக்குக் கூறிய அறிவுரை, ''இந்தியாவில் உள்ள வெள்ளையர் ஏகாதிபத்தியம் உன் கோரிக்கை களை ஏற்க மறுக்குமேயானால், இங்கிலாந்துக் குடி யாட்சியிடம் முறையிடு. அதன் உதவியை நாடு'' என்பதாகும்.

அவர் எடின்பர்க் பல்கலைக்கழகத்தில் மேல்நாட்டுக் கலை, கலாச்சார, பண்பாட்டுச் சூழலில் வளர்ந்த போதிலும் பிறந்த மண்ணின் பெருமையை மறந் தாரில்லை. இந்திய மக்களை சுதேசிகள் என்று வெள்ளை யரில் சிலர் ஏளனமாகக் குறிப்பிட்டு வந்துள்ளனர். அவர்களுக்குப் பாடம் புகட்ட எண்ணிய டாக்டர் டி.எம். நாயர் அதற்காக காலம் நோக்கிக் காத்திருந்தார். இங்கிலாந்தில் ஆங்கிலேயர்கள் கூடியிருந்த கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளும் வாய்ப்பினைப் பெற்றார். அக்கூட்டத்தில் அவர் ஒருவரே இந்தியர். அக்கூட்டத்தில் டாக்டர் டி.எம். நாயர் பேசும் பொழுது இந்தியராகிய தம்மைத் தவிர அங்கு கூடியுள்ள அனைவரும் சுதேசி களாகவே இருப்பதாகக் குறிப்பிட்டார். இவ்விதம் ஆணவ மிக்க ஆங்கிலேயரை இடித்துரைத்தார்.

டாக்டர் டி.எம். நாயர் தாய்மொழிப் பற்று மிக்கவராக இருந்தார். ஆகவே 'கேரள பத்திரிகா' என்ற இதழை வரவழைத்துப் படித்து வந்தார். அந்த இதழில் டாக்டர் டி.எம். நாயர் தன் தாய்மொழியான மலையாளத்தில் பல கட்டுரைகள் எழுதியுள்ளார்.

1897ஆம் ஆண்டு சென்னை வந்த டாக்டர் டி.எம். நாயர், சென்னையில் மருத்துவத் தொழிலைத் தொடங் கினார். ஏழை, எளிய மக்கள் பயன் பெற்றனர். காது, மூக்கு, தொண்டை மருத்துவத்தில் நிகரற்றுத் திகழ்ந் தார். ஒவ்வொரு நாளும் காலை 8 மணிமுதல் பகல் 1 மணிவரை நோயுடைய மக்களுக்கு மருத்துவம் பார்ப்பார். அதன்பின் படிக்கவும் எழுதவும் செய்வார். பொது நிகழ்ச்சி களிலும் பங்கேற்பார். அவர் தான் படிப்பதற்கென தன் இல்லத்தில் ஒரு நூலகம் அமைத்திருந்தார். அந்த நூலகத்தில் மருத்துவம், சுகாதாரம், அரசியல், பொருளியல் எனப் பல்துறை சார்ந்த நூல்கள் இருந்தன. ''ஆண்டி செப்டிக்'' (Antiseptic) என்ற மருத்துவ இதழுக்கு, அவர் ஆசிரியராக இருந்து 16 ஆண்டுகள் தொடர்ந்து வெளி யிட்டு வந்துள்ளார். சென்னை மாநிலத்திலிருந்து வெளி வந்த ஒரே மருத்துவ இதழ் ஆண்டிசெப்டிக். இந்த மருத்தவ இதழினை வெளியிட்டவர் டாக்டர் யூ. இராமாராவ். இவர் சிறிது காலம் சென்னை மேலவைத் தலைவராகவும் இருந்துள்ளார். டாக்டர் டி.எம். நாயர் சென்னை பிராட்வேயிலிருந்து வந்து கொண்டிருந்த 'மெட்ராஸ் ஸ்டேண்டர்டு' (Madras Standard) என்ற ஆங்கில தினசரியின் ஆசிரியராகவும் இருந்து சிறப்பான அரசியல் விளக்கக் கட்டுரைகள் எழுதி வந்துள்ளார்.

மருத்துவத் துறையில் சிறந்த பணியாற்றிய டாக்டர் டி.எம். நாயரை பம்பாயில் நடைபெற்ற மருத்துவ மாநாட்டிற்கு அரசே தன்னுடைய பிரதிநிதியாக அனுப்பி வைத்தது. சென்னை மருத்துவக் கழகத்தின் துணைத் தலைவராகவும் விளங்கினார், டாக்டர் டி.எம். நாயர்.

**காங்கிரஸ் இயக்கப் பணிகளில்**

இந்திய மக்களிடையே ஒற்றுமை ஓங்கிடவும், விடு தலை வேட்கையை உருவாக்கிடவும் தொடங்கப்பட்ட இந்தியத் தேசியக் காங்கிரசில் 1897இல் இணைந்து பணியாற்றத் தொடங்கினார், டாக்டர் நாயர். காங்கிரஸ் இயக்கத்தில் இணைந்த நாயர் மிகவும் ஆர்வத்துடன் செயல்பட்டார். காங்கிரஸ் கூட்டங்களிலும் மாநாடு களிலும் தவறாது பங்கேற்றார். காங்கிரஸ் செயற்குழுக் கூட்டங்களில் பல ஆக்கப்பூர்வமான கருத்துகளைக் கூறி காங்கிரசை வழிநடத்தும் ஆற்றல் மிக்கத் தலை வராகத் திகழ்ந்தார்.

காங்கிரசின் வளர்ச்சியில் நாயரின் பேச்சும் எழுத் தும் பெரும் பங்காற்றின. எனினும் அன்னிபெசண்ட் அம்மையார் எழுதிய 'இந்தியா விடுதலைக்குப் போராடி யது எப்படி?' என்ற நூலில் டாக்டர் நாயர் காங்கிரசில் பணியாற்றியதைப் பற்றி இரண்டே இடங்களில் குறிப் பிடுகிறார், 1898இல் சென்னையில் நடைபெற்ற 14 ஆவது காங்கிரஸ் மாநாட்டிலும் அதற்கு அடுத்த ஆண்டு லக்னோவில் நடைபெற்ற 15ஆவது காங்கிரஸ் மாநாட்டி லும் 'இந்தியாவின் மருத்துவர்களின் நிலை' (Status of Indian Officeres in Medical Service) எனும் தீர்மானத்தின் மீது பேசினார் என்று குறிப்பிட்டுள்ளார்.

1905ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற கூட்டத்தில் சுதேசி இயக்கம் குறித்து விரிவாகப் பேசி னார். 1703, 1705, 1707ஆம் ஆண்டுகளில் அயர்லாந்து நாட்டினர் அந்நியப் பொருள்களைப் பகிஷ்கரித்து, தம் நாட்டு உற்பத்தியைப் பெருக்கினர் என்றும், அதே போன்று அமெரிக்கக் குடியேற்ற நாடுகளும் பிரிட்டிஷ் பொருள்களை விலக்கி தம் நாட்டு உற்பத்தியைப் பெருக்கினர் என்றும் கூறி, மக்களிடையே சுதேசி உணர்வைத் தூண்டினார் டாக்டர் நாயர்.

வங்காளத்தில் பாரிசால் என்ற இடத்தில் காவல் துறையினர் கூட்டத்தைக் கலைப்பதற்கு கொடும் வன்

முறையைக் கையாண்டனர். அதை எதிர்த்து நடைபெற்ற சென்னைக் கூட்டத்தில் பேசிய நாயர், "போலீசார் எந்த ஆயுதத்தையும் பயன்படுத்திக் கூட்டத்தைக் கலைக்கவில்லை" என்று அரசு கூறுகின்றது; ஆனால் அங்கு எனது நண்பர் சௌத்திரி தலையில் படுகாயமுற்றார். அது எவ்வாறு ஏற்பட்டது? நிச்சயமாக "வந்தே மாதரம்-என்று கோஷமிட்டதால் காயம் ஏற்பட்டிருக்காது" என்றார், (கூட்டத்தில் சிரிப்பு) 1907இல் வட ஆற்க்காடு மாவட்டம், சித்தூரில் நடைபெற்ற மாநாட்டில் தலைமை வகித்தார்.

1908ஆம் ஆண்டு ஆங்கில அரசு டாக்டர் நாயர் அவர்களை இந்தியத் தொழிலாளர் ஆணைய உறுப்பினராக நியமித்தது. நாயர் இந்தியத் தொழிலாளரின் அவல நிலையைப் பட்டியல் போட்டுத் தனது கண்டனத்தைப் பதிவு செய்தார். தொழிலாளர் வேலை நேரத்தைக் குறைத்திடப் பரிந்துரைத்தார்.

**சென்னை மாநகரவையில்**

சென்னை மாநகரில் சிறப்புமிக்க மருத்துவராகத் திகழ்ந்த டாக்டர் நாயர், பொது நலனிலும் அக்கறை கொண்டவராய் விளங்கினார். மக்கள் பணியில் ஈடுபாடு கொண்ட நாயர் திருவல்லிக்கேணி தொகுதியின் பிரதிநிதியாக 1904 முதல் 1916 வரை பன்னிரண்டு ஆண்டுகள் சிறப்புறப் பணியாற்றினார்.

சென்னையில் திருவல்லிக்கேணி தண்டையார்பேட்டைத் தொகுதிகளில் மாநகராட்சிப் பணிகள் குறித்து நாயர் சொற்பொழிவு புரியும் பொழுது, அப்பகுதிகளில் உள்ள குறைகளை அறிந்து கொள்வார். மறுநாள் அக்குறைகளைப் போக்குவதற்கு, மாநகராட்சி ஆற்ற வேண்டிய பணிகள் குறித்த தீர்மானங்களை அவையில் கொண்டு வருவார். இது அவரது வாடிக்கையான செயலாகும். மாநகராட்சியின் செயல்பாடுகள் குறித்து நிகழும் வாதங்களில் நாயரின் கருத்துரைகள், இடித்துரைகள், நெறியுரைகள் தவறாமல் இடம்பெறும்.

மோலின் (Molyne) என்ற ஆங்கிலேயர் நகராட்சித் தலைவராக இருந்தபோது, நகரசபை விநியோகிக்கும் குடிநீர் பற்றிய விவாதம் நடைபெற்றது. அப்பொழுது வழங்கப்பட்ட குடிநீர் குடிப்பதற்கு ஏற்றதாக இருந்திருக்கவில்லை. டாக்டர் நாயர் பேசும்போது, "நகர மக்களுக்கு வழங்கப்படும் நீர் குடிநீர் இல்லை; மோலின் மிக்சர்" என்று கிண்டலோடு குறிப்பிட்டார்.

அதற்கு மோலின் பதில் கூறும்போது பெருமளவு நீர் வடிகட்டப்பட்டதென்றும் சிறு அளவு வடிகட்டாத நீர் அத்துடன் கலக்கப்படுகிறது என்றும், முழுவதும் வடிகட்டாத நீரைவிட இது சிறந்ததாகும் என்றார்.

உடனே நாயர், "வடிகட்டிய நீருடன் சிறிதளவு வடிகட்டாத நீரைச் சேர்த்தால் நோய்க் கிருமிகள் அதிகமாக வளரும் என்பதைச் சாதாரண மக்களும் அறிவார்களே; நீங்கள் அறியாதது விந்தையே" என்று குறிப்பிட்டார்.

அவரது பேச்சுத் திறனும், செயற்றிறனும் மக்களை அவர்பால் ஈர்த்தன. சென்னை நகருக்குப் புதிய கழிவு நீர் திட்டத்தின் தேவையை உணர்த்தியவர் நாயர். தண்டையார்பேட்டை கழிவுநீர்த் திட்டம் இவரது முயற்சியால் நிறைவேற்றப்பட்டது.

நகர சுகாதாரத் துறையுடன் இணைந்திருந்த நகர துப்புரவுத் துறையைத் தனித்துறையாகப் பிரித்து அத்துறை சிறப்பாக இயங்க வழிவகுத்தவர். சென்னை நகரில் சாலைகள் 40 அடிக்குக் குறைவாக இருக்கக் கூடாது என்று திட்டமிட்டுச் செயல்படுத்தியவர். சென்னை நகரின் மேன்மைக்காக அளப்பரிய செயல்கள் புரிந்தவர் நாயர் என்பதால், 'இந்தியா' இதழில், "இப்படிப்பட்ட அறிஞர்கள் தான் மாநகராட்சி மக்கள் பணியில் இருக்க வேண்டும்" என்று பாரதியார் பாராட்டி எழுதியுள்ளார்.

1906ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சி, ஒருவரை சட்டசபைக்க உறுப்பினராகத் தேர்ந்தெடுக்க வேண்டும், பாரதியார் நாயரே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்ற தன் விருப்பத்தை 4.8.1906 அன்று இந்தியா இதழில் எழுதியிருந்தார். மீண்டும் 13.8.1906 இல் பாரதியார், மாநகராட்சியின் சார்பாக டாக்டர் நாயரே, உறுதியாக சட்டசபைக்குத் தேர்ந்தெடுக்கப்படுவார் என்று தாம் நம்புவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால் நடந்ததோ வேறாகும்.

16.8.1906 வாக்காளர்கள் 32 பேர்கள் நகரமன்றில் கூடினர். வேட்பாளர்கள் நால்வர் - டாக்டர் நாயர், சர்.பிட்டி தியாகராயர், சர்.வி.சி. தேசிகாச்சாரி, சிவஞான முதலியார் ஆகியோர். வாக்கெடுப்பு தொடங்கியது. டாக்டர் நாயரும், சிவஞான முதலியாரும் தலா 10 வாக்குகள் பெற்றனர். தியாகராயர் 5 வாக்குகளும், தேசிகாச்சாரி 6 வாக்குகளும் பெற்றனர். எவருக்கும் பெரும்பான்மை கிட்டவில்லை என்ற அவைத்தலைவர் அறிவித்ததும், தியாகராயர் தான் விலகிக் கொள்வதாகப் பெருந்தன்மையுடன் கூறினார். மீண்டும் வாக்கெடுப்பு நடந்தது.

டாக்டர் டி.எம். நாயர் 14 வாக்குகளும், பி.எம். சிவஞான முதலியார் 11 வாக்குகளும், சர்.வி.சி. தேசிகாச்சாரியார் 7 வாக்குகளும் பெற்றனர்.

அவைத் தலைவர் : "தேசிகாசாரியரே, இப்போது விலகிக் கொள்கிறீரா?"

தேசிகாசாரியார் : "நான் விலகிக் கொள்ளமாட்டேன்."

டாக்டர் டி.எம். நாயர் : "நான் விலகிக் கொள்கிறேன், ஐயா."

மற்ற உறுப்பினர்கள், நாயர் விலகக்கூடாதென்று முழக்கமிட்டனர். தேசிகாசாரியாரின் நன்மைக்காகத் தான் விலகுவதாகக் கூறினார் நாயர். அதன்பின் நடைபெற்ற வாக்கெடுப்பில் தேசிகாசாரியார் 18 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றார்.

''மிகவும் தகுதி பெற்றவரும் அதிக வாக்குகள் பெற்றவருமான டாக்டர் நாயர் விலகிக்கொண்டமை மிகுந்த வருத்தமுண்டாக்குகிறது,,, பொது நலனின் பொருட்டு சொந்த ஆசைகளை அடக்கிக் கொள்ள முடியாத மனிதர்கள் உயர்ந்த ஸ்தானங்களிலிருக்க யோக்கியதை உடையவர்கள் அல்ல'' என்று பாரதியார் இந்தியா இதழில் எழுதியிருந்தார்.

டாக்டர் நாயர் பொதுவாக மாநிலத்திலுள்ள நகராட்சிகள், மாவட்டக் கழக ஆட்சிகள் (District Boards) ஆகியவற்றை ஊன்றிக் கவனித்து வந்தார். 1910இல் பாலக்காடு நகரசபை கலைக்கப்பட்டதை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து நகர சபையை மீண்டும் செயல்படச் செய்தார். அப்பொழுது நடைபெற்ற கூட்டத்தில், இரகசியக் காவலதிகாரி ஒருவர் குறிப்புகள் எடுத்துக் கொண்டிருந்தார். ''மீண்டும் நகரவை செயல்பட வேண்டும்'' என்று தீர்மானம் நிறைவேறும் போது, ''இத்தீர்மானம் காவலதிகாரி ஒருவரைத் தவிர மற்ற அனைவராலும் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது'' என்றார்.

இவ்வாறு சிறப்பாகப் பணியாற்றிவந்த நாயருக்கும் சர். பிட்டி தியாகராயருக்குமிடையே மனக்கசப்பு ஏற்படக் காரணமாயிற்று, திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் திருக்குளம். அக்காலத்தில் அந்தத் திருக்குளம் பாழடைந்து போய், கொசு பெருகவும், நோய் பரவவும் காரணமாயிற்று. ஆதலின் அக்குளத்தினை மண் நிரப்பி மூடிவிட்டு ஆங்கே ஒரு பூங்கா ஒன்றினை உருவாக்கினால் மக்கள் அதனால் பயன்பெறுவர் எனவொரு தீர்மானம் கொண்டுவந்தார் நாயர். அத்தீர்மானத்தை வன்மையாகக் கண்டித்துத் தோற்கடிக்கச் செய்தார் சர். பிட்டி தியாகராயர். அதன் காரணமாக இருவரின் நட்பில் தொய்வு ஏற்பட்டது.

1914இல் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் திருக்குளத்துக்கு 1908ஆம் ஆண்டில் தீர்மானித்தபடி வரி இல்லாமல் தண்ணீர் விட வேண்டும் என்று நகரவையில் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நாயர் இத் தீர்மானத்தைக் கடுமையாக எதிர்த்தார். ''பார்த்தசாரதி கோயில் குளம் பொதுக்குளமன்று; இக்கோயில் குளத்துக்கு வரியின்றி தண்ணீர்விட்டால் மற்ற கோயில் குளங்களுக்கும் வரியின்றி தண்ணீர் வழங்க வேண்டி வரும். இதனால் நகரவைக்கு வருமான இழப்பு நேரிடும். பல ஆயிரம் ரூபாய் வருமானமுள்ள இந்தக் கோயில், நகரவைக்கு வரி செலுத்தித் தண்ணீர் பெறுவதே நேர்மையாகும்'' என்று நாயர் கடுமையாக எதிர்த்தார்.

நாயரின் இப்பேச்சினால் திருவல்லிக்கேணிவாழ் மக்களில் ஒரு சாரார் நாயர் மீது அதிருப்தி கொண்டனர். நாயர் நகரவையிலிருந்து விலகவேண்டும் என்று பேசியும் எழுதியும் வரலாயினர். இதனால் வேதனையடைந்த நாயர் 'மதராஸ் ஸ்டாண்டர்டு' இதழில், நகரவையில் நேர்மையாகவும் நியாயமாகவும் செயல்பட இனி இடமில்லை என்பதால், தான் பதவியிலிருந்து விலகிவிட்டதாகத் தெரிவித்தார். சிலரின் பேச்சால், நடவடிக்கையால் நாயர் பதவி விலகியது, பலருக்கு வருத்தம் தந்தது. அவரது எதிரிகளுங்கூட வருத்தமுற்றனர். பலரும் இராஜினாமாவைத் திரும்பப் பெற வற்புறுத்தினர். நாயர் தன் முடிவை மாற்றவியலாது என்று கூறிவிட்டார். நாயரின் நேர்மையான தன்னலமற்ற நகரவைத் தொண்டு இத்தகைய வருந்தத்தக்க நிகழ்ச்சியுடன் முடிவுற்றது.

அதன்பிறகு சில காலம் பொதுப் பணியிலிருந்து விலகியிருந்த நாயர், 1914 ஏப்ரல் மாதம் முதலாவது உலகப் போரின்போது, எஸ்.எஸ். சென்னை என்ற மருத்துவ உதவிக் கப்பலில் சிறிது காலம் மதிப்புறு மருத்துவராகப் பணிபுரிந்தார். இப்போர்க்களப் பணியைப் பாராட்டி நாயருக்கு 'கெய்சர்-1-இந்து தங்கப்பதக்கம்' (Kaiser-1-Hind. Gold Medal) அவர் மறைவிற்குப்பின் வழங்கப்பட்டது.

**சென்னை மேல் சபையில்**

சென்னை மாநகராட்சியின் பிரதிநிதியாக, 1906 இல் சட்டமன்ற மேலவை உறுப்பினராக டாக்டர் டி.எம். நாயர் தேர்வு செய்யப்படவில்லை. ஆனால் 1912இல் தேர்தலில் வென்று சட்டமன்ற மேலவை உறுப்பினரானார். இம்மன்றத்தில் சிறப்பாகப் பணியாற்றி முத்திரைப் பதித்தார்.

கல்வி, சுகாதாரம், மருத்துவம், தொழிலாளர் நலன், தன்னாட்சி போன்ற தலைப்புகளில் அறிவார்ந்த கருத்துகளை நாயர் முன்மொழிவார்.

1909ஆம் ஆண்டு மிண்டோ-மார்லி சீர்திருத்தப்படி ஆளுநர் மேலவைத் தலைவராவார். ஆங்கிலமே ஆட்சி மொழி. 1912களில், மன்ற உறுப்பினர் சேலம் வழக்கறிஞர் பி.வி. நரசிம்ம ஐயர், தலைவரைப் பார்த்துக் கேட்டார். ''சட்டமன்றத்தில் தமிழில் பேச உரிமை உண்டா? தமிழில் பேசலாமா?'' என்று, சட்ட மன்றச் செயலர், ''விதிகளைப் பார்த்துத்தான் பதில் கூறமுடியும்''என்று கூறிவிட்டு, சட்டப் புத்தகத்தில் விதிகளைத் தேடினார். நரசிம்ம ஐயர் நின்றுகொண்டே இருக்க, செயலர் விதிகளைத் தேடிக்கொண்டே இருக்க, காலம் கடந்து கொண்டிருந்தது. நாயர், தலைவரைப் பார்த்து, ''தலைவர் அவர்களே, சேலம் நண்பர் தமிழில் பேசிக்கொண்டிருக்கட்டும். செயலர் விதிகளைத் தேடிக் கொண்டே இருக்கட்டும். நாம் மன்றத்தை உணவு

இடைவேளைக்காக ஒத்திவைப்போம். அதற்குள் செயலர் விதிகளைத் தேடி எடுப்பார்'' என்றார். மன்றம் சிரிப் பலைகளோடு ஒத்திவைக்கப்பட்டது.

உணவிற்குப்பின் பிரச்சனையும் எளிதில் தீர்ந்து விட்டது.

1914இல் சென்னை மருத்துவப் பதிவு சட்ட மசோதா (Madras Medical Registration Act) நாயரின் பெருமுயற்சியால் சட்டமாக்கப்பட்டது.

கல்வித் துறையிலும் நாயர் கவனம் செலுத்தி வந்தார். 1915இல் சென்னைப் பல்கலைக்கழக செனட் சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார். செனட் சபைக் கூட்டம் ஒன்றில் ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. அதில் ஒரு மொழிநூல் ஆசிரியரைப் பற்றி ஒன்றும் குறிப்பிடப்பட வில்லையே என்றும், அம்மொழி நூலாசிரியர் ஒரு சொற்பொழிவும் ஆற்றவில்லையா என்றும் அவர் செய்த ஆய்வுதான் என்னவென்றும் கேட்டார். ஒரு உறுப்பினர் அதற்கு பதிலளித்தவர், அவரின் ஆய்வினை சாமானியரால் விளங்கிக் கொள்ள இயலாது என்றும், அவ்வாய்வு எளிய ஆங்கிலத்தில் எழுதப்படவில்லை என்றும் விளக்கம் அளித்தார். உடனே டாக்டர் நாயர், ''எளிய ஆங்கிலத்தில் விளக்க முடியாத ஓராய்வு நடை பெறுகின்றது என்றால் அவ்வாய்வு பொய்யாகவும், அல்லது அவ்வாய்வாளர் ஏமாற்றுக்காரராகவும்தான் இருக்கமுடியும்'' என்றார். இவ்விதம் பொய்மைக்குத் துணைபோகாதவராகவும், கல்வி வளர்ச்சியில் ஆர்வம் கொண்டவராகவும் நாயர் விளங்கினார்.

இத்தகைய அறிவாற்றல் ஆளுமைத் திறனுடன் பணியாற்றிவந்த நாயருக்கு, மேல் சாதிய ஆணவ ஆதிக்கப் போக்கை நன்கு உணரக்கூடிய வாய்ப்பு 1916இல் கிட்டியது. அந்நிகழ்ச்சியைப் பற்றி உரைப் பதற்குமுன் அவர் சார்ந்திருந்த காங்கிரசில் அமைந் திருந்த குழுக்கள் பற்றி அறிதல் அவசியமாகிறது.

சென்னை மாநிலக் காங்கிரசில் மூன்று குழுக்கள் இயங்கி வந்தன. டாக்டர் நாயர் சென்னை வேப்பேரி யில் 'லேடி நப்பியா வில்லா' என்ற வீட்டில் வாழ்ந்து வந்தார். அதனால் அவர் தலைமையில் இயங்கிய அரசியலுக்கு 'எழும்பூர் அரசியல் (காங்கிரஸ்)' என்று பெயர். இது பிராமணரல்லாதார் முற்போக்கினை வலி யுறுத்தும் அரசியலாக அமைந்திருந்தது. இதற்கு எதிராக இயங்கி வந்தது ''மைலாப்பூர் அரசியல் (காங்கிரஸ்).'' இது பிராமண ஆதிக்கம் நிரம்பிய அரசியலாக அமைந் திருந்தது. மூன்றாவது அன்னிபெசன்டின் ''அடையாறு அரசியல்''. இதுவும் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்தது தான், என்றாலும் மைலாப்பூர் அரசியலோடு இணைந்து எழும்பூர் அரசியலை மிகக் கடுமையாக எதிர்த்து வந்தது. இதுதான் பின்னர் பிராமணர், பிராமணரல் லாதார் அரசியலாக உருவெடுத்தது.

1916ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் (Imperial Legislative of India) நாயர் தோல்வி அடைந்தார். நாயரைக் கடைசிவரை ஆதரிப்பதாக உறுதி சொன்ன வர்கள் தேர்தலின் போது திருவல்லிக்கேணி இந்து உயர்நிலைப்பள்ளித் தலைமை ஆசிரியர் பி.எஸ். சீனிவாச சாஸ்திரி என்பவரை முன்மொழிந்து தேர்ந் தெடுத்தனர். அதற்கு முழுமுதற்காரணம் காங்கிரசுக் கட்சியில் இருந்த சாதி வெறியர்களே - ''மைலாப்பூர் காங்கிரஸ் அரசியலும்'', ''அடையாறு அரசியலும்'' எனக் குற்றம் சுமத்தினார். இதனால் காங்கிரசுக் கட்சி யிலிருந்து அவர் விலகினார்.

டாக்டர் டி.எம். நாயரும் சர்.பி. தியாகராயரும் காங்கிரசுக் கட்சியில் இருந்தபோது பார்ப்பனரல்லாத மக்களுக்காகப் பாடுபட்டனர். அவர்களின் மனப்போக் கை நன்கு அறிந்த டாக்டர் சி. நடேசனார், அவர்களை அணுகித் தாம் நிறுவிய திராவிடச் சங்கத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளை விளக்கி அவர்களின் ஆதரவைப் பெற்றார். அவர்களும் காங்கிரசுக் கட்சியை விட்டு விலகி, 1916ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் ''தென் னிந்திய நல உரிமைச் சங்கம்'' என்னும் நீதிக்கட்சி யைத் தொடங்கினர்.

நீதிக்கட்சியை உருவாக்கியதில் நடேச முதலியாரும் தியாகராயச் செட்டியாரும் கூட்டாளிகளாக இருந்திருப் பினும் கட்சியின் அமைப்பிற்கும், விதிகளுக்கும் கொள் கைகளுக்கும் பெரும்பான்மையும் நாயரே பொறுப் பாவார். நீதிக்கட்சியை வடிவமைத்ததில் உள்ளூர்த் தாக்கங்களைவிட மேற்கத்திய அரசியல் மதிப்பீடுகளின் தாக்கமே அவரிடம் மிகுதியும் செல்வாக்குச் செலுத்தின. நீதிக்கட்சி கொள்கையில், பிரிட்டிஷ் சனநாயகவாதிகளின் மரபும் பிரெஞ்சுத் தீவிரவாதிகளின் மரபும் மணம் பரப்புவதைக் காணலாம்.

நாயர் இங்கிலாந்தில் இருந்த காலத்தில் கிளாட்ஸ்டன் என்ற ஆங்கிலேய அரசியல் அறிஞரின் லிபரலிசக் கோட்பாடுகளால் கவரப்பட்டவர். பிரெஞ்சு நாட்டின் புரட்சியாளர் ஜியார்ஜியஸ் கிளமென்சோவின் (Georges Clemenceau 1841-1929) 'ரேடிகல் ரிபப்ளிகன் கட்சியின்' (Radical Republican Party) தாக்கம் நாயருக்கு இருந்தது. அக்கட்சியின் விதிமுறைகளைப் பின்பற்றியே தன் இயக்கத்தைக் கட்டமைத்தார்.

அதனால்தான் கட்சியின் பெயர் South Indian Liberal Federation என வைக்கப்படலாயிற்று. இதன் தமிழாக்கம் 'தென்னிந்தியர் விடுதலைக் கழகம்' என்றி ருந்திருக்க வேண்டும். ஆனால் 'தென்னிந்திய நல உரிமைச் சங்கம்' என்றே வழங்கப்பட்டு வருகிறது.

தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தைத் தொடங்கு வதென்று முடிவு செய்யப்பட்ட முதல் கூட்டத்திலேயே கட்சிக்கான முதல் பணியாகப் பத்திரிகை தொடங்குவ

தெனத் தீர்மானிக்கப்பட்டது. கட்சி நடத்திய தமிழ் இதழ் 'திராவிடன்'. தெலுங்கு ஏடு 'ஆந்திரப்பிரகாசிகா' இவ்வேடுகளுக்கு, முறையே பக்தவத்சலம் பிள்ளையும், பார்த்தசாரதி நாயுடுவும் ஆசிரியர்களாயிருந்தனர்.

26.2.1917இல் தொடங்கப்பட்ட ஆங்கில ஏடான 'ஜஸ்டிஸ்'க்கு நாயரே ஆசிரியராக இருந்தார். இந்த ஏட்டிற்கான பெயரை நாயர் பிரெஞ்சு நாட்டு ஜியார் ஜியஸ் கிளமென்சோ (Georges Clemenceau 1841-1929) 1880 முதல் நடத்திய 'லா ஜஸ்டிஸ்' (La Justice) என்ற ஏட்டின் பெயரைத் தழுவி அமைத்திருந்தார்.

1881இல் இந்துச் சட்டத்திற்கான தனது பணியில் ஜே.எச். நெல்சன் என்ற ஆங்கிலேயர் பிராமணர், பிராமணரல்லாதார் என்ற பகுப்புசார்ந்த சொற்களைப் பயன்படுத்தியது முதல் 1916ஆம் ஆண்டுவரை பலரும் அச்சொல்லை ஆங்காங்குப் பயன்படுத்தி வந்தனர் என்றாலும் பிரெஞ்சு நாட்டு ராடிக்கல் ரிபப்ளிகன் பார்ட்டி பயன்படுத்திய பிரபுக்கள் அல்லாதார் என்ற சொல்லின் தாக்கமும் சேர்ந்து தான் நாயரிடம் பிராமணரல்லாதார் என்ற அடையாளமாக உறுதிபெற்றது.

1917ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 25ஆம் நாள் நடைபெற்ற தென்னிந்திய நல உரிமைச் சங்கத்தின் முதல் மாநாட்டில் டி.எம். நாயர் அவர்களைப் பற்றி தியாகராயர் தனது தலைமை உரையில்,

"அவர் காட்டிய வழியிலேயே நாம் இப்போது களத்தில் நிற்கிறோம். நாம் நம்முடைய முன்னேற்றப் பாதையில் சென்று ஆற்ற வேண்டிய கடமைகளுக்கும் அவரே தலைவராய் இருந்து வழிகாட்ட வேண்டும்" என்றார்.

நாயர் நீதிக்கட்சியில் எந்தப் பதவியையும் ஏற்றுக் கொள்ளாமல் 24 செயற்குழு உறுப்பினர்களில் ஒருவ ராகத் தன்னை இணைத்துக் கொண்டு கட்சியை வழி நடத்தினார். நீதி (Justice) என்ற ஆங்கில இதழின் ஆசிரியர் பொறுப்பை மட்டும் அவர் ஏற்றுக்கொண்டார்.

"நீதிக்கட்சியின் நோக்கம் பார்ப்பனரல்லாத மக்களைப் பல வகைகளிலும் மேம்பாடுறச் செய்வதே அல்லாமல், பார்ப்பனர்களை வீழ்த்த வேண்டும் என்ப தல்ல. எங்களுக்குச் சமூக நீதி வேண்டும். அதனை நிறைவேற்றுவதற்குரிய அரசியல் உரிமை வேண்டும். பிரிட்டிஷ் அரசு அதற்கு ஏற்றபடி சலுகைகளைப் பெருக்கித் தரவேண்டும். நீதிக்கட்சி இந்தியாவிற்குத் தன்னாட்சி உரிமை கோருகிறது. அதேநேரத்தில் பிற் படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் ஆகியோருக்கு முழு உரிமையும் பாதுகாப்பும் அளிக்கக் கூடியதாக அந்தத் தன்னாட்சி இருக்க வேண்டும். அதுவே எங்கள் குறிக்கோள். இந்தக் குறிக்கோளை இங்கு விளக்கி வருவது போன்றே இங்கிலாந்திலும் கூட்டம் போட்டும், எழுதியும் வருவதற்காகத்தான் நான் ஆண்டுதோறும் தவறாமல் இங்கிலாந்து சென்று வருகிறேன்" என்று கூறினார் டாக்டர் நாயர்.

டாக்டர் நாயர் நீதிக்கட்சிக்கு தாழ்த்தப்பட்ட மக்களின் பேராதரவைத் திரட்டித் தந்ததில் நிகரற்றவராக விளங் கினார்.

இந்நிலையில் சென்னை எழும்பூர் ஏரிக்கரை மைதானத்தில் 1917ஆம் ஆண்டு அக்டோபர் 7ஆம் தேதி நாயரை அழைத்து வந்து பெருவாரியான மக்கள் திரண்ட மாநாடு ஒன்றை சென்னை நகர ஆதிதிரா விடர் அமைப்புகள் நடத்தின. இக்கூட்டம் ஸ்பர்டாங்க் சாலைக் கூட்டம் (The Spur Tank Meeting) என்று அழைக் கப்படுகிறது. பெரும் மக்கள்திரள் என்ற முறையிலும் நாயரின் ஆவேசமான உரை என்ற விதத்திலும் இக் கூட்டம் நீதிக்கட்சி வளர்ச்சியிலும் திராவிட இயக்க வரலாற்றிலும் முக்கிய இடத்தைப் பெறுகிறது.

முதலில் எழும்பூர் ஏரி மைதானத்தில் இம்மாநாடு நடத்துவதற்கு மைதானத்தில் விளையாட வரும் உயர் வகுப்பினர் தடை ஏற்படுத்தினர். அப்போது அத்தடை யை நீக்கி மாநாடு நடப்பதற்கு டி.எம். நாயர் உதவினார்.

மாநாட்டில் பேசிய டி.எம். நாயர் பஞ்சமர்கள் இது போன்று அடக்கப்படுவார்களானால் அதை மீறுவதற் கான வழி வன்முறையற்றதாகவே இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது என்றார். மேலும் நாயர், அம் மக்களை விழித்தெழுந்திடுமாறு வேண்டுகோள் விடுத் தார். அங்ஙனம் எழுந்து நிற்காவிடின் என்றென்றுமாக வீழ்ந்துபோவோம் என்றும் எச்சரித்தார்.

டி.எம். நாயர் அவர்களின் உரை, வரலாற்றுச் சிறப்புமிக்க உரை எனப் பலராலும் புகழ்ந்து பாராட்டப் பட்டது. இந்தக் கூட்டத்தில் பார்ப்பன இளைஞர்கள் சிலர் கலந்துகொண்டு தகராறு செய்தனர். அதன் பின்னர் அவர்கள் விரட்டி அடிக்கப்பட்டுள்ளனர். இது தொடர்பாகப் பாரதியார் தனது கட்டுரையில்,

"சென்னைப் பட்டினத்தில் நாயர் சாதிக் கூட்ட மொன்றில் பறையரைவிட்டு இரண்டு, மூன்று பார்ப் பனர்களை அடிக்கும்படி தூண்டியதாகப் பத்திரிகை களில் வாசித்தோம். இராஜாங்க விஷயமான அபிப்ராய பேதமிருந்து இதை சாதி பேதச் சண்டையுடன் முடிச்சுப் போட்டு அடிதடி வரை கொண்டு வருவோர் இந்த தேசத்தில் இந்து தர்மத்தின் சக்தியை அறியாதவர்கள்" என்றும்,

என்னடா இது இந்து தர்மத்தின் பகிரங்க விரோதிகள் பறையரைக் கொண்டு பிராமணரை அடிக்கும்படி செய்யும் வரை சென்னைப் பட்டணத்து இந்துக்கள் பார்த்துக் கொண்டிருந்தார்களா?

அடே, பார்ப்பானைத் தவிர மற்ற சாதியாரெல் லாம் பறையனை அவமதிப்பாகத்தான் நடத்துகின்றனர்.

அவர்கள் எல்லோரையும் அடிக்கப் பறையரால் முடியுமா? என்று எழுதியிருந்தார். மேலும் நீதிக்கட்சியின் ஒப்பற்ற தலைவர் டி.எம். நாயரை ''இந்து மத விரோதி'' என அடையாளப்படுத்தினார்.

''சாதிகள் இல்லையடி பாப்பா குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்
நீதி உயர்ந்த மதி கல்வி அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்''

என எழுதிய கவி பாரதி சாதியக் கலவரத்தைத் தூண்டும் வகையில் எழுதியிருப்பது காலக் கொடுமையாகும். நடுநிலை தவறிவிட்டார் பாரதி என்றே எண்ணத் தோன்றுகிறது.

இந்நிலையில் 1917ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 20ஆம் நாள், இந்திய அமைச்சர் மாண்டேகு ''இந்திய அரசியல் சீரமைப்பு'' குறித்த ஆணையை வெளியிட்டார். இந்த ஆணையின் நோக்கம் இந்தியருக்குப் 'பொறுப்பாட்சி' தருவதாக இருந்தது. இவ்வாணை வெளியிட்ட பின், இந்தியத் தலைவர்களின் கருத்தறிய மாண்டேகு இந்தியா வந்தார். 17.12.1917இல் மாண்டேகும் இந்திய வைஸ்ராய் செம்ஸ்போர்டும் சென்னை வந்தனர். அவர்களது வருகையையடுத்து தென்னிந்திய நலச் சங்கம், சர். பிட்டி. தியாகராயர் தலைமையில், டாக்டர் நாயர், டாக்டர் நடேசனார் முதலியோருடன் ஒரு குழுவாகச் சென்று, ''பார்ப்பனரல்லாதார்க்குத் தனி வாக்குரிமையுடன் கூடிய அரசியல் சீரமைப்பு தேவை'' என விண்ணப்பம் செய்தனர்.

8.7.1918இல் மாண்டேகு செம்ஸ்போர்டு கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. அதில் நீதிக்கட்சியின் கோரிக்கை ஏற்கப்படவில்லை. மாறாக வகுப்புவாரி உரிமை வழங்க உரிய ஆய்வு நடத்திட 'சவுத்பரோ'வின் தலைமையில் (South Borough) வாக்குரிமைக் குழு (Franchise Committee) அமைக்கப்பட்டது. இக்குழுவில் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கைக்கு எதிரான கருத்துக் கொண்ட வி.எஸ்.சீனிவாச சாஸ்திரியும், சுரேந்திர பானர்ஜியும் உறுப்பினராக அமர்த்தப்பட்டனர்.

சமூக நீதிக்கான வகுப்புவாரி பிரதிநிதித்துவம் மாண்ட்-போர்டு அறிக்கையினால் அடைய இயலாது என்ற நிலையில் நீதிக்கட்சி வாக்குரிமைக் குழுவினை நிராகரித்தது.

மாண்டேகு-செம்ஸ்போர்டு அறிக்கை என்பதனை டாக்டர் நாயர், 'மாண்ட்-போர்டு' அறிக்கை என்று சொல்லாக்கம் செய்து எழுதியும் பேசியும் வந்தார். பின் அனைவரும் அவ்வாறே எழுதியும் பேசியும் வந்தனர்.

சமூக நீதிக்கெதிரான நிலையே வாக்குரிமைக் குழு எடுக்கும் என்பது உள்ளங்கை நெல்லிக்கனி எனத் தெளிவானதால், தாதாபாய் நௌரோஜி இங்கிலாந்தில் அளித்த அறிவுரையின்படி டாக்டர் நாயர் இங்கிலாந்து செல்வதென முடிவெடுத்தார். 31.3.1918 இல் நீதிக்கட்சியின் தஞ்சை மாநாட்டில் டாக்டர் நாயர் தலைமையில் ஒரு குழுவை இங்கிலாந்து அனுப்புவதெனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஆனால் டாக்டர் நாயருக்கு மட்டுமே இங்கிலாந்து செல்ல அனுமதி கிடைத்தது.

19.6.1918இல் இங்கிலாந்து அடைந்த டாக்டர் நாயர் 'லிவர்ப்பூர்' நகரை அடைந்தார். நோய்க்குச் சிகிச்சைப் பெற அனுமதி பெற்றுவந்த டாக்டர் நாயர், இங்கிலாந்தில் இருக்கும்வரை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடக் கூடாது என்ற தடை விதிக்கப்பட்டிருந்தார். எனினும் சிறிதும் மனந்தளராமல் தனது இங்கிலாந்து நாட்டு நண்பர்களிடம் தான் வந்த நோக்கத்தை எடுத்துக் கூறினார்.

அவரது நண்பர்கள் 'லார்டு லே மிங்டன்', 'லார்டு செல்போன்' இருவரும் டாக்டர் நாயருக்கு விதித்தத் தடை அநீதியானது என்றும், அதனை விலக்கிக் கொள்ள வேண்டும் என்றும் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் பேசினார்கள். லார்டு சைடன்காம், டாக்டர் நாயரின் தன்னலமற்ற சேவையைப் பாராட்டினார். பாட்டாளி மக்களின் குறைகளையும், அவர்களின் உரிமைக்கான போராட்டங்களையும், எடுத்துரைக்கவல்ல ஒரே இந்தியர் டாக்டர் நாயர் என்றும் கூறி, அவருக்கு விதிக்கப்பட்ட வாய்ப்பூட்டினை நீக்குவதோடு அவரை நாடாளுமன்றத்தில் உரையாற்ற அனுமதிக்க வேண்டும் என்றும் வலியுறுத்திப் பேசினார். அதன் பின்னர் நாயருக்கு விதிக்கப்பட்ட தடை விலக்கப்பட்டது.

டாக்டர் நாயர் 1918 அக்டோபர் 2ஆம் நாள் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் உரையாற்றினார். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் இல்லாத அரசியல் சீர்திருத்தம் தோல்வியையே தழுவும் என்றார். 1909இல் இஸ்லாமியருக்கு வழங்கப்பட்டதைப் போலவே பிராமணரல்லாதாருக்கும் வகுப்புவாரி இட ஒதுக்கீடு வழங்கப்பட வேண்டும் என்றும் பேசினார். மேலும் இந்தியாவில் மதத்தின் பேராலும், சாதியின் பேராலும் நடைபெறும் கொடுமைகளைப் பற்றியும் பேசினார்.

இதன்பின் நடைபெற்ற நாடாளுமன்றக் கூட்டங்களில் பிராமணரல்லாதாரின் வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கோரிக்கை விவாதங்களில் இடம்பெற்றது. பிரிட்டிஷ் இதழ்களில் நீதிக்கட்சியின் கொள்கை முழக்கங்கள் இடம்பெற்றன. பிரிட்டிஷ் மக்களின் கவனத்தையும் அவை கவர்ந்தன.

இவ்வாறு இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் ஆதரவையும், மக்களின் ஆதரவையும் பெற்றுக்கொண்டு, 1919 சனவரி 7இல் டாக்டர் நாயர் வெற்றிப் பெருமிதத்துடன் சென்னை வந்தடைந்த பிறகு 'சவுத்பரோ

குழு' அறிக்கையை வெளியிட்டது. அதில் பிராமணரல் லாதாருக்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமை வழங் கப்படவில்லை.

ஆதலால், நீதிக்கட்சி மீண்டும் டாக்டர் நாயர் தலைமையில் ஒரு குழுவை இங்கிலாந்துக்கு அனுப்பத் தீர்மானித்தது. டாக்டர் நாயர் நீரிழிவு நோயினால் மிகவும் நலிவுற்றிருந்தார். தன் நலிவுற்ற உடல் நிலையைப் பற்றிச் சிந்தியாது, பிராமணரல்லாதாரின் நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு, 1919 மே 6ஆம் தேதி மீண்டும் இங்கிலாந்துக்குப் பயணமா னார். சூன் 19ஆம் தேதி இங்கிலாந்தை அடைந்தார். இங்கிலாந்தில் அவர் உடல்நிலை கவலைக்கிடமாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். நாடாளுமன்றக் கூட்டுக்குழுவின் தலைவர் லார்டு செல்போர்ன் அவர் களிடம் சூலை 18ஆம் தேதி நாயரின் சாட்சியத்தைப் பதிவு செய்ய ஏற்பாடாகி இருந்தது. ஆனால் டாக்டர் நாயர் சூலை 17ஆம் தேதி காலை 5 மணி அளவில் இயற்கை எய்தினார். அவரது உடல் 'கோல்டன் கிரீன்' என்ற இடத்திற்கு ஊர்வலமாக எடுத்துச்சென்று இந்திய முறைப்படி எரியூட்டப்பட்டது. இறுதிப் பயணத்தில் நீதிக் கட்சித் தலைவர்களும் அவரது ஐரோப்பிய நண்பர் களும் கலந்துகொண்டனர். அப்போது இங்கிலாந்தில் இருந்த மற்ற அரசியல் கட்சித் தலைவர்கள் எவரும் பங்கேற்கவில்லை. டாக்டர் நாயரின் இணைபிரியா நண்பர் என்று அறியப்பட 'இந்து' கஸ்தூரி ரங்க ஐயங்கார் கூட கலந்து கொள்ளவில்லை.

''போராட்டத்தைத் தொடங்கி அப்போராட்டக் களத் திலேயே உயிரைத் துறந்தார்''. காலம் தந்த மகத்தான தலைவன். அவர் நினைவைப் போற்றி அவர் கொண்ட கொள்கைகளை ஏற்று அவர் வழி நடப்போம். வாழ்க அவர் புகழ்!

17.7.2017 அன்று டாக்டர் நாயர் நினைவு நாள்.

## டாக்டர் நாயர் நினைவைப் போற்றி




இந்திய அரசு 17.9.2008ஆம் ஆண்டு டாக்டர் நாயரைப் போற்றி நினைவு அஞ்சல் தலை வெளியிட்டது. முன்னாள் நடுவண் அமைச்சர் ஆ.ராசா முயற்சியினால் அஞ்சல் தலை வெளியிடப்பட்டது.

டாக்டர் நாயர் இருந்து மருத்துவம் புரிந்த சாலை, டாக்டர் நாயர் சாலை என்று அவரது நினைவாக அழைக்கப்படு கிறது. இச்சாலை தியாகராய நகரையும் பாண்டியனார் அங்காடியையும் (பாண்டி பஜாரையும்) இணைக்கும் முக்கியச் சாலையாகும். பாண்டியனார் என்பது W.P.A. சௌந்திரபாண்டியன் என்ற சுயமரியாதை இயக்கத் தலைவரைக் குறிப்பதாகும்.

## மாணவர் இல்லத்தில் இலவச சேர்க்கை

சென்னை, தண்டையார்பேட்டை (மணி கூண்டு அருகில்) எண்,19, இரத்தின சபாபதி தெருவில் உள்ள ஆதிதிராவிட மாணவர் இல் லத்தில் 4ஆம் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்க ஆதிதிராவிட, பிற்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் ஆதரவற்ற மாண வர்கள் 01.06.2017-லிருந்து இலவசமாக சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இதற்கான சேர்க்கைப் படிவம் 15.05.2017 முதல் வழங்கப்படுகிறது. மாணவர்கள் சேர விருப்பம் உள்ளவர்கள் வட்டாட்சியரிடம் பெறப் பட்ட அசல் சாதிச்சான்று மற்றும் வருமானச் சான்றும், மேலும் இறுதியாகப் பயின்ற கல்விச் சான்றுடன் வரும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறது. மாணவர்களுக்கு இலவசக் கணினி பயிற்சி மையம் இவ்வாண்டு முதல் தொடங் கப்படுகிறது.

## மடல் பகுதி

மதிப்புமிக்க அய்யா,

வணக்கம். பெரியாரியல் பேரறிஞராகிய தாங்கள் 21.6.2017 புதன்கிழமை அன்று 92 முடித்து 93ஆம் அகவையில் நுழையும் நல் வாய்ப்பினைப் பெற்றமைக்காக எனது மகிழ்ச் சியையும் நல்விருப்பங்களையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன். பெரியாரின் விரி வான வரலாற்றை எழுதி முடித்திட அன்று முதல் நீண்ட பயணங்களை நிறுத்திவிட தாங்கள் எடுத்த முடிவு சரியானது. தற்போ தைய நிலையில் மற்றெந்த பணிகளையும் விட பெரியாரின் விரிவான வாழ்க்கை வர லாற்றைத் தங்கள் வாயிலாக எழுதி முடிப்பதே முதன்மையான தேவை என்பதில் அய்ய மில்லை. தங்கள் பணி சிறக்க எனது நல் விருப்பங்களை மீண்டும் தெரிவித்துக் கொள் கிறேன்.

- **பெ. மருதவாணன்,** தஞ்சாவூர்

# இராசேந்திரன்-மேகலா இல்லத்தை சீனந்தல் அடிகளார் திறந்துவைத்தார்



திருவள்ளுவராண்டு 2048 ஆனித் திங்கள் 7ஆம் நாள் (21.6.2017) காலை வேலூர் மாவட்டம் திருவலம் அஞ்சல் நரசிங்கபுரம் பாவேந்தர் தெருவில் வே. இராசேந்திரன்-மேகலா இணையரின் உழைப்பின் அடையாளமாக உருவாகியுள்ள புதுக் குடில் புகுவிழா நிகழ்வோடு அவ்விணையரின் 30 ஆண்டு வாழ்க்கைப் பயணத்தைப் பொருள்பொதிந்ததாகவும் சமூகத்திற்குப் பயனுள்ள வகையிலும் வெற்றிகரமாகக் கடந்து வந்ததைக் கொண்டாடும் நிகழ்வாகவும், குடும்பப் பெருமகிழ்வின் அடையாளமாக வளர்ந்து நிற்கும் மகள் வயிற்றுப் பெயரனின் ஓராண்டு நிறைவு நாள் நிகழ்வையும், அறிவையும் நேசத்தையும் விரிவுபடுத்த ஒவ்வொரு இல்லமும் நூலகமாக இயங்க வேண்டும் என்ற நோக்கில் நூலகத் திறப்புவிழாவையும், பேரறிஞர் வே. ஆனைமுத்து அவர்களின் 93ஆவது அகவை பிறந்த நாள் விழாவையும் உறவுகளோடும், நெருக்கமான நட்புகளோடும் பகிர்ந்து கொள்ளும் சிறிய நிகழ்வு நடைபெற்றது. நிகழ்ச்சியில் வே. ஆனைமுத்து கலந்துகொண்டு தலைமை ஏற்பதாக இருந்தது உடல்நலக்குறைவு காரணமாக அவர் வர இயலாத நிலையில் கலச. இராமலிங்கம் தலைமையில் நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆதிசிவலிங்காச்சாரிய பீடத்தின் 64ஆவது குரு சிவசண்முக ஞானாச்சாரிய சுவாமிகள் எனும் சீனந்தல் அடிகள் புதுக்குடிலைத் திறந்து வாழ்த்துரை நிகழ்த்தினார். இந்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறையின் சென்னை மண்டல கள அலுவலர் மா. அண்ணாதுரை நூலகத்தை திறந்து வைப்பதாக இருந்தது. முக்கியமான அரசு அலுவலலின் காரணமாக அவர்வர இயலாத நிலையில் அவரின் சார்பாக கு. விசயகுமார் நூலகத்தைத் திறந்து சிறப்பித்தார். முன்னதாக அடிகளார் இராசேந்திரனின் பெற்றோர் வேடியப்பன்-இலக்குமி இணையருக்குச் சால்வை அணிவித்துச் சிறப்பித்தார். வே. இராசேந்திரன் - மேகலா இணையர் நன்றி கூறினர். கலசம் இயற்றிய கீழ்க்கண்ட பாடலை வாழ்வியல் உறுதிமொழியாக எடுத்துக் கொண்ட வே. இராசேந்திரன் - மேகலா இணையர் அதைக் கல்வெட்டிலும் செதுக்கி வைத்துள்ளனர். வாழ்வோம்! செழிப்போம்!

அன்பும் அறிவும் உழைப்பும் ஓய்வும்
நன்றெனக் கொண்டு நற்பொருள் ஈட்டி
எளிமை சிக்கனம் இவற்றுடன் வாழ்வோம்!
அறவழி ஈட்டிய பொருளை நாளும்
திறம்படக் காத்துத் துய்த்து மகிழ்வோம்!
தாய்மொழி பேணியும். தன்மானம் போற்றியும்
வாய்மை வாழ்வில் வாழ்ந்திட நிலைப்போம்!
சிந்தனை நேரம் உழைப்பு பொருளெனத் தந்து பிறர்க்கு உதவியும் செழிப்போம்!

செய்தி : **கலசம்**

## வாழ்க்கை ஒப்பந்த விழாக்கள்



### கோ.கதிரவன் - த.திவ்யா



தோழர் து.தில்லைவனம்-தி.தில்லைநாயகி பெயரனும், திட்டக்குடி க.கோவிந்தராசு-தி.முத்தொளி இணையரின் மகனுமாகிய பொறியாளர் கோ.கதிரவன்; காட்டுமன்னார் கோயில் இராயநல்லூர் பொறியாளர்.இரா.தமிழழகன்-அன்புச்செல்வி இணையரின் இளைய மகள்,த.திவ்யா ஆகியோரின் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா, திட்டக்குடி சொர்ணம் ஆறுமுகம் திருமண மண்டபத்தில், 26-6-2017 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் மா.பெ.பொ.க.பொதுச்செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்தார். விழாவில் மேனாள் தமிழ்நாட்டு அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர் செல்வம், திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் வெ.கணேசன், புலவர் வை.இளவரசன், ப.இராசாராமன், த.சுப்பிரமணியன், சி.பெரியசாமி, அ.எழிலன்பன், கவிஞர் இரா.சிவஞானம், வழக்குரைஞர் அ.பழநியாண்டி, துரை.இராதா கிருட்டிணன், முனைவர் கோ.இளவழகன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். விழாவில் தி.துரைசித் தார்த்தன் வரவேற்புரையும், இரா.தமிழழகன் நன்றி யுரையும் ஆற்றினார்கள். மணமக்கள் சார்பாக, சிந்தனையாளன் புரவலர் கட்டணமாக ரூபாய் அய்யா யிரம் வழங்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### வ.வெங்கடேசன் - ப.லோகநாயகி (எ) கலைவாணி

காஞ்சிபுரம் டி. வரதன்-பச்சையம்மாள் இணையரின் மகன் வ. வெங்கடேசனுக்கும், வேலூர் மாவட்டம், ஆழ்வார்தாங்கள் ந. பழனி-இராணி இணையரின் மகள் ப.லோகநாயகி (எ) கலைவாணிக்கும் 4.6.2017 ஞாயிறு காலை 7 மணிக்கு காஞ்சிபுரம் டி.எஸ்.பி. திருமண மண்டபத்தில் தமிழ்த் திருமணம் நடை பெற்றது. டாக்டர் விமுனாமூர்த்தி, புஞ்சை பூ. வில்ல வன், சி.வி.எம்.பி. எழிலரசன், ச.ம.உ., டி.ஏ.ஜி. அசோகன், சி. நடராசன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

### செ.இராசேந்திரபிரசாத் ஆர்.பாக்கியவள்ளி



வேலூர் மாவட்டம் ஆற்காடு, நினைவில் வாழும் கி.கணேச நாயகர்-தனலட்சுமி ஆகியோரின் பெயரனும் க.நா.செயமூர்த்தி-தேன்மொழி இணையரின் மகன் செ.இராசேந்திரபிரசாத் கடலூர் மாவட்டம், பண்ருட்டி வட்டம், எனதிரி மங்கலம் கிராமம், நினைவில் வாழும் சின்னசாமி-கண்ணம்மாள் ஆகியோரின் பெயர்த்தியும் சி.அரங்கநாதன்-இலட்சுமி இணையரின் இளைய மகள் ஆர்.பாக்கியவள்ளி ஆகியோரின் திருமணம் திருவள்ளுர் ஆண்டு 2048 ஆடவைத் திங்கள் 11 ஆம் நாள் (25-6-2017) ஞாயிறு காலை 8 மணிக்கு, இராணிப் பேட்டை பாரத மிகுமின் நிறுவன பெல் திருமண மண்ட பத்தில் நடைபெற்றது. புலவர் அ.க.கண்ணன் முன்னிலை வகித்தார். இத்திருமண நிகழ்ச்சிக்கு அனைத்திந்திய பிற்படுத்தப்பட்டோர், பட்டியல் வகுப்பினர், பழங்குடியினர் மதச் சிறுபான்மையினர் பேரவையில் புரவலர்-தலைவர் வே.ஆனைமுத்து அவர்கள் தலைமை வகித்து நடத்தி வைத்தார். இந்நிகழ்வில் மணமக்களை வாழ்த்தி பல தோழர்கள் உரையாற்றினர். மணமக்கள் சிந்தனை யாளன் புரவலர் கட்டணம் உருவா 5000/- அளித்தனர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

### சே.சக்திதரன் - ஆர்.எழிலரசி



நினைவில் வாழும் டாக்டர் பி.பழனியப்பன்-நலமுடன் பி.கே.இலட்சுமி அவர்களின் பேரனும்

ப.சேரலாதன் - சே.செல்லக்கண்ணு இணையரின் மகன் சே.சக்திதரன், நினைவில் வாழும் து.சுந்தரேசன்-மருதம்மாள் அவர்களின் பேத்தியும் எஸ்.இராமச்சந்திரன்-பன்னீர்செல்வி இணையரின் மகள் இரா.எழிலரசி ஆகியோரின் திருமணம் சென்னை, வேப்பேரி, பெரியார் திடலில் 30.6.2017 அன்று காலை 6 மணிக்கு தமிழ் முறைப்படி நடைபெற்றது. இத்திருமண வரவேற்பில் மா.பெ.பொ.க. தோழர்கள் வே.ஆனைமுத்து, துரை கலையரசு, கலச இராமலிங்கம், ப.வடிவேலு, தாம்பரம் ம.சுப்பிரமணி, முருகவேல் ஆகியோர் கலந்து கொண்டனர். மணமக்கள் சிந்தனையாளன் வளர்ச்சி நிதியாக ரூ.2000 வழங்கினர்.

❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖❖

**பா.விடுதலை விரும்பி - இரா.சந்தியா**

பெரியார் கொள்கை பிரச்சாரகரும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் மாநில மதியுரைக்குழு உறுப்பினருமான தோழர் மு.பாலகுருசாமி-நா.கலையரசி ஆகியோரின் மூத்த மகன் மருத்துவர் பா.விடுதலை விரும்பிக்கும் திட்டக்குடி வட்டம் கொரக்கவாடி சேர்ந்த நினைவில் வாழும் பா.இராமசாமி-அம்சவள்ளி ஆகியோரின் மகள் மருத்துவர் இரா.சத்தியாவுக்கும் வாழ்க்கைத் துணை நல ஒப்பந்த விழா கடலூர் மாவட்டம் சேத்தியாத்தோப்பு கே.பி.டி திருமண மண்டபத்தில் 16.06.2017 வெள்ளிக்கிழமை காலை சிறப்பாக நடைபெற்றது. தோழர் மு.பாலகுருசாமி வரவேற்புரை ஆற்றினார். தோழர் வே.ஆனைமுத்து தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்தார்கள். மேலும் தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் தலைவர் தோழர் தி.வேல்முருகன், ம.தி.மு.க. தலைமை நிலைய செயலாளர் ஆ.வந்தியத்தேவன், மா.பெ.பொ.க. கடலூர் மாவட்டச் செயலாளர் தோழர் பா.மோகன், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் தோழர் தி.துரைசித்தார்த்தன் த.வா.க. தலைமை நிலைய செயலாளர் கனல் உ.கண்ணன் ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களுக்கு வாழ்த்துரை வழங்கினார்.

# மா.பெ.பொ.க. சார்பில் இந்தி, சமற்கிருத திணிப்பை எதிர்த்துக் கண்டன ஆர்ப்பாட்டம்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் இந்தி, சமற்கிருதத் திணிப்பைக் கண்டித்துக் கண்டன ஆர்ப்பாட்டம் 12.6.2017 திங்கள் காலை 10 மணிக்கு சென்னை, சேப்பாக்கம் விருந்தினர் மாளிகை அருகில் சென்னை மாவட்டச் செயலாளர் வாலாசா வல்லவன் தலைமையில் நடைபெற்றது. இந்தி, சமற்கிருதத்தை திணிக்கும் நடுவண் அரசைக் கண்டித்து முழக்கங்கள் எழுப்பப்பட்டன.

மா.பெ.பொ.க. மாவட்டச் செயலாளர்கள் சி. நடராசன், மோ.சி. சங்கர், பா. மோகன், இரா. கலியபெருமாள், இரா. கலியமூர்த்தி, ம. நாராயணசாமி ஆகியோரும் துணைப் பொதுச் செயலாளர்கள் சி. பெரியசாமி, துரை. சித்தார்த்தன் தொழிலாளர் அணிச் செயலாளர் சா.குப்பன், வேளாண் அணி துணைச் செயலாளர் கோ. கோதண்டராமன், உயர்நீதிமன்ற வழக்குரைஞர் விசயராகவன் ஆகியோரும் தோழமை அமைப்பினர், சின்னப்பா தமிழர், காஞ்சி அமுதன், கரு. அண்ணாமலை, தி.ச. குணசேகரன், உமாபதி, புலவர் கி.த. பச்சையப்பன் உள்ளிட்டோரும் கலந்து கொண்டு கண்டன உரையாற்றினர்.

மா.பெ.பொ.க. தலைமைக் குழு உறுப்பினர் க. முகிலன், பொதுச் செயலாளர் வே. ஆனைமுத்து ஆகியோர் கண்டன உரை நிகழ்த்தினர். தோழமை அமைப்பினரும் திரளாகக் கலந்து கொண்டனர். ப.வடிவேலு நன்றியுரையுடன் பகல் 1.30 மணிக்கு ஆர்ப்பாட்டம் நிறைவுபெற்றது.

# கல்விக் கொள்ளை

தமிழகத்தில் வாய்கிழியப் பேசும் அரசியல்வாதிகள் நடத்தும் கல்விக் கொள்ளை பினாமி நிறுவனங்கள் அதிகரித்து விட்டன. ஏழை மக்களுக்குக் கல்வி என்பது எட்டாக்கனியாக உள்ளது. வேலியே பயிரை மேய்வது போல் எந்த ஒரு அரசும் அதிரடியாக அனைத்துக் கல்வி நிறுவனங்களையும் கைப்பற்றி அரசே நடத்த முன் வரவில்லை. காரணம், பாதிக்கப்படுபவர்கள் பொது மக்கள் என்பதால் எப்படிப்போனால் என்ன என்று கண்டு கொள்ளாமல் உள்ளனர் அரசியல்வாதிகள்.

ஒவ்வொரு குடும்பத்திலும் பிள்ளைகளின் கல்விக்குச் செலுத்தும் கட்டணத்தைப் பார்த்தால் உழைத்துச் சேமித்த தொகை முழுவதும் கல்விக்கே செலவு செய்ய வேண்டியுள்ளது. பட்ட கடனுக்காகக் கிடைத்த சம்பளத் துக்கு வேலை செய்ய வேண்டியுள்ளது.

மழலையர் பள்ளிகள் (Pre Kg.) ஒரு குழந்தைக்கு ரூ.20,000 முதல் ரூ.1,00,000 வரை கட்டணமாக பில் போடாமல் வசூலிக்கின்றனர். 3 வயது குழந்தைக்கு L.K.G. and U.K.G. கட்டணமாக ஆண்டுக்கு ரூ.30,000 முதல் ரூ.1,00,000 வரை வசூல் செய்கின்றனர். 5 வயது குழந்தைக்கு முதல் வகுப்பு முதல் 12ஆம் வகுப்பு வரை மொத்தச் செலவாக ரூ.12 இலட்சம் முதல் ரூ.20 இலட்சம் வரை ஆகிறது.

ஒரு வகுப்பில் 40 முதல் 50 மாணவர்கள் உள்ளனர். முதல் வகுப்பு என்றால் 3 முதல் 5 பிரிவுகள் உள்ளன. இப்படிக் கட்டணம் கட்டிப் படிக்கும் பெரும்பாலான மாணவர்களுக்குத் தரமான கல்வி கற்பிக்கப்படுவதில்லை. காரணம், குறைந்த சம்பளத்தில் தரமற்ற ஆசிரியர்களைக் கொண்டு நடத்துவதால் இப்படி நேர்ந்துள்ளது.

பிள்ளைகளுக்குப் பதிலாகப் பெற்றோர்கள் படிக்க வேண்டும். பெற்றோர்களின் எதிர்காலக் கனவுகளைக் கல்விக் கொள்ளையர்கள் தகர்த்துவிடுகின்றனர். தாய்மொழி வழியில் கற்பதுதான் தலைசிறந்த கல்வி. பிறமொழிகளைத் தேவைக்குப் படித்துக் கொள்ளலாம்; திணிக்கக்கூடாது.

சமச்சீர் கல்வி, அனைத்துக் கல்வியும் அரசே ஏற்று நடத்த வேண்டும். தனியாரிடம் கல்வி நிறுவனங்களைக் கொடுத்துள்ள அரசு கையாலாகாத அரசாகும். மாணவர் களுக்குத் தேவையான அளவுக்குக் கணினி வகுப்பு, விளையாட்டு வகுப்பு, பயிற்சிக் கூடங்கள், தரமான ஆசிரியர்கள், போதிய அளவு வகுப்பறைகள், கட்டடங் கள் அரசே கொடுக்க வேண்டும். கொடுக்கத் தவறும் அரசு மக்கள் விரோத அரசேயாகும். வாக்குக் கேட்க வரும் அரசியல்வாதிகளை விரட்டியடியுங்கள்.

**- உழவர் மகன் ப.வ.**

## சிந்தனையாளன் வளர்ச்சி நிதி சூலை-2017

| | | |
|---|---|---|
| **வி.எஸ். சானகிராமன்** | மறைமலைநகர் | 2000/- |
| **துரை சித்தார்த்தன்** | காட்டுமன்னார்கோயில் | 1000/- |
| **இரா. குப்புசாமி** | கரூர் | 1000/- |
| **க. ஆதிமூலம்** | கீழ்பென்னத்தூர் | 1000/- |
| **ரங்கநாதன்** | தாம்பரம், சென்னை | 1000/- |
| முனைவர் **அ. ஆறுமுகம்** | திருமழபாடி | 500/- |
| **தமிழேந்தி** | அரக்கோணம் | 500/- |
| **இரா.பச்சமலை** | சென்னை | 500/- |
| பாவலர் **வையவன்** | திருவண்ணாமலை | 500/- |
| **தமிழ்நாடன்** | குவைத் | 500/- |
| **பகுத்தறிவாளன்** | திருப்பத்தூர் | 250/- |
| **மோ.சி. சங்கர்** | வேலூர் | 200/- |
| **கி. இராமச்சந்திரன்-மேகலா** | வாலாசாபேட்டை | 200/- |
| **ப.வெங்கடேசன்-அரங்கமணிமொழி** | வாலாசாபேட்டை | 200/- |
| பேரா. **ச.பொ.சீனிவாசன்** | மூணாறு | 200/- |
| **மரு. வசந்தா மதியழகன்** | அரியலூர் | 200/- |
| **இளவரசன்,** தமிழ்க்களம் | அரியலூர் | 200/- |
| **சி. இலக்கியா** | சென்னை | 100/- |
| **அ. லயா** | கிழக்கு லண்டன் | 100/- |
| **சி. அகிலா** | சென்னை | 100/- |
| திருமதி. **சகுந்தலா குப்புசாமி** | சிறுநாத்தூர் | 100/- |
| செண்ட்ரிங் **இரா.ப. கோவிந்தன்** | தாம்பரம் | 100/- |
| **மா. சுப்பிரமணி - கஸ்தூரி** | தாம்பரம் | 100/- |
| **நா. மதனகவி** | வாணியம்பாடி | 100/- |
| **இ. கபிலன்** | சிதம்பரம் | 100/- |
| **மு.செயபால்** வழக்குரைஞர் | திருவண்ணாமலை | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | 100/- |
| **கோ.நக்கீரன்** | சோளிங்கபுரம் | 100/- |
| **க.பிரபாகரன்** | தஞ்சாவூர் | 100/- |

## மா.பெ.பொ.க. வளர்ச்சி நிதி - சூலை-2017

| | | | |
|---|---|---|---|
| புலவர் **இரா.கலியமூர்த்தி** | சிறுகடம்பூர் | .... | 100/- |
| **பொ.சுப்பிரமணியன்** | கீழ்பென்னாத்தூர் | .... | 100/- |
| **முத்து அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அழகு அன்பழகன்** | சீர்காழி | .... | 100/- |
| **அறிவுக்கடல் ராஜ்குமார்** | சிதம்பரம் | .... | 100/- |
| **க. நாகராசன்** | ஆவடி | .... | 100/- |

**மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சிக்காக** வெளிடுபவர், ஆசிரியர் **வே.ஆனைமுத்து,**
2ஆ/85, கே.எஸ்.ஆர்.நகர், எம்.டபிள்யூ.பி. 2ஆம் குறுக்குத் தெரு, அம்பத்தூர், சென்னை - 53.
அச்சிட்டோர் : **பெரியார் அச்சிடுவோர் வெளியிடுவோர் குழுமம்,** சென்னை-53. ☎ : 044-2625 2119